# Guruji A. S. Raghavan Centenary Souvenir

# குருஜி ஏ. எஸ். ராகவன் நூற்றாண்டு விழாமலர்

Vol: 1






Thiruppugazh Anbargal
திருப்புகழ் அன்பர்கள்


THIRUPPUGAZH ANBARGAL (REGD)
DELHI
பூஜ்யஸ்ரீ குருஜி ஆ.சு.ராகவன் நூற்றாண்டு விழா
செப்டம்பர் 2026 முதல் செப்டம்பர் 2028 வரை
குருஜியின் நூற்றாண்டு விழா இந்தியாவிலும்,
வெளிநாடுகளிலும், திருப்புகழ் அன்பர்களால்
விமரிசையாகக் கொண்டாடப்பட உள்ளது.
விழா விவரங்கள் தொடர்கின்றன.
"பெருத்த பாருளீர், நீங்கள் வாருமே!"


THIRUPPUGAZH ANBARGAL (REGD)
DELHI
பூஜ்யஸ்ரீ குருஜி ஆ.சு. ராகவன் அவர்களின்
நூற்றாண்டு விழா நிகழ்ச்சி விவரங்கள்
தொடக்க விழா - செப்டம்பர் 2026 - தில்லி
டிசம்பர் 2026 - பெங்களூரு
டிசம்பர் 2026 -கும்பகோணம்
பிப்ரவரி 2027 - மும்பை
பிப்ரவரி 2027 - துபாய்
மே 2027 - கனடா
ஜூலை 2027 - கோவை
ஜூலை 2027 - USA
ஆகஸ்ட் 2027 - சென்னை
செப்டம்பர் 2027 - சிங்கப்பூர்
செப்டம்பர் 2027 - மலேசியா
டிசம்பர் 2027 - சென்னை
டிசம்பர் 2027 -ஹைதராபாத்
பிப்ரவரி 2028 - புனே
ஜூலை 2028 - USA
2028 - காஞ்சி மடம்
2028 - சிருங்கேரிமடம்
2028- லண்டன்
குருஜிஅவர்களின் நூறாவது பிறந்த நாள் விழா -
செப்டம்பர் 2028 - பெங்களூரு

# e-Souvenir

## ‘திருப்புகழ் களஞ்சியம்’

**Vol – 1**

**6th September 2026**

**Delhi**



## ஓம் முருகா

## குருஜி நூற்றாண்டு மலர் 2026

நம் குருஜியின் நூற்றாண்டு விழா உலகெங்கும் 2026ம் ஆண்டு முதல் 2028 வரை விமரிசையாகக் கொண்டாடப்படும் தருணம் இது. திருப்புகழ் பாடல்களுக்கு முருகன் அருளோடு குருஜி அவர்கள் ராக தாளங்கள் அமைத்து, நமக்குக் கற்பித்துள்ளார். குருஜியுடனும் திருப்புகழுடனும் இந்த அரிய பயணத்தின் போது நமக்கு இனிய தாக்கங்கள் இருந்திருக்கும். அந்த எண்ணங்களை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள அன்பர்களுக்கு ஆவல் இருக்கும்.

அதற்காக அறிவித்த போது, அன்பர்கள் உற்சாகத்துடன் தங்கள் எண்ணங்களை எழுத்தினில் வடித்து அனுப்பியுள்ளனர். அந்தப் படைப்புகள் வலம் வரும் ஒரு மேடையாக இந்த இணைய நினைவு மலர் திகழும். தேர்ந்தெடுத்த 18 படைப்புகளைத் தாங்கி, நினைவு மலரின் முதல் இதழ், நூற்றாண்டு விழாவின் ஆரம்ப விழா புதுதில்லியில் நடைபெறும் நாளில் வெளியிடப்பெறுகிறது.

அந்தப் படைப்பின் ஒலிவடிவமும் கேட்க வசதியாக சுட்டு (Link) உள்ளது. அன்பர்கள் படிக்கவும், ஒலி வடிவில் கேட்கவும் இயலும்,

இரண்டு ஆண்டு நடக்கும் நூற்றாண்டு விழாக்களின் போது அன்பர்களின் மேலும் பல படைப்புகளைத் தாங்கி நினைவு மலர் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. அன்பர்கள் தங்களது நினைவலைகளையும், அனுபவங்களயும் எழுத்து வடிவில் பகிரவேண்டும். அவற்றில் தேர்ந்தெடுத்த படைப்புகள் வரும் நாட்களில் நினைவு மலரில் வெளியிட எண்ணியுள்ளோம். படித்துப் பயன் பெறுமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

**The Centenary functions of our Guruji is being conducted across the globe from 2026 to 2028. Guruji, with Blessings of Chendilandavan, has set Ragam Thalam to Thiruppugazh songs and taught us with love and affection. We carry a lot of good experiences with Guruji as well as about Thiruppugazh songs. Anbargal would also share such divine thoughts with other Anbargal. 'Guruji nutrandu malar' is an humble attempt to present such thoughts by publishing a souvenir on the occasion of Inaugural function in September 2026.**

**The anbargal responded with enthusiasm when the announcement about inviting articles was made. This edition of e-Souvenir carries selected 18 articles penned by anbargal from India and abroad. To facilitate the anbargal to listen to these articles, link is also provided for the audio version of each article.**

**From now till Sep 2028, further editions of the e-souvenir is planned to be released progressively. Anbargal are requested to send further articles with the same enthusiasm. Happy reading !**

Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

உ

Contact : 044-27222115
Cell : 9445421115

II Sri Chandramouleeswaraya Nama: ||
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

**JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL**

**Srimatam Samsthanam**

**No. 1, Salai Street, Kancheepuram - 631 502, Tamilnadu State, INDIA.**

*10 – 06 – 2026*

*ஶாங்கர ஸம்வத்ஸரம்: 2535*

*யாத்ரா ஸ்தானம்: ஸ்ரீமடம், காஞ்சிபுரம்*

## ஆசிச்செய்தி

பகவானுடைய திருப்புகழைப் பாடுவதற்கு ஸ்தோத்ரம் என்று பெயர். அப்படி ஸ்ரீமுருகப்பெருமானின் புகழை எல்லாம் சந்த லயத்தோடு திருப்புகழ் என்றே பாடியருளினார் அருணகிரிநாதர். மணிப்ரவாளமாக ப்ரவாஹமாக திகழும் இந்தத் திருப்புகழ் சொல்வோர்க்கும் கேட்போர்க்கும் கண்ணீர் உருக்கச் செய்யும் படி பக்தியிழையோடித் திகழும் ஸ்தோத்ர ரத்னம். எல்லாப் தெய்வங்களின் புராணச் செய்திகளையும் பாடி ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியோடு தொடர்பு படுத்தி நெக்குருக அவர் பாடிய பாடல்கள் அனைவருக்கும் பக்தியை ஊட்டுபவை. இந்தத் திருப்புகழை ஆ.க. ராகவன் அவர்கள் தனது வாழ்நாளையெல்லாம் தந்து பரப்பி திருப்புகழ் இசைவழிபாடாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் உருவாக்கித் தந்தது பக்திவழிக்கும் ஸனாதன தர்மத்திற்கும் செய்த பெருந்தொண்டு. இன்று பல்வேறு நாடுகளிலும் அவருடைய மாணவர்கள் பாராயணம் செய்து வருகிறார்கள்.

அத்தகைய மஹனீயருடைய நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற இருப்பதையும் அதற்காக ஒரு சிறப்பிதழ் வெளியிட இருப்பதையும் அறிந்து ஸ்ரீஶங்கர பகவஹ்பாத பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞ பீடம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். ஸ்ரீமஹாத்ரிபுர ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர ஸ்வாமியின் அ்பார கருணையினால் இந்த வைபவம் மிகச் சிறப்பாக நிறைவேறட்டும் என்றும், திருப்புகழ் இசை வழிபாடு மூலமாக அன்பர்கள் அனைவரும் ஸ்ரீமுருகப்பெருமானின் அருளுக்கு பாத்ரர்களாகட்டும் என்றும் ஆசிர்வதித்தார்கள் என்ற விவரம் தங்களுக்குத் தெரிவிக்கலான கார்யம்.

For **Sri Kanchi Kamakoti Peetam,**
**Srimatam Samsthanam**

MANAGER

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी
**Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam**
**Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.**

Ref :                                                                 Date :

**தக்ஷிணாம்நாய சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடாதீச்வர**
**ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் கரகமல ஸஞ்ஜாத**
**ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின்**
**அனுக்கிரஹ ஸந்தேசம்**

பரமசிவனின் அவதாரமான ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்யாள், சுமார் 1200 வருடங்களுக்கு முன் நம்முடைய பாரதநாட்டில் அவதரித்து, "வேதங்கள், ஸ்ம்ருதிகள் மற்றும் புராண இதிஹாஸங்களின் தாத்பர்யம் அத்வைதமே" என்று விளக்கியருளி கர்ம மார்கத்தையும் பக்தி மார்கத்தையும் நன்கு ஆசரிப்பதன் மூலம் சித்தசுத்தியை அடைந்து ஞானமார்கத்தில் சென்று ஞானத்தை அடைவதால் முக்தி ஸித்திக்கும் என்று உபதேசித்தார். பாரத தேசம் முழுவதும் நடைப்பயணமாக மூன்று முறை ஸஞ்சரித்து தர்மப்பிரசாரம் செய்ததோடு இந்த தர்மம் என்றென்றும் மக்களுக்கு போதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் பாரதத்தின் நான்கு திக்குகளில் புரி, சிருங்கேரி, துவாரகா மற்றும் பதரி க்ஷேத்திரங்களில் நான்கு ஆம்நாய பீடங்களை ஸ்தாபித்தார். காஷ்மீரில் ஸர்வஜ்ஞபீடத்தில் ஏறியருளிய பின், தமது 32-வது வயதில் கேதார க்ஷேத்திரத்தில் தமது அவதாரத்தை நிறைவு செய்தார். இவ்வாறு நமக்கு பேருதவி செய்த பகவத்பாதாள், அத்வைத தத்துவத்தை உபதேசம் செய்ததோடு ஷண்மதங்களை ஸ்தாபிப்பதன் மூலம் வெவ்வேறு ஸம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்கும் ஹிந்து மதத்தினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தினார். அவருக்குப் பிற்காலத்தில் தோன்றிய ஸாதுக்கள் அனைவரும் அவர் வழியையே பின்பற்றி, அவர் உபதேசித்த விஷயங்களைத் தத்தமது பிராந்திய மொழிகளில் போதித்து மக்களை நல்வழிப்படுத்தி வந்தனர். அப்படிப்பட்ட ஸாதுக்களின் வரிசையில் திருவண்ணாமலையைச் சேர்ந்த ஸ்ரீஅருணகிரிநாதர் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் புகழைப்பாடும் திருப்புகழை இயற்றி பக்தர்களை முருக பக்தியில் ஈடுபடுத்தினார். ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரரின் வழியிலேயே சிவகேசவரிடையே பேதபுத்தியை அறவே நீக்குவதோடு உயர்ந்த தத்துவங்களையும் போதிக்கும் வகையில் அமைந்த இந்நூல் தனித்துவம் வாய்ந்தது.

ஸ்ரீராகவன் அவர்கள் சிறுவயதில் திருச்செந்தூர் பகவானின் அனுக்கிரஹத்தால் தன் உடலிலிருந்த குறை நீங்கப்பெற்று, ஒரு சிறந்த முருகபக்தராக விளங்கியதோடு, திருப்புகழை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டும், அதை அனைவருக்கும் கற்றுக்கொடுத்தும் நம்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு நல்வழியை போதித்துவந்தார். எங்களுடைய பரமகுருவான ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் மற்றும் எங்களுடைய குருநாதர் ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் பரிபூர்ண அனுக்கிரஹத்திற்குப் பாத்திரமான ஸ்ரீராகவன் அவர்களின் நூற்றாண்டு விழாவை அவருடைய வழிகாட்டுதலில் வந்துள்ள திருப்புகழ் அன்பர்கள் அனைவரும் சேர்ந்து இருவருட காலத்திற்குத் திருப்புகழ் இசைவழிபாட்டின் மூலமாக ஆசரிப்பதை அறிந்து நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம். அவருடைய சரித்திரத்தையும் நற்பணிகளையும் குறித்து இச்சமயத்தில் ஒரு மலர் வெளியிடப்படுவதும் மிகவும் பொருத்தமானதே.

Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792
E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.

Ref :

Date :

ஸ்ரீசாரதா சந்த்ரமௌளீச்வரரின் அனுக்கிரஹத்தாலும் எங்களுடைய குருநாதரின் கிருபையாலும் தார்மிக நிகழ்ச்சிகள் சிறப்பாக நடக்கட்டும், மக்களிடம் பகவத்பக்தி வளரட்டும், இப்புத்தகம் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் சிறப்பாக வெளிவரட்டும் மற்றும் இதன் தயாரிப்பில் செயல்புரிந்த அனைவருக்கும் நன்மைகள் பல கிடைக்கட்டுமென்று எங்களுடைய நாராயண ஸ்மரண பூர்வகமான ஆசீர்வாதங்களை வழங்குகிறோம்.

சிருங்கேரி

இதி நாராயண ஸ்மரணம்

विधुशेखरभारती

பராபவ சிராவண கிருஷ்ண திருதியை திங்கட்கிழமை

*31.8.2026*

Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792
E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org

# அட்டவணை(click on topic to reach the page)


1.மனது பதமுற வைக்கும் திருப்புகழ்- களக்காடு– Sri N.S.mani-- 11

2.முருகன் திருமென் மலர்ப்பாதங்கள்.–Smt Sitalakshmi Neelakantan– 16

3.குருஜியுடன் சில சுவையான சந்தர்ப்பங்கள்-Sri N.Ramamurthi-- 20

4.அருணகிரியின் ஒலி நயம்–Smt Uma Balasubramanian- 26

5.அன்பும்அவிரோதமும் உள்ளார்க்கு துணையாமே!-Smt Kalyani Jambunathan- 33

6.முரட்டுப் புலவனை முட்டை பெயர் செப்பிக் கவிபெறு பெருமாள் - Smt Chitra Murthy– 40

7.மௌனம் பேசுகிறது.–Sri N.Santhanam--- 45

8.குருஜி சில நினைவுக் குறிப்புகள்-Sri E N Murthy-- 49

9.முழுதும் அழகிய குமரன்–Sri Arunan-- 52

10.அத்வைதம் எனும் இரண்டறு நிலை–Sri Kalamalini Sundararajan– 59

11.சைவசமயக் குரவர் தமிழ் தொண்டு–Smt Lakshmi Narayan -- 63

12.மரணப்ரமாதம் நமக்கு இல்லையாம்-Sri Murali Subramanian - 67

13.திருப்புகழ் நூலின் பெயர் காரணம்–Sri Sundararajan -- 75

14.Guruji Raghavan-a Thiruppugazh way of life-Smt Nalini Muruganandam -- 79

15.இறைவனை அடைவதற்கான அறம் என்னும் வழி- Smt Suguna Balasubramanian-- 82

16.Beautiful Imagery in Thiruppugazh–Smt Priya Subramanian -- 88

17.Arunagirinatharin BothanaigaL- Sri Srinath Vasudevan - 92

18. The Sacred Resonance of “Thongal” in Thiruppugazh: Rhythmic Grace and Spiritual Depth-Dr. Rajesh Sivaraman Iyer-- 101

19.Raghava Navamani malai–Sri S.K.Ramarajan-- 102

20.Thiruppugazh Anbargal as in 2026 104

## _Audio Links of all Tamil Articles (click on link to get audio)

1. Manathu padamura vaikkum Thiruppugazh Sri N.S.mani — 1.https://tinyurl.com/5fdwsk6n
2. Murugan thirumen malar padangal- Smt Seethalakshmi Neelakantan — 2.https://tinyurl.com/35ffsmb4
3. Gurujiyudan sila suvaiyana santharpangal-Sri N.Ramamurthy — 3.https://tinyurl.com/596wyv87
4. Arunagiriyin oli nayam- Smt Uma Balasubramanian — 4.https://tinyurl.com/5ecysxb2
5. Anbum Aviridamum ullarku thunaiyame Smt Kalyani Jambunathan — 5.https://tinyurl.com/mwteuraz
6. Murattup pulavanai muttai peyar cheppik kavi peru perumal- Smt Chitra Murthy — 6.https://tinyurl.com/3spdxp9c
7. Mounam Pesugirathu- Sri N.Santhanam — 7.https://tinyurl.com/444h938n
8. Guruji sila ninaivu kurippugal-Sri E N Murthy — 8.https://tinyurl.com/563xddzw
9. Muzhudum azhagiya Kumaran- Sri Arunan — 9.https://tinyurl.com/34mvav9k
10. Advaitam enum irandaru nilai-_Sri Kalamalini_Sundararajan — 10.https://tinyurl.com/29vn48e4
11. Saivasamaya kuravar Thamizh thondu- Smt Lakshmi Narayan — 11.https://tinyurl.com/ymhhy64r
12. Maranapramada namakku illayam- Sri Murali Subramanian — 12.https://tinyurl.com/3r78w7ns
13. Thiruppugazh noolin peyar kaaranam- Sri Sundararajan — 13.https://tinyurl.com/2txeb9ms
14. Guruji Raghavan-a Thiruppugazh way of life- Smt Nalini Muruganandam
15. Iraivanai adaivadarkaana aram ennum vazhi- Smt Suguna Balasubramanian — 15.https://tinyurl.com/4dchr4bb
16 Beautiful Imagery in Thiruppugazh--Priya Subramanian
17. Arunagirinatharin BothanaigaL- Srinath Vasudevan
18. The Sacred Resonance of “Thongal” in Thiruppugazh: Rhythmic Grace and Spiritual Depth -- Dr. Rajesh Sivaraman Iyer
19. Raghava Navamani malai–S.K.Ramarajan
20. Thiruppugazh Anbargal, About our organisation (as in 2026)

## மனது பதமுற வைக்கும் திருப்புகழ்

## அருணகிரிநாதரின் திருப்புகழ் –

## ஒரு வாழ்வியல் முறை

**Kalakkad N.S.Mani**



https://tinyurl.com/5fdwsk6n ---1

நம் பாரத புண்ணிய பூமியில் பற்பல யோகிகள் , ஞானிகள் , சித்த புருஷர்கள் மற்றும் அருளாளர்கள் அவதரித்த வழியில் வந்தவர் தவத்திரு அருணகிரிநாதர் அவர்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், திருப்புகழ் என்ற அரிய பொக்கிஷத்தை நமக்கு அருளியிருக்கிறார்.அத்துடன் கந்தர் அநுபூதி / கந்தர் அலங்காரம் / கந்தர் அந்தாதி /வேல்/ மயில்/ சேவல் விருத்தங்கள்/ திருவகுப்பு , மற்றும் திருஎழுகூற்றிருக்கை என்ற சித்திர கவித் தனிச் செய்யுள் போன்ற நவரத்தினங்களையும் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்.

**அருணகிரிநாதர்---**

திருவண்ணாமலை தலம் என்பது ஒரு புண்ணிய க்ஷேத்திரம் . சிவபெருமானின் பஞ்ச பூதங்களில் இது அக்னி க்ஷேத்திரமாக விளங்குகிறது.இது ஒரு சித்தி க்ஷேத்திரமும் கூட. இவ்வரிய க்ஷேத்திரத்தில் தான் நம் அருணகிரிநாதர் வாழ்ந்து வந்தார். இவர் திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள 'முள்ளன்றம்' என்ற கிராமத்தில் பிறந்தார் என்று அறிகிறோம் .

ஒரு குறிப்பின்படி அருணகிரிநாதர் வாழ்க்கையை வெறுத்து ,முடித்துக் கொள்ள நினைத்து, திருவண்ணாமலை ஆலய கோபுரத்தின் உச்சியிலிருந்து குதிக்க முனைந்த போது , முருகப்பெருமான் அவரைத் தடுத்தாட்கொண்டு "அருணகிரி உன்னை நீயே அறிந்து கொள் ! சும்மா இரு ,சொல் அற" எனப்பணித்து அவருக்கு சக்ஷு தீட்சையும்

( பார்வையால் தீக்ஷை தருவது ) , பாத தீக்ஷையும் அருளினார்.அருணகிரிநாதரும் பல ஆண்டுகள் சும்மா இருந்து தவம் புரிந்ததாக அறிகிறோம் . பின்னர் அருணகிரிநாதருக்கு " எம் மீது திருப்புகழ் பாடு " எனக் கட்டளையிட்டு "முத்தைத்தரு " என்று பதத்தையும் எடுத்துக் கொடுத்தான் முருகப்பெருமான் . அதன் பயனாக அருணகிரிநாதரும் மடை திறந்த வெள்ளம் போல் பதினாறாயிரம் திருப்புகழ் பாடல்கள் பாடினதாக அறிகிறோம். இவற்றில் நமக்குக் கிடைத்தவை 1334 பாடல்களே!

அருணகிரிநாதர் இரண்டாம் தேவராயரின் காலத்தில் அதாவது 1422--- 1446 வரை வாழ்ந்து வந்தார் என்று தெரிகிறது. விஜயநகரத்து சங்கமா குலத்தரசர்,

அருணகிரிநாதருக்கு இராஜ்ஜியத்தின் முன்னணி அவைப் புலவர் பட்டம் கொடுத்து மரியாதைகள் பல செய்துள்ளார். அருணகிரி கௌமார மதாங்கத்தை சேர்ந்தவர் என்று ஒரு ஆராய்ச்சி கூறுகிறது.

**திருப்புகழ்** –

திருப்புகழ் என்பது அருணகிரியாரின் ஒரு அற்புதமான காவியம் ஆகும் . முருகப்பெருமானே பெயர் சூட்டி முனிவருக்கு அடியெடுத்துக் கொடுத்தான் . திருப்புகழ் தமிழ் பக்தி சங்கீதத்தில் முன்னணி இடம் வகிக்கிறது. இப்பாடல்கள் அனைத்தும் ' சந்தம்' என்ற தாளக் கட்டில் அமைந்துள்ளன. இதில் குறுகிய , நீண்ட, மற்றும் பலவித இலக்கிய நயம் கொண்ட பாடல்களைக் காணலாம் . தூய தமிழ் சொற்களோடு , வடமொழி சொற்களையும் மிக அழகாகப் புனைந்து ஒரு மணி -ப்ரவாளமாக நமக்கு அளித்துள்ளார். சில பாடல்கள் நீரோடைபோல மெல்ல மெல்ல செல்லும் . உதாரணமாக **'விந்ததின் ஊறி வந்தது காயம்** ' என்ற பாடல். இன்னும் சில பாடல்கள் வெள்ள ப்ரவாகம் போல் புரண்டோடும் . **'தரணிமிசை'** என்ற பாடல் இதற்குச் சான்று.

ஆதி சங்கரரின் அத்வைதம் , பக்தி மார்க்கம் , ஞான மார்க்கம் ,ஆத்ம விசாரம், வேதத்தின் சாரம் போன்றவை எல்லாம் இதில் அடங்கியுள்ளன. ---- "அசத்தான என் உரை மறந்து சத்தான உனை உணர்ந்து "- இதைத்தான் " அசதோமா ஸர்க்கமய ...... " என்று கூறுகிறோம் .

முருகப்பெருமானின் எல்லாத் தலங்களுக்கும் சென்று திருப்புகழ் பாடியுள்ளார் அருணகிரிநாதர். விராலிமலை க்ஷேத்திரத்தில் அருணகிரிநாதருக்கு அஷ்டமா சித்திகளை அருளியுள்ளார்.

" அறிவும் அறி தத்துவமும் அபரிமித வித்தைகளும் அறி என இமைப்பொழுதில் வாழ்வித்த வேதியனே" ---என நன்றி உணர்வோடு கூறுகிறார் அருணகிரிநாதர்.

பிரம்மத்தை—கடவுளை – அடைவது வெறும் ஞானத்தாலோ அல்லது வழிபாடு மூலமாகவோ அல்ல. பஞ்சபூதங்களுக்கும் அப்பாற்பட்ட கடவுள் மேல் அதாவது முருகன் மேல் பக்தி கொண்டு , அன்பு குடியிருக்கும் தூய்மையான , மாயை அகற்றிய மனம் கொண்டு மட்டுமே கடவுளை அடைய முடியும் ; நித்தியானந்தத்தைப் பெற முடியும் .

" வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை மெய்யன்பினால் கசிந்து பாடி"

'அவிழ்ந்த அன்பால் குராப்புனை தண்டையம் தாள் தொழல் வேண்டும் '--- "மீமிசை அன்பு துளும்பிய மனனாகி " என்று பல திருப்புகழ் பாடல்களில் தூய்மையான மனம் , அன்பு என்ற இரண்டையும் வலியுறுத்துகிறார் வாக்கிற்கு அருணகிரி.

மேலும் 'யான்','தான்' எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவருக்கும் தோன்றாது சத்தியம் . 'எனது யானும் வேறாகி , எவரும் யாதும் யானாகும் இதய

பாவனாதீதத்’ தோடு மனதை  ஒருமுகப் படுத்தி குறியைக் குறியாது குறித்தறியும் நெறியினில் நின்று , தன்னை இழந்த நிலையில் திருப்புகழை இசைப்போமேயானால் , அது நமக்கு நினைத்ததும் அளிக்கும் , நம் மனத்தையும் உருக்கி , தெய்வ வடிவும் தரும் என்று ரகசிய  உபதேசம் செய்கிறார் நம் குருவான அருணகிரிநாதர்.

மேலும் **“ தடுங்கோள் மனத்தை , விடுங்கோள் வெகுளியை , தானம் என்றும் இடுங்கோள் , இருந்தபடி இருங்கோள்” ” காருடல் சோரி கக்க வேல் விடும் கோனான முருகன் அருள் வந்து தாமே உமக்கு வெளிப்படுமே “** என்று நமக்கு உபதேசிக்கிறார்.

திருப்புகழ் ஆதிக்கத்துள் வந்தவர்கள் மிகவும் பாக்கியசாலிகள். அதன் ஆனந்தத்தைக் கேட்டும் , பாடியும் அநுபவித்தவர்கள் , நான் என்பதற்று, உயிரோடு ஊன் என்பதற்று, வெளி நாதம் பரப்பிரம ஒளி மீதே , ஞானம் சுரப்ப மகிழ் ஆனந்த சித்தியோடு, மெல்ல மெல்ல சாமீப தொண்டர்களாகி , பின்னர் சாரூப தொண்டர்களாகவும்  ஆகி முருகனின் திருவருளில் ஐக்கியமாகி விடுகிறார்கள். இதுதான் முருகனின் காந்த சக்தி. பொற்புகழ் பாடி சிவபதமும் பெற்று , ஞானப் பெருவெளியும் பெற்று புகலாகத்து அமுதும்  கிடைக்கப் பெற்றிடலாம் என்கிறார் அருணகிரிநாதர்.

திருப்புகழ் ஓத ,ஓத, சிவகுருநாதன் எந்த நேரத்திலும் கோலக்குறத்தியுடன் நீலச்சிகண்டியில் வந்து காட்சி கொடுப்பான் .

குருநாதன் ” சும்மா இரு சொல் அற” என்றும் ,“அறிவை அறிவது பொருள் ” என்றும் ” ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த ” சீலத்தை மெல்லத்தெளிந்து அறிவார் திருப்புகழ் வித்தகர்கள்.

திருப்புகழை இசைப்பவர்கள் ” சித்தப்ரசித்தர்கள் ”   என்று குறிப்பிட்டிருக்கிறார் அருணகிரிநாதர் அவர்கள்.

மேலும் , திருப்புகழை இசைப்பதினால் நம் மனதில் அலைபாயும் அனாவசிய எண்ணங்கள்   அறவே விலகிவிடும் .இறையன்பும் , இறைவனின் மகிமை பற்றிய  சிந்தனையும்  மட்டுமே நம் மனதில் மேலோங்கி நிற்கும் . ஆறாறையும் நீத்து அதன் மேல் நிலையை நாம் எட்ட முடியும் . அவிழும் அன்புற்று , கற்று மனத்தின் செயல் ஒழிந்து எட்டப்பட்டதனை , சகலமும் பற்றி பற்றற நிற்கும் முருகனை , அடியவர் கோடி குறை கருதினாலும் வேறு முனிய அறியாத கருணை மேருவை—கருணை வாரிதியை சென்று, கண்டு ஆனந்த பரவசமடையலாம் . இதுவே ஒருவித தியானமாகி ,முடிவில் உருவ வழிபாட்டிலிருந்து மாறி , முருகனை ஒரு உள்ளார்ந்த ஜோதியாக தரிசிக்க முடியும்படி செய்கிறது . ஜோதி உணர்கின்ற வாழ்வு சிவம் என்ற ‘சோஅகம் ’ (தத்வமஸி)  என்ற நிலையை அடையலாம் . இந்த மோட்ச அநுபூதி பகரொணாதது , சேரவொணாதது, நினையொணாதது மாகும் நம்மை நாமே உணர்ந்து கொள்ளும் அந்த நிலையில் , அந்த ஒளியில் வேறொன்றும் பிடிபடாது, பிடிக்காது.

இந்த அநுபூதியை குருமுகமாக உபதேசிக்கப் பெற்று அநுபவிக்க வேண்டும் **." உறுதி குரு வாக்கியப் பொருளாலே , முருகா ! உனது பத காட்சியைத் தருவாயே! "** என்கிறார்அருணகிரிநாதர். ஆன்மாவானது அசத்தாகிய பிரபஞ்சப்பற்று நீங்கியவுடன் , இயல்பாகவே சிவத்தை சாரும் . மனம் பக்குவ நிலையை அடையும் போது முருகன் , எதிரில் குருவாய் தோன்றி மெய்ஞானத்தை அருளுகிறான் . ஒன்றுமே கற்காத, புனத்தில் வாழ்ந்த வள்ளி நாயகியை பரிபக்குவம் கருதி ஆட்கொண்டது போல முருகன் நம்மையும் ஆட்கொள்வான் . தகராகாசம் எனப்படும் நம் இதய குகையில் குகனாக குடியிருக்கிறான். **–"தகர தந்த சிகரத்தொன்றில் தட நற் கஞ்சத்துறைவோனே"— ( புகரப்புங்க)**

**குருஜி—**

குருஜி திரு ஏ.எஸ் . இராகவன் அவர்களது பெரு முயற்சியால் திருப்புகழின் அருமை , பெருமை உலகெங்கும் வேகமாய் பரவி வருகிறது. "திருப்புகழ் அன்பர்கள் " என்ற அமைப்பை தில்லியில் உருவாக்கிய நம் குருஜி , பஜனை சம்பிரதாயத்தில், ஆனால் ஒரு வித்தியாசமான நல்ல கர்நாடக இசை பாணியில் ,சந்தம் பிறழாமல் வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார். பக்திக்கும் , கட்டுக் கோப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது ஒரு தனி அழகுதான் .

கண்ணனின் வேயிசைக்கு அநேகவித பசுத்திரள் மயங்குவது போல, மனது துயர் அற, வினைகள் சிதறிட, மனது பதம் உற திருப்புகழ் பா மலர்களால் நம் எல்லோரையும் பேரின்ப நிலைக்கு அழைத்துச் சென்றார் நம் குருஜி அவர்கள். காரணம் – தனித்துவமுடைய குருஜியின் இசை நயம் .

திருப்புகழ் பாடல்களின் சந்தம் , தாளம் , இராகம் மற்றும் பாவம் குறையாமல் , இசை ஞானம் இல்லாத அன்பர்களும் திருப்புகழ் பாடல்களைப் பாட முடிகிறது என்றால் ,அது குருஜியின் பாணி , அவர் கற்றுக் கொடுக்கும் முறை . ஓசை நயம் , சொல் வளம் மிகுந்த இசையின் இனிமையினால் கவரப்பட்டு , திருப்புகழ் பாடல்களைப் பாடிவரும் அன்பர்கள் நாளடைவில் இவ்வரிய ஞான நூல் –'வேத சாரம்' என்று கண்டு கொண்டனர்.அதற்குக் காரணம் "வாழ்க்கைக்குத் திருப்புகழ் " என்ற குறிக்கோளோடு அருணகிரிநாதர் வகுத்துக் கொடுத்திருக்கும் "அன்பு, அவிரோதம்" என்ற இரு உயரிய நெறிகளைப் பின்பற்றி , எளிமையை உணர்த்தும் வகையில் குருஜி வாழ்ந்து காட்டிய நெறிமுறை என்றே சொல்லலாம் .

திருப்புகழுக்காக குருஜி ஆற்றிய தொண்டு மகத்தானது. சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா சுவாமிகள் குருஜிக்கு

" திருப்புகழ் தொண்டன் " என்ற பட்டம் அளித்து கௌரவித்திருப்பது மிகப் பொருத்தமே.

நாமும் வரும் சந்ததியினரும் இந்த மிக அற்புதமான திருப்புகழ் என்கின்ற இன்பக் கடலில் மூழ்கி, முருகனை தகராகாசமாகிய நம் உள்ளத்தில் வைத்து உய்வோமாக!

திருப்புகழ் பாடும் அன்பர் நாவில் முருகன் இருக்கிறான். அன்பர் சிந்தையில் இருக்கிறான் .ஆகவே நாம் பேசும் வார்த்தைகள் நல்ல வார்த்தைகளாக இருக்க வேண்டும்.இதயத்தில் கெட்ட சிந்தனைகள் இருக்கக் கூடாது.முருகன் இருக்கும் இடம் அப்பழுக்கு இல்லாமல் இருக்க வேண்டும் .Guruji



# முருகன் திருமென் மலர்ப்பாதங்கள்.

**Sitalakshmi Neelakantan**

https://tinyurl.com/35ffsmb4 ---2



சாக்ஷாத் ஸ்ரீமுருக பகவானே அடியெடுத்துக் கொடுத்து ஸ்ரீ அருணகிரிநாதர், மந்த்ரசக்தி மிகுந்த சந்த நுட்பங்களுடன் அருளிய அரிய பொக்கிஷமான திருப்புகழில், பண்புபெறவும், நீள் ஸௌக்ய ஸகல செல்வமிக்க பெருவாழ்வு ,தகைமை ,சிவஞான முக்தி, பரகதி கொடுத்து உதவிபுரியவும், இருவினை மும்மலமற, இறவியோடு பல பிறவி தரித்து அற, பக்தியுடன் உருகி, முருகன் திருவடியை சரணடைந்து, சீதள பங்கய மென்கழலிணை பெறுவதற்கு, அரிய பல திருப்புகழ் பாடல்கள் பாடியிருக்கிறார்.

**“நினது திருவடி சத்திமயில்கொடி நினைவு கருதிடு புத்தி கொடுத்திட”** என்று ஸ்ரீ விநாயகரை மட்டவிழ் மலரால் பூஜை செய்து, ஸ்ரீஅருணகிரிநாதர் அருளிய அந்த திருப்புகழ் பாடல்களிலிருந்து, எங்களுக்கு திருப்புகழ் கற்றுக் கொடுத்த ஸ்ரீ குருஜியின் பாதங்களை நமஸ்கரித்து, அவர்கள் ஆசீர்வாதத்துடன், "முருகன் திருவடி சரணம்" பற்றி சிலவற்றை காண்போம். அருணகிரிநாதர் அவர்கள், முருகப்பெருமானின் திருவடி தீக்ஷை பெற்று, பல விதமாக முருகப்பெருமான் திருவடி சரணத்தின் மகிமையை பல திருப்புகழ் பாடல்களில் தெளிவாகப் பாடியிருக்கிறார்.

விதியின் பயனால் வந்த தாக்கத்திலிருந்து விடுபடவும், பண்புபெறவும், செந்தில்நகர் வந்தமர்ந்த பெருமாளே!, அஞ்சலஞ்சலென வாராய்! என்ற பிரார்த்தனை, நம் எல்லோருக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. -- "**கண்டுமொழி**" என்று ஆரம்பிக்கும் திருச்செந்தூர் ஸ்தலப் பாடலில் இந்தக் குறிப்பு உள்ளது.

இவ்வுடல் நிலையானது என்று எண்ணி உளைந்து அலையாமல், திருவருள் பொருந்திய பரமஞான சிவகதியைப் பெற்று, நல்ல நிலையைப் பெற எனக்கு உனது திருவடியைத் தருவாயே.! என்று கூறுவதை **"ஒருவரை ஒருவர் தேறி** " என்ற பழநி ஸ்தலப் பாட்டில் காணலாம்.

பிரமனும், சிறையிலிருந்து மீட்டு விண்ணுலகத்தை ஆளும்படி அருளிய தேவர்களும் வணங்கும், சிவபெருமான் குமரனே!, இராமன் மருகனே!, வள்ளி மணவாளனே!, ஆடும் மயிலேறி வரும் இளையோனே!, சூரன் உடலற, கடல் வற்றிப் போக, வேலாயுதத்தை செலுத்திய பெருமாளே!, காலன் எனை அணுகாமல் உனது இரண்டு திருவடிகளையும் வழிபட அருள்வாயே.! என்று கூறுவது **"பாதி மதி"**–என்று தொடங்கும் ஸ்வாமி மலை ஸ்தலப் பாட்டிலிருந்து தெரிகிறது.

பல கொடிய நோய்கள் ஒவ்வொரு பிறவியிலும் என்னை வருத்தாத படி உனது திருவடிகளை அருள்வாயே.!–எவ்வளவு அழகான வரிகள்.
இந்தக் கருத்துள்ள திருப்புகழை "நோய் தீர்க்கும் திருமந்திரம்" என்பர்.
**"இருமலு ரோக"** என்று தொடங்கும் திருத்தணி ஸ்தல பாடல் இதனைக் குறிக்கிறது

'எனது' என்று கூறப்படும் ஆசைகள் அற்றுப் போக, காமம், வெகுளி, மயக்கம் என்னும் மும்மலங்கள், கொடிய மோக விகாரம் இவை நீங்கிடவே, உனது இரண்டு திருவடிகளை தந்து, அருள்வாயே. என்று கூறுவதை **"கரிவாம்பரி-- (வரி சேர்ந்திடு)** " திருவேங்கடம் ஸ்தலப் பாட்டில் காணலாம்.

மனக் குழப்பம் தரும் பல நூல்களை ஓதி, ஒரு பயனும் காணாது, இறப்பதற்கு முன், உன்னுடைய தாமரைத் திருவடிகளை விரும்பி, உன் திருப்புகழை ஓத அருள்வாயே. என்பதை **"பழியுறுசட்டகமான"** என்று தொடங்கும் திருவிடைக்கழி ஸ்தலப் பாடல் தெரிவிக்கிறது.

நற் குணங்களை உடைய பார்வதி தேவியின் நாதனான சிவபெருமானுக்கு, வேதாகமங்களை அருளிய குருவே! நல் ஈசன், ஈசுவரி ஆகியோரின் குழந்தையே! வள்ளி-தேவசேனாவின் மணவாளா!, என்று போற்றி, உன் திருவடியை என் தலைமேல் சூடியே அடியேனுடைய காம விகார தாகம் கெட்டு ஓடவே நன்றாக கலை ஞானத்துடன் உன்னை நான் பாட அருள்வாயே.! என்கின்றது **"ஞானாவி பூஷணி"**என்று தொடங்கும் பொது ஸ்தலப் பாட்டு.

செயசெய அருணாசலா, சிவயநம, மசிவயந, நமசிவய, அழகிய மூலப் பொருளே. யநமசிவ, வயநமசி, சிவய நமஸ்த்து என்று மாறி மாறிச் செபித்து, 'செய செய' என்று கூறி, அருணாசலத்தில் மனக்கண்ணை வைத்து, ஹர

ஹர திருவடி மலையே! (சிவமலையே) என்று தியானித்து, உள்ளம் உருகி, இந்த மந்திரம் எங்கள் குரு தந்த பாக்கியம் எனக் கொண்டு, உன் ஒளி வீசும் திருவடியைத் தொழுது போற்றிய இன்பம் கொண்டு, சிவ மந்திரத்தால் பெருகும் அமுதக் கடலை நான் பருகி மகிழ, அருள் தாராய்! என **"செயசெய அருணா"** என்று தொடங்கும் பஞ்சபூதஸ்தல திருவருணைப் பாடல். நமக்கு உணர்த்துகிறது.

முக்தி அடைவதற்கு உபாயமான இன்ப வழியைக் கைப்பற்றி, உலக மாயை, பொய், குலம், குடி என்னும் பற்று, வற்றிப் போக, சிவ ஞானமாகிய உனது திருவடியை தந்து அருளுக! என்று
**"சரக்கே றித்தப்"** என்று தொடங்கும் பஞ்சபூதஸ்தல திருக்காளத்தி பாடல்.உரைக்கிறது.

என் நல் வினை, தீ வினை என்ற இரு நோயும் அழியவும், மும்மலங்கள் ஒழியவும், அருவி பாய்வது போல, இனிய தேவாமிர்தம் ஊற, உனது திருவருள் எல்லாம் எனக்கு அருளி, சிவ ஞானத்தை நான் மகிழ்ந்து பெறும்படி, திருவருள் புரிந்து, உன் இரண்டு திருவடிகளை எனக்குத் தாராய்.! என **"இருளு மோர்கதிர்"** பஞ்சபூதஸ்தல சிதம்பரம் பாடல் உணர்த்துகிறது..

உடல் மடிந்து உயிர் போவதற்கு முன், உனது தெளிய விளங்கும் புகழைக் கற்று, அப் புகழை திரும்பத் திரும்பச் சொல்லி, உன் திருவடிகளைப் பற்றி தொழுது, பிறப்பை நான் அறுக்கும் வண்ணம், மேலான முக்திக்கு அருள் தாராய்.! என்று பழமுதிர்சோலைப் பாடலான
**"தலைமயிர் கொக்குக்கு"**. என்று தொடங்கும் பாடல் விளக்குகிறது.

கந்தரலங்காரத்திலும்,, ‘**சேல்பட்டழிந்தது**’ என்று தொடங்கும் நாற்பதாவது பாடல் முருகன் திருவடியை சரணடைந்தால் நம் தலையெழுத்து அழிந்து, நல்ல கதியை அடைய, அருள் பெற முடியும்என அறிவுறுத்துகிறது.

இவ்வாறு எல்லா கருத்துக்களையும் திருப்புகழ் ஊடே நமக்குத் தெரிவித்த குருஜி அவர்களுக்கு வணக்கமும் , நன்றியும் தெரிவித்து அவர் கற்றுக் கொடுத்த திருப்புகழை நாம் கூட்டமாகக் கூடி இறைவனுக்கு சமர்ப்பிக்கலாம்! வாழ்க குருஜி , வளர்க அவர்கள் தொண்டு !

விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள், மெய்ம்மை குன்றா

மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள், முன்புசெய்த

பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும், பயந்த தனி

வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

**அருவுருவாய் நின்றென் அகத்தினுள் மேவும்**

**குருபர குகன்மலர்த் தாள்கள் –**

**பெருவாழ்வு தந்துயிரைக் காக்கும் தனிப்**

**பெருஞ் சோதியாய் வந்திடும் வல்வினை மாற்றும்.**

**பூஜை செய்யும்போது எப்படி செய்யவேண்டும் என்று அருணகிரிநாதர் சொல்லும்போது தகட்டில் சிவந்த கடம்பையும் என் நெஞ்சையும் உன் தாளிணைக்கே என்று மலரோடு என் மனமும் உன் பாதாரவிந்தத்தில் விழ வேண்டும் என்று நமக்கு தியானம் செய்ய சொல்லிக் கொடுக்கிறார் - Guruji**



# குருஜியுடன் சில சுவையானசந்தர்ப்பங்கள்

**N.Ramamurthy**

https://tinyurl.com/596wyv87 ---3



முதன் முதலில் நான் என் அண்ணா திரு N.சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் குருஜி பாடக் கேட்ட கந்தர் அநுபூதி என்னை வெகுவாகக் கவர்ந்தது.

12-10-67 விஜயதசமி அன்று கரோல்பாக்கில் , திரு பகவதி சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் குருஜி அவர்கள் திருப்புகழ் வகுப்பு தொடங்கி, ஞாயிறுதோறும் பத்து வருடங்கள் நடந்தன.பின் பத்து வருடங்கள் ரமண கேந்திராவிலும் , அதன் பின்னர் சங்கரவித்யா கேந்திரா -சாரதாகோவிலில் சனிக்கிழமை மாலை வேளைகளிலும் , 2003-2004 வரை விடாமல் நடந்தன. அந்தவகுப்புகளுக்கு விடாமல் செல்லும் பேறு எனக்குக் கிடைத்தது.1970—லிருந்து தில்லியில் பல இடங்களில் வகுப்புகள் நடத்தியதால் திருப்புகழ் மகிமை வேகமாகப் பரவத் தொடங்கியது என்றே சொல்லலாம் .

நான் தில்லிக்கு வந்த பிறகு திருப்புகழ் அன்பர்கள் அமைப்பின் பொருளாளராகப் பொறுப்பு ஏற்ற பின், குருஜியை அடிக்கடி சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.குருஜி பல இடங்களில் நடத்திய பஜனைகளைக் கேட்டு , திருப்புகழ்பாடல்களும் , முருகன் நாமாவும் காதில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருந்ததனால் நல்ல மன நிறைவும், புத்துணர்ச்சியும் உண்டாயிற்று.

ஒரு சமயம் என் அக்கா வந்திருந்தபோது அவர்களை திருப்புகழ் வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றேன் . பஜனை முடிந்து வீட்டிற்கு வந்த பிறகு " எப்படி இருந்தது அக்கா?" என்று கேட்டேன் .அதற்கு அக்காவும்,"அடபோடா! அது பஜனையே இல்லை!" என்றார்கள். எனக்கு தூக்கிவாரிப்போட்டது."உங்க குருஜி எங்க பஜனை பண்றார்?அது தபஸ்டா! பலமணி நேரம் , கையை, காலை நீட்டி , மடக்காம ஒரு சொட்டு ஜலம் கூடச் சாப்பிடாம உருகி, உருகி பாடராரே! அது தபஸ் ! இல்லன்னா? வேறு

என்னன்னு சொல்றது?இந்த மாதிரி பாடறவா இந்தக் காலத்துல யார் இருக்கா? "என் மனத்தில் பாலை வார்த்தாள்.

திருப்புகழ் இசைவழிபாடு புத்தகம் வருவதற்கு முன்னால் (1993) 'திருப்புகழ் மாலை' என்ற சிறிய புத்தகம் தான் இருந்தது . அதிலிருந்து ஒரு பாட்டு தேர்ந்தெடுத்து , சில நிமிடங்கள் கண்ணை மூடிக்கொண்டு செந்தில் ஆண்டவன் எடுத்துக் கொடுத்து உணர்த்திய இராகத்தில் எங்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுப்பார் குருஜி அவர்கள். எவ்வளவு நாட்கள் என்று நினைக்கிறீர்கள்?.அது பல நாட்கள் செல்லும். .பல மாற்றங்கள் காணும் . "ஆனாத பிருதிவி" என்ற பாடல் நாற்பத்தைந்து நாட்கள் ( 45) நாட்கள் தொடர்ந்தன. அவருடைய லெவெலுக்கு எங்களால் பாடமுடியவில்லையென்றால் , பாவம் ! எங்கள் லெவெலுக்கு இறங்கி வருவார்.பல பாடல்களையும் , அதன் இராகங்களையும் செந்தில் ஆண்டவனே அவருக்கு உணர்த்தியதாகத் தெரிகிறது.

8-10-1981 அன்று முருகன், இந்தப் பக்கத்தில் உள்ள இந்தப் பாடலை சொல்லிக் கொடு -என்று உத்தரவிட்டாராம். அதைப் பார்த்தபோது, அந்த இராகம் குருஜிக்கு பரிச்சயமானதாக இல்லை. அதுதான் "அரி அயன் அறியாதவர்" என்ற பாடல். அதற்காக, தெரியாத ராகத்தை கற்றுத் தெளிந்து அன்பர்களுக்கு குருஜி கற்றுக் கொடுத்தாராம் என்றால் அவர் முருகன் மீது வைத்திருக்கும் பற்றைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?அன்பர்கள் விருப்பத்திற்கு ஏற்றார்போலும் குருஜி அவர்கள் பாடலை கற்றுக் கொடுப்பார்கள் என்பதும் தெரிகிறது . அப்படித்தான் திரு.வெங்கடேசன் அவர்கள் விருப்பத்திற்கு இணங்க 'ஓங்கும் ஐம்புனல்' என்ற பாடல் , ஆரபி இராகத்தில் உதித்தது. அது போலவே ஹரித்வாருக்குக் காரில் சென்று கொண்டிருக்கும்பொழுது "கருப்பற்றூறி" என்ற பாடலை, நடபைரவி இராகத்தில் சொல்லிக் கொடுத்தார். பிறகு எல்லாவற்றையும் வகுப்பில் மறுபடியும் சொல்லிக் கொடுப்பது வழக்கம் .

21-10-1996 – விஜயதசமிநாள். விஜயதசமி அன்று ஒரு புது திருப்புகழ் சொல்லிக் கொடுப்பது வழக்கம் . ஆனால் குருஜிக்கு எந்தப் புதுப் பாட்டுமே மனதில் தோன்றவில்லை. " திருப்புகழ் புத்தகத்தையும் எடுக்கக் கைவரவில்லை. பல விசேஷங்கள் தொடர்ச்சியாக இருந்தது.

விஜயதசமி யன்று வஸந்த் விஹாரில் இருக்கும் சாரதா கோவிலுக்கு வந்துவிட்டேன்.மனதில் எந்தப் பாட்டுமே தோன்றவில்லை. சரி! ஏதாவது பழைய பாடலையே சொல்லிக் கொடுத்துவிடலாம் என்று எண்ணினேன். என்னமோ தோணிற்று . கோயில் கதவை திறக்கச் சொன்னேன் . உள்ளேபோய் மஹா பெரியவாள் படத்திற்கு முன்னால் உட்கார்ந்தேன்.அவரையே தியானம் செய்து கொண்டிருந்தேன் . என்ன ஆச்சரியம் ! அப்போதுதான் 'வேதத்தில் கேள்வி' என்ற பாட்டு ஸ்ரீரஞ்சனி இராகத்தில் மனதில் தோணிற்று. சந்தேகமேயில்லாம அவனோட அநுக்கிரகம் தான்" ---என்று கூறினார் குருஜி. குருஜி எடுக்கும் முடிவுகள் அனைத்தும் செந்திலாண்டவனுடைய முடிவே! என்றார்.

"ஸித்திவிநாயக சரணம் சரணம்" என்ற பாடலில் , முதல் சரணம், விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களைக் குறிக்கிறது.இரண்டாவது சரணம் , அதில் சரணமடைவதைக் குறிக்கிறது.அதை உணர்ந்துகொண்டு பாவத்தோடு முதல் சரணத்தைக் கூறவேண்டும்" என்று விளக்குவார் நமது குருஜி அவர்கள். 'ஏழைக்கிரங்கும் பெருமாளே'(கடகட) என்று பாடும் பொழுது , குரல் கீழே இறங்க வேண்டும் என்று நமக்குக் குறிப்பிடுவார்.

12-3-72 அன்று " தவநெறி தவறிய" என்ற பாடலை வகுப்பில் கற்றுக் கொடுத்த பொழுது நாங்கள் சரியாக உணர்ந்து பாடவில்லை. மறுபடியும் சொல்லிக் கொடுத்தாலும் எங்களுக்கு சரியாகவே வரவில்லை

" சரியாகப் பாடவேண்டாமா?" என்று சொல்லிவிட்டு சரியான விளக்கத்தையும் கூறினார்.

"அவனிவ னுவனுட னவளிவ ளுவளது இதுவுது வெனுமாறற்று" என்பதில் வரும் . 'அவன்' என்பது சற்று தூரத்தில் இருப்பவனைக் குறிக்கும். அதனால் 'அவன் ' என்ற வார்த்தையை சற்று சத்தமாக உச்சரிக்க வேண்டும்' 'இவன்' என்பது பக்கத்தில் இருப்பவனைக் குறிக்கும் அதனால். மெதுவாக உச்சரிக்கவேண்டும் . அதுபோல 'உவன்' என்பதைப் பொதுவாகச் சொல்லணும் . அதுபோலவே 'அவள்' 'அது'என்பதை சத்தமாகவும் , 'இவள்', 'இது' என்பதை மெல்லவும் உச்சரிக்க வேண்டும் ".இவ்வாறு விவரமாகச் சொல்லிவிட்டு , குரலில் ஏற்ற, இறக்கத்தோடு அவர் பாடிக் காண்பித்த பிறகு தான் புரிந்தது , இந்த இரு வரிகளில் இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா என்று !

ஒரு முறை என்னுடன் அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது,

" காட்டில் குறத்திபிரான்" என்ற பாடலை நீ கவனித்தாயா? அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில்"காட்டில் குறத்திபிரான் பதத்தே கருத்தைப் புகட்டின் வீட்டிற் புகுதல் மிக எளிதே" என்று கூறுகிறாரே! அந்த 'புகட்டின் என்ற வார்த்தையை எவ்வளவு பொருத்தமாக உபயோகித்திருக்கிறார் என்று பார்த்தாயா? '

நான் எதுவும் சொல்லவில்லை. அவரையே பார்த்துக் கொண்டு மவுனமாக இருந்தேன்.

'அது என்னது அது புகட்டின் என்கிறது ? பாலையும் , மருந்தையும் கலந்து குழந்தையிடம் கொடுத்து 'குடி' என்றால் 'மாட்டேன் ' என்றுதான் அடம் பிடிக்கும் . அதையே பாலாடையில் விட்டு , குழந்தையை அமுக்கிக் கொண்டு,வற்புறுத்திக் கொடுத்துவிட்டால் , குடித்துவிடும் ,அந்த மாதிரிதான் நம்ப மனசை ஆண்டவனுடைய பாதாரவிந்தத்திலே செலுத்தினால்? போறேங்கிறதா?' மாட்டேன்னுதான் அடம் பிடிக்கிறது. அதை வற்புறுத்திப் புகட்டினால்தான் போறேங்கிறது . புரிந்ததா?'என்றாரே பார்க்கணும் . அசந்துவிட்டேன்.

மற்றொரு சமயம் குருஜி என்னை அழைத்து 'அருணகிரிநாதர் , பழனித் திருப்புகழில் இகபரசௌபாக்கியம் அருள்வாயே! 'என்று கேட்கிறார்'.இக சௌக்கியம்' என்று எதைக் குறிக்கிறார்? 'பர சௌக்கியம்' என்று எதைக் குறிக்கிறார்? 'சில விநாடி மௌனத்திற்குப் பிறகு அவரே தொடர்ந்தார். 'இதற்கான பதிலை அருணகிரிநாதரே ஸ்வாமிமலை திருப்புகழில் சொல்கிறார் பார் ! "கனம் அது உறு நீள் சவுக்ய, சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வினை இதத்திற்கும் , "தகைமை, சிவம் ,ஞானம் , முத்தி, பரகதியை பரத்திற்கும் கேட்கிறார்"--.எவ்வளவு விஷயங்கள் அறியாமல் போய்விட்டதே!

குருஜி எதைச் செய்தாலும் அதில் ஒரு நேர்த்தி , ஒரு திட்டமிடல் இருக்கும் . சமயமறிந்து அதற்கேற்றாற்போல் திருப்புகழ் பாடல்களைப் பாடுவார். ஒரு சமயம் திருச்செந்தூரில் பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு அன்பர் அவருக்கு ருத்திராட்ச மாலை அணிவித்தார். உடனே " ஜெபமாலை தந்த சற்குருநாதா" என்று வரும் "அபகார நிந்தை" என்ற பாடலைப் பாடினார்.ஒரு கோடைக்காலத்தில் ஒரு பஜனை நடந்துகொண்டிருக்கும்பொழுது ஒரு அன்பர் செம்பிலிருந்து தண்ணீர்

அருந்திக் கொண்டிருந்ததைப் பார்த்தார். உடனே அதற்கு ஏற்ப 'தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்த சிவஞானம்' என்று அலங்காரத்தைப் பாடினார்.

ஒருமுறை அருணகிரிநாதர் விழா முடிந்து யாவருக்கும் விபூதி கொடுத்துவிட்டு ,பிரஸாதம் சாப்பிடத் தயாராகிக் கொண்டிருந்த குருஜி, மிகவும் சோர்வாகக் காணப்பட்டார் . அப்பொழுது நான் " குருஜி ! எங்களுடன் காலையில் சிற்றுண்டி சாப்பிட்டிருந்தால் இவ்வளவு சோர்வு வந்திருக்காதே!"என்றேன் .உடனே அவரும் இதோ பார் ராமு ! பஜனை முடிந்து நான் தரும் விபூதியாலே கொஞ்சமாவது பலன் இருக்கணும்னா, சில கட்டுப்பாட்டுக்களை நான் அனுசரித்துத்தான் செல்ல வேண்டும்' என்று கூறி என் வாயை அடைத்துவிட்டார்.

எவ்வளவு நம்பிக்கை ! 'தலைவன்' என்றால் இப்படித்தானே தகைமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் ?

"திருப்புகழ் வகுப்பிற்கு வருபவர்கள் அனைவருக்கும் சங்கீதம் தெரியும் என்பது இல்லை. நான் பாடுகிறேன் . நான் நன்றாகப் பாடுகிறேன் . மற்றவர்களை விட நான்தான் சரியாகப் பாடுகிறேன் ,என்ற இந்த உணர்ச்சிகளை மனதிலிருந்து அறவே அகற்றிவிடவேண்டும் .நம்மை பாட வைப்பது ஆண்டவன் . ஆண்டவன் இச்சை இல்லாமல் பாடும் பாட்டுக்கள் நன்றாக அமையாது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் .எல்லோரும் ஒரே மாதிரியாகப் பாட முடியாது ,ஆண்டவன் அவரவர் சக்திக்கும் ,குணங்களுக்கும் ஏற்ப பாட வைக்கிறான் .ஆதலால் ஒருவர், இன்னொருவர் குருநாதர் கற்றுக் கொடுத்தபடி பாடவில்லையே என்று உள்ளத்தில் வருந்துவதோ அல்லது வெளிப்படையாகச் சொல்லி அவர்கள் மனதைப் புண்படுத்துவதோ ,திருப்புகழ் அன்பர்களின் செயலாக இருத்தல் கூடாது. திருப்புகழை படிப்பவர்கள் ,உரைப்பவர்கள் மிடிப்பகைமை அறுத்தெறிதல் வேண்டும் "

எவ்வளவு அழகான உபதேசம் !

இது மட்டுமா? கணக்குகளில் பல அறிவுறைகள் ,அதிசயங்கள் ,கணக்கு வழக்கு, நிதானம், பொறுமை,சங்கீதம் அறியாத அன்பர்களை ராகங்களுடன் பாட வைத்தது,மாணவர்களை ஆசானாக்கியது,குருஜி அஷ்டாங்க யோகம்,சமாதி நிலை ,அதற்கும் மேற்பட்ட நிர்விகல்ப சமாதிநிலை,ஸ்ரீ

வித்யா தத்வம்,அத்வைத தத்வம் முதலியவற்றை உட்கொண்டது ,மற்றும் திருப்புகழ் வழிபாடுகளில் பாடுபவர்கள் வேறு,கேட்பவர்கள்வேறு என்று கிடையாது .எல்லோரும் பாடுபவர்கள் தான், எல்லோரும் கேட்பவர்கள் என்ற உயர் தத்துவத்தை கடை பிடித்தது.அன்பர்களுக்கு உணர்த்தியது போன்ற அருமையான குருஜியின் மகிமைகள் எங்கள் சந்திப்பில் வெளிப்பட்டதைக் கண்டேன்.தாளக் கட்டில் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பது , சந்தத்திற்கு ஏற்ப தாளத்திற்கு எப்படிப் பெயர் வைக்க வேண்டும் என்ற விவரங்களையெல்லாம் குருஜியுடன் அலசுவதை இப்பொழுதும்புத்துணர்வுடன் நான் அசைபோடுகிறேன்.

குருஜி குருஜிதான் !

"சந்தக் கடலில் தத்தளிக்கின்றேன் ஐயனே! எந்தப் பதம் பிடிப்பேன்? அறியேன் மெய்யனே! நாவினில் வராத நற்றமிழ் அருளாயோ? பாவ வினை தீரப் 'பதநி' சொல்லாயோ?” --சீடன்

"அஞ்சாதே மகனே! அருணகிரி தந்த அமுதுண்டு, நெஞ்சாரப் பாடு - முருகனின் தாள்பணிந்து! எழுத்துக்கள் அசைந்து இசைக்கோலம் பூணட்டும், உன் உள்ளத்து இருள் விலகி ஒளி காணட்டும்” -- குரு



## அருணகிரியின் ஒலி நயம்

**உமா பாலசுப்ரமணியன்**

https://tinyurl.com/5ecysxb2 ---4



அருணகிரிநாதரின் திருப்புகழ், "சந்தக் கவி" என்று போற்றப்படுவதற்கு உரியவாறு இசையும் தமிழும் இணைந்து, ஒலி நயத்தால் இறைவனை அடையும் ஒரு உன்னத கலைப்படைப்பாகத் திகழ்கிறது. பற்பல சந்தங்களை அவர் படைத்திருந்தாலும் திருப்புகழில் அவர் பயன்படுத்தும் வெவ்வேறு ஒலிகளின் "சந்தத் தமிழால் உலகையெலாம் தன்பால் இழுத்த அருணகிரி"என்று வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் அருணகிரிநாதரைப் போற்றுவது குறிப்பிடத் தக்கது.

"வில்லுக்கு விஜயன், சொல்லுக்கு அருணகிரி"என்ற பழமொழிக்கு ஏற்றவாறு ஒரே எழுத்தோ அல்லது குறிப்பிட்ட சில எழுத்துக்களோ மட்டும் வருமாறு பாடல் இயற்றுவதில் அருணகிரிநாதர் வல்லவர். உதாரணமாக "திதத்தத் தித்ததி திதிதிதி தீதிதி" "தத்தத் திதிதிதி தித்தித்த தீதி"என்று தகர வர்க்கத்தை மட்டுமே வைத்துப் பாடியிருக்கிறார். இப்படிப் பாடுவது மிகவும் கடினம். வெறும் ஒலிகளை வைத்தே ஒரு முழுமையான பாடலை இறைவனுக்கு அர்ப்பணித்தது இவரது தனிச்சிறப்பு.

“நிறைந்த அண்டமுகடு கிடுகிடுவென” என்று அண்ட அதிரொலியை ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். ‘எழுபடிகளும் அதிர்பட’ என்று உலகங்கள் அதிர்ந்து விழும் ஒலியைக் குறிப்பிடுகிறார். உலகத்தில் உள்ளவர்கள் எப்படி ஒலிக்கிறார்கள்?—“உலகர்கள் அரகர சிவ சிவ அபயம் அபயம் எனும் சத்தம் எங்கும் எழ “–என்று அழகாக அபயக் குரலை எழ வைக்கிறார் ”. “தக்குத்தக் குக்குக் குக்குட டுட்டென தக்குத் திக்கெட்டுப் பொட்டெழ” - என்று திசைகள் யாவும் பொடிபடும் ஓசையை நமக்குக் காட்டுகிறார் முனிவர் பெருமான்.கடல் கடைந்த ஒலியை எப்படிக் கூறுகிறார் தெரியுமா? ‘ஆலையாழி வலய முட்டவொர் ஓசையதாய் ஒலி திமித் திமித்திம்எனாவெழவே’ என்று--

'டுண்டுண் டுண்டுண் டிண்டிண்டிண்டிண்டிடியென விழும் தொளைகள் விடு கழை விரல் முறை தடவிய இசைகள் பலபல தொனி தரு' என்று குழல் ஓசையை நமக்குக் காட்டுகிறார். ஊதுகுழல் ஓசையை 'கொம்புகள் குகும் , குகும் குகுமென' என்று ஊதிக்காட்டுகிறார். 'சங்கு வெண் கொம்பு டிண் கடையுகமொடொலிய' என்று சங்கொலியையும் நமக்கு தெரியப் படுத்துகிறார்.

கிண்கிணி ஒலி இதோ–"சஞ்சலஞ்சல கொ." "நிறைந்த தெண்டிரை மொகு மொகுவென" என்கிறார் ஓசை நாயகன். கழல் ஒலியைக் கேட்க வேண்டுமா? 'தொந்தத் தொகுகுட என்பக் கழலொலி,'என்று கழலொலி அதிர்கிறது. 'கொஞ்சு கிண்கிணி' 'கிண்கிணி கிணின் கிணின்' என கழல் கொஞ்சுகிறது.'தந்தன தனதனந் தனவென சதங்கை கொஞ்சிட' என்று சதங்கை ஒலியையும் , " ஓசை பெற்ற சிலம்பு கலீர் கலீர் என" என்று சிலம்பொலியையும் ,'மணித் தண்டைகள் கலின் கலின் கலினென' என்று தண்டை ஒலியையும் ,காட்டுகிறார். நடன ஒலி- 'தகுதகு, செகசெக' என்பன. முருகனின் திருநடனம் அல்லது வீர நடை,

"குயில் வந்திசை தெந்தென என்றிட" என்று குயில் ஓசையை நம்மிடை வைக்கிறார்.

'தெந்தென அனிகாடை மயில் குயில் அன்றிலெனும் புனின் பல குரல் செய்து' என்று பல குரல் ஒலியை கேட்கச் செய்கிறார்அருணகிரிநாதர்.

திமிலை முதலிய வாத்தியங்களின் ஓசையை - 'திமிலை பறை அறைந்து' என்றும் ,"துடிகள் இடிமிக ஒத்து முழக்கிட" என்று துடி ஒலியையும் எவ்வளவு அழகாகச் சொல்கிறார் பாருங்கள்! "தரிகிட தந்தத் தரிகிட திந்தித் தகுர்தி எனும் கொட்டு" என்று கொட்டொலியையும்"செங்கைத்தமருகமததிர் சதியொடு" ,"டுடுடுடு டுடுடுடு" - என உடுக்கை ஒலிப்பது போலவும் ஒலிகளைக் கொண்டு வருகிறார். "குக்குக் குகு குக்குக் குகுகுகு குத்திப் புதை புக்குப் பிடியென முதுகூகை" என்று கோட்டான் ஒலியையும் , "சிலகூளிகள் டிண்டிண்டென்றுங் குதி போட" என்று கூளிகளின் ஓசையையும் சேர்க்கிறார். "கககக கககக" - என கழுகுகள் கத்துவது போலவும்.

"கைவளை கலகலென" என்று கைவளை ஓசையையும் ,சேர்க்கிறார்.

“குமர குருபர குமர குருபர என தாளம் குரை செய” என்று தாள ஒலியையும் திருப்புகழில் பல பாடல்களில் நம் முன்னே கொண்டு வருகிறார் அருணகிரி முனிவர். நடன ஒலியை விட்டு விடுவாரா வாக்கிற்கு அருணகிரி? – “திக்குக்குத் திக்குத் திகு திகு ....தித்தித் திதியென நடமாடும்”-ஆஹா! இப்படி ஓசைகளையும், ஒலிகளையும் சொல்லிக் கொண்டே போகலாம்.

“முத்தைத்தரு" பாடலில் வரும் "தத்தத்தன தத்தத்தன" என்ற சந்தம், ஒரு போர் வீரன் குதிரையில் ஏறிச் செல்லும் வேகத்தையும், அவனது ஆயுதங்கள் மோதும் ஒலியையும் ஒருசேரக் குறிப்பதாக அமையும். ஆயுத ஒலிகள் தான் எத்தனை வகை !

உங்களுக்குத் தெரியுமா? திருப்புகழில் வரும் இந்த ஒலிகள் வெறும் கற்பனை அல்ல; இவை "நாடி சுத்தி" செய்யக்கூடிய வல்லமை கொண்டவை என்று யோகக் கலை வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

“தகட தகட", "தகுதகு" போன்ற ஒலிகள் கேடயங்கள் ஒன்றோடு ஒன்று மோதும் ஒலியைக் குறிக்கும். அப்பப்பா! கேட்கவே அந்த கேடயங்கள் மோதும் உணர்வு வருகிறதே! “கிணுகிணு, தகதக” என்பன.வேல் மற்றும் வாளின் ஒளி/ஒலி யாகும் .

"நெறுநெறு" என எலும்புகள் நொறுங்கும் ஒலியைச் சந்தத்தில் அமைத்திருப்பார். "சலசல" - என இரத்தம் ஓடும் ஒலியையும் சித்தரிப்பார்.

பல இடங்களில் தமிழின் உசத்தியான இரட்டைக் கிளவியையும் பார்க்கலாம் .

“நெடியவடகுவடிடியவும்” என்று தொடங்கும் பாடலில், நெறு நெறென,மொகு மொகு ,குமு குமு , மொளுமொளு என்கின்ற இரட்டைக் கிளவி வார்த்தைகள் புகுத்தப் பட்டு நம்மை உற்சாகப் படுத்துகிறது.கலகல, தகு தகு , திமி திமி, கிணு கிணு , தக தக , மொறு மொறு ,துடி துடி , சலசல , மட மட என்பனவையும் சேர்த்துக் கொள்ளலாம் இவைகள் சில உதாரணங்கள் தான் .

திருப்புகழில் பல இடங்களில் சந்தங்கள் (தனன தனன) தமிழில் சிறந்ததாகக் கருதப்படும் இரட்டைக் கிளவியைப்போலவே ஒலித்தாலும், அவை பெரும்பாலும் தாளக் கட்டிற்காக உருவாக்கப்பட்டவை

ஒரு பழமுதிர் சோலை பாடல் முழுதுமே அவ்வாறு சிறப்புப் பெற்றது

சீர்சிறக்கு மேனி பசேல் பசே லென
நூபுரத்தி னோசை கலீர் கலீ ரென
சேரவிட்ட தாள்கள் சிவேல் சிவே லென ...... வருமானார்
சேகரத்தின் வாலை சிலோர் சிலோர் களூ
நூறுலக்ஷ கோடி மயால் மயால் கொடு
தேடியொக்க வாடி ஐயோ ஐயோ வென ...... மடமாதர்
மார்படைத்த கோடு பளீர் பளீ ரென
ஏமலித்தெ னாவி பகீர் பகீ ரென
மாமசக்கி லாசை யுளோ முளோ மென ...... நினைவோடி
வாடைபற்று வேளை அடா அடா வென
நீமயக்க மேது சொலாய் சொலா யென
வாரம்வைத்த பாதம் இதோ இதோ என ...... அருள்வாயே
பாரதத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடொடித்த நாளில் வரைஇ வரைஇ பவர்
பானிறக்க ணேசர் குவா குவா கனர் ..... . இளையோனே
பாடல்முக்ய மாது தமீழ் தமீழ் இறை
மாமுநிக்கு காதில் உணார் உணார் விடு
பாசமற்ற வேத குரூ குரூ பர ...... குமரேசா
போர்மிகுத்த சூரன் விடோம் விடோ மென
நேரெதிர்க்க வேலை படீர் படீர் என
போயறுத்த போது குபீர் குபீ ர் என ...... வெகுசோரி
பூமியுக்க வீசு குகா குகா திகழ்
சோலைவெற்பின் மேவு தெய்வா தெய்வா னைதொள்
பூணியிச்சை யாறு புயா புயா றுள ...... பெருமாளே.

தமிழின் பெருமையை திருப்புகழில் புகுத்தியிருப்பதை என்னெவென்று சொல்வது ?

தாள ஒலி -"தனதன, தந்தத்தன". இசை மற்றும் மிருதங்க தாளம் ஆகும் -

பல பாடல்களில் "ந்தன ந்தன" அல்லது "ம்தன ம்தன" என்று வரும்போது, அவை மூச்சை உள்வாங்கி வெளியிடும் ஒரு யோகப் பயிற்சியின் ஒலியை ஒத்திருக்கும்.

மேலும் பம்பை ஒலி, பறவைகள் ஓட்டும் ஒலி, மத்தள ஒலி , பறையொலி, பாம்பின் ஒலி, பேரிகை ஒலி, மணி ஒலி, மறையோதும் ஒலி, முரசொலி, முழவொலி விருதோதை, " கட கட கருவிகள் " போன்ற பல இசைக் கருவிகளின் ஒலி, பல்ல பல நாதங்களின் ஒலியை திருப்புகழ் பாடல்களில் நயம்பட சேர்த்திருக்கிறார் என்றால் அருணகிரிநாதரின் இசைப்புலமையை நாம் ஒருவாறு அறிந்து இன்புறலாம் .

போர்க்கள ஒலியை பாடலில் கேட்டாலே நம் மனம் அதிரும்.

"திமித திமி திமி மத்தளிடக்கைகள் செக சேசே எனவே துகு துகு துத்தென ஒத்துகள் துடிகள் இடிமிக ஒத்து முழக்கிட டிமுட டிமுடிமு டிட்டிம் என தவில் எழும் ஓசை இகலி அலகைகள் கைப்பறை கொட்டிட"-----

பேரிகை ஒலியைக் கேட்கவே வேண்டாம் ---

தத்தத்தனதன தானந தானன

டத்தக் குட குகு தாகுட தீகுட

என பேரிச் சத்தத்தொலி ------- இதுஒரு சிறு உதாரணமே! இப்படி பல ஓசைகளைக் கையாண்டிருக்கிறார் அருணகிரிநாதர்என்றால் வியப்பாகத்தான் இருக்கிறது..

மயில் நடனமாடுவது போலவே ஒலி அமைந்திருக்கிறது என்றால் ஆச்சரியமாகவே இருக்கிறது.

"தித்தா திரித் திகுட தத்தா தனத் தகுக கூகுக் கிணங் கிணென ஒரு மயில்"-

"தகதித்திமி தா கிணங்கிண எனவுற்றெழு தோகையம் பரி" ---

அது மட்டுமா? “ வெங்குக் குடத்த கொடி துங்குக் குகுக்குவென” என்று கோழிக்கொடியின் ஒலியையும் கூட்டியிருக்கிறார். பறவை ஒலி–“குகுகு, கிகிகி”, புறா அல்லது குயிலின் மென்குரல்ஆகும்.

மலர்களில் பரவும் வண்டை விடுவாரா?

“தனதானந் தானன தானன

என வேதம் கூறுசொல் மீறளி” ------

‘தானந் தனத்த தனனா வண்டு சுற்றி’ ‘மலரளி தன தனத்த  நந்தன தன தன என ஒலி’

அருணகிரிநாதரின் ஒலி நயத்தையும், அவரது திருப்புகழில் தெறிக்கும் சந்தத்தையும் பாராட்டிப் பாடிய பாடல்களில் மிகவும் பிரசித்தி பெற்றது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய  பாடல் இதோ--

"சந்தக் கவிச்சக் கரவர்த்தி யென்றொருபேர் தந்தத் தகுமிந்தத் தாரணியில் - எந்தத் திருப்புகழை யோதினுமே செந்திலிறை வற்கு விருப்புமிகும் இன்பச் சுவை."-------

“தத்தகத் தகிடவெனத் தாளங்கள் கொட்டிடவே சந்தத் தமிழால் சகலமும் வென்றாய்!”

“முத்தமிழ்ப் பாகனை முப்பொழுதும் பாடிடவே

முன்னவன் தந்தானே முக்தித் திருப்புகழ்!

நாதப் பெருங்கடலில் நற்றமிழை நீமூழ்கி

வேதப் பொருளையெல்லாம் வெண்பாவாய் வார்த்தெடுத்தாய்!

ஓதும் ஒலிதன்னில் உள்ளமெல்லாம் உருகிடவே

ஆதி பரமனையும் ஆட்கொண்டாய் அருணகிரியே!”

உள்ளம் உருக்கும் ஒலியமைத்து, ஓசை நயம் மெல்லத் தழுவ இசை அமைத்து - அள்ளித் தெவிட்டாத இன்பத் திருப்புகழைத் தந்தான் புவிபோற்றும் நாதக் குரு முருகனை வணங்கி அந்த அருணகிரிநாத குருவை ஏற்று , திருப்புகழ் பாடலாம் .

அருணகிரி நாதரின் அமுதத் தமிழை அகிலமெங்கும் இசைத்த அருட்சுடர்! சந்தக் குழிகளில் ராகம் நனைத்து பக்தியில் எம்மை நனைத்த பண்பாளர்! ஏழு ஸ்வரங்களில் முருகனைத் தந்தவர்! பாடும் வாய்க்குப் பழக்கப் படுத்தி ஆடும் மனதை அடக்கிய ஆசான்! சிறுவர் முதல் பெரியவர் வரை வகுப்பு எடுத்து வழிநடத்திச் சென்றவரின்,– "அன்பு" மட்டுமே முருகன் அருளாய் வழிந்தது அன்றோ! எளிய நடை, இனியதொரு பார்வை தெளிந்த ஞானம், தேர்ந்த இசை - இவை உம் அடையாளம் மட்டுமல்ல... எம் வாழ்வின் வழிகாட்டும் ஒளிவிளக்கு! காலம் கடந்தும் உம் ராகம் ஒலிக்கும் திருப்புகழ் ஓதும் ஒவ்வொரு இதழிலும்! குருஜி என்ற நாமமே போதும் - அந்த குகன் பாதம் சேர எமக்குத் துணையாகும்!

குருஜி ராகவன் அவர்கள், திருப்புகழை வெறும் பாடலாகப் பார்க்காமல், அதை ஒரு வாழ்வியல் முறையாகவும், எளிய வழிபாட்டு முறையாகவும் மாற்றியவர்.

திருப்புகழ் அன்பர்கள் இன்றும் அவரை ஒரு மாபெரும் வழிகாட்டியாகவே போற்றுகிறார்கள்.

அப்படிப்பட்ட நம் குருஜி கற்றுக் கொடுத்தவகையில் திருப்புகழ் பாடல்கள் பாடி இந்த உலகில்முருகனை நினைந்து உய்வோமாக!



## அன்பும் அவிரோதமும் உள்ளார்க்கு துணையாமே!



-Kalyani Jambunathan

https://tinyurl.com/mwteuraz ---5

அன்பின் உள் ளான்புறத்தான் உட லாயுளான்

முன்பின்உள் ளான்முனி வர்க்கும் பிரானவன்

அன்பின்உள் ளாகி அமரும் அரும்பொருள்

அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே-- திருமூலர்

ஆம் ! அன்பிற்கு வலிமை அதிகம் .

நமது குருஜி அவர்களும் நமக்கு இரண்டு ஒப்பற்ற உபதேசங்களாகிய அன்பையும் அவிரோதத்தையும் நம்முள் புகுத்தி நம்மை நல்வழிப் படுத்தியிருக்கிறார்கள்.

'அன்பு' என்ற சிறந்த சொல் திருப்புகழில் பல இடங்களில், சுமார் இருநூற்றுக்கும் (200) மேற்பட்ட பாடல்களில் இடம்பெற்றுள்ளது.

" உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே "----

"அன்புடன் ஆசார பூஜை செய்து உய்ந்திட வீணாள் படாது அருள் புரிவாயே"----

" அன்பு புரிவாயே"----

" அன்பொடு துதிக்க மனம் அருள்வாயே"----

"கந்தனென் றென்றுற் ...... றுனைநாளும்

கண்டுகொண் டன்புற் ...... றிடுவேனோ"-----

"அன்பாக வந்து உன் தாள் பணிந்து"-----

"தாளிலுறு வழியடிமை அன்பு கூருமது சிந்தியேனோ"-----

"சேர்க னம்பெரிய வாழ்வு கொண்டுழலு

மாசை வெந்திடவு னாசை மிஞ்சிசிவ

சேவை கண்டுனது பாத தொண்டனென .....அன்புதாராய்"---( ஈஎறும்பு )

இப்படிப் பல திருப்புகழ் பாடல்கள்.. சொல்லிக் கொண்டே போகலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, "தந்த பசி" என்று தொடங்கும் ஒரு திருச்செந்தூர் பாடலில்

"அந்தகனும் எனை அடர்ந்து வருகையினில் அஞ்சல் என வலிய மயில் மேல் நீ அந்த

மறலியோடு உகந்த மனிதன் நமது அன்பன் என மொழிய வருவாயே"----

என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார் .

ஒவ்வொருவருடைய இறுதிக் காலத்திலும் எமன் தொடர்ந்து வரும் போது முருகா நீ மயில்மீது வந்து " பயப்படாதே! இங்கே உள்ளவன் எனக்கு மிகவும் வேண்டப்பட்டவன், மிகவும் உகந்த மனிதன், இவன் எனது அன்பன்" என்று கூற வேண்டும் என்று இறைஞ்சுகிறார்.

"நமது அன்பன்" என்று கூறும் வார்த்தை. "மறலியே ! இவனை நீ தொடாதே! இவன் எனது அன்பன் "என்று சொல்லுவது போல் விளங்கி அன்பின் பெருமையை நமக்கு விளங்கவைக்கிறது.

"கெடாததவமே ம றைந்து கிலேசமது வேமி குந்து

கிலாதவுட லாவி நொந்து ...... மடியாமுன்

தொடாய்மறலி யேநி யென்ற சொலாகியது னாவ ருங்கொல்

சொலேழுலக மீனு மம்பை ...... யருள்பாலா" ( கொடாதவனையே )

அதனால் அன்பர்கள் ஒவ்வொருவரும் மனதிலே "அன்பே சிவம்" என்பதைக் கொள்ள வேண்டும் என்று தெரிகிறது. அதாவது, சக உயிர்களிடத்தில் நாம் காட்டும் உண்மையான அன்பே இறைத்தன்மை ஆகும். எங்கே அன்பு இருக்கிறதோ, அங்கே இறைவன் இருக்கிறான் என்பது உறுதி.இரக்கம், கருணை மற்றும் நிபந்தனையற்ற அன்பு ஆகியவற்றின் உச்சகட்டமே "சிவம்" எனப்படும் பேராற்றல் ஆகும் .

இந்த சதாசிவ அன்பு என்பது உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களை யெல்லாம் அழித்து தீவினைப் பலன்களைப் பொடிபடச்செய்து எல்லா ஜீவன்களிடத்தும் அன்பைக் காண வைத்து அத்வைத நிலையைத் தரும் நிலையை உண்டாக்கும்.

நமக்குள் அன்பு ஊறவேண்டும் என்றால் நாம் என்ன செய்தல் வேண்டும்? "யான், தான்" என்ற இரண்டு சொற்களையும் அறவே ஒழிக்க வேண்டும் . அதனால் நம் உள்ளம் தூய்மையாகி ஞானம் சுரந்து எவருக்கும் எட்டாத பரம்பொருளை திருப்புகழ் பாடல்கள் பாடுவதன் மூலம் காண முடியும்.

"தேனுந்து முக்கனிகள்" என்ற பாடலில்

" நான் என்பதற்று உயிரொடு ஊன் என்பதற்று வெளிநாதம் பரப்பிரம ஒளிமீதே ஞானம் சுரப்ப மகிழ் ஆனந்த சித்தியொடே நாளும் களிக்க பதம் அருள்வாயே" என்று அருணகிரிநாதர் இறைவனிடம் வேண்டுகிறார்.

இப்படி அன்பு தனித்தனியாக ஒவ்வொருவரிடமும் ஊறினால் மட்டும் போதாது , அன்பு கொண்ட அன்பர்கள் யாவரும் ஒன்று திரண்டு ஒரு அன்பர் கூட்டம் அமைக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

“ எனதியானும் வேறாகி எவரும் யாதும் யானாகும் இதய பாவனாதீதம் அருள்வாயே”– என்று வேண்டுகிறார் முனிவர். ( அமலவாயு)

அன்பாக வந்து உன்றாள் பணிந்து

ஐம்பூத மொன்ற ...... நினையாமல்

அன்பால் மிகுந்து நஞ்சாரு கண்க

ளம்போரு கங்கள் ...... முலைதானும்

கொந்தே மிகுந்து வண்டாடி நின்று

கொண்டாடு கின்ற ...... குழலாரைக்

கொண்டே நினைந்து

குன்றா மலைந்து ...... அலைவேனோ--- என்று கூறுகிறார் அருணகிரிநாதர்.

முருகா! உன் மீது மெய்யான அன்பு கொண்டு, உனது திருவடிகளைப் பணிந்து, எனது உடலில் உள்ள நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் போன்ற ஐம்பூதங்களும் ஒடுங்கி , உன்னோடு ஒன்றாகக் கலக்கும் அந்த நிலையை நான் நினையாது தவிக்கின்றேன். இறைவனிடம் காட்ட வேண்டிய அன்பை, சிற்றின்பத்தின் மீது திருப்பி, நஞ்சு போன்ற (மயக்கும்) கண்களையும், தாமரை போன்ற முகத்தையும் உடைய பெண்களின் அழகில் மயங்கிக் கிடக்கிறேன். அன்பு என்பது அடியில் (உடல் அளவில்) தொடங்கி, முடிவில் (இறைவன் தாள் பணியும் நிலையில்)

முடிய வேண்டும். ஆனால், மனிதன் அந்த அன்பை இடையில் உள்ள உடல் இன்பங்களோடு நிறுத்திக் கொள்கிறான். யோக சாஸ்திரப்படி, மூலாதாரத்தில் இருக்கும் சக்தி சகஸ்ராரத்தை அடையும் போது ஐம்பூதங்களின் ஆதிக்கம் நீங்கி, ஆன்மா இறைவனுடன் ஒன்றும். "ஐம்பூத மொன்ற" என்பது இந்த அத்வைத நிலையைக் குறிக்கிறது.அதனால் நாம் யாவரிடமும் அன்பு கொள்ள வேண்டும் என்று தெரிகிறது.

அருணகிரிநாதர் பெரிய ஞானியாவார். அவரே பல பாடல்களில் என்னை ஓர் அன்பர் கூட்டத்துடன் சேர்த்து வைக்க மாட்டாயா ?என்று இறைவனைக் கேட்கிறார். எல்லாம் நமக்காகத்தான் இறைவனுடன் வாதாடுகிறார்.

" கூளன் எனினும் எனை நீ உன் அடியரோடு கூடும் வகைமை அருள் புரிவாயே" என்று வேண்டுகிறார்.(சீறலசடன்)

"தம் பராக்கற நின்னை உணர்ந்து உருகிப் பொற்பத்மக் கழல் சேர்வார் தம் குழாத்தினில் என்னையும் அன்போடு வைக்கச் சற்றுக் கருதாதோ" என்றும் வேண்டுகிறார். (வம்பறா)

உன்னை நினைத்து உன் பொற்கழல்களை உருகிப் பாடும் அன்பர்கள் கூட்டத்தில் கொஞ்சம் என்னைச் சேர்த்து விட மாட்டாயா ?என்று இறைஞ்சுவது தெரிகிறது . நாம் கேட்க வேண்டியவைகளை அவர் நமக்காக முருகனிடம் கேட்கிறார்.

" அவசமாகி உருகு தொண்டர் உடனதாகி விளையும் அன்பின் அடிமையாகும் முறைமை ஒன்றை அருள்வாயே " என்கிறார்.(முறுகு)

அதாவது "தன் வசம் இழந்து உன்னையே நினைத்து உருகும் தொண்டர்கள் கூட்டத்தில் நான் சேர்ந்து அதனால் விளையும் அன்போடு உனக்கு அடிமையாகும் வழிமுறையை நீ தர வேண்டும்" என்று முருகனைப் பிரார்த்திக்கிறார்.

“உனைப்பல நாளும் திருப்புகழாலும் உரைத்திடுவார் தங்குளி மேவி என்றும்”, “அறிவால் அறிந்துன் இருதாள் இறைஞ்சும் அடியார்” என்றும், ‘திரோதமலமாறும் அடியார்கள்’ என்றும் , ‘தினமும் உனது துதி பரவிய அடியவர்’ என்றும் கூறி அடியவர்களைப் பெருமைப் படுத்துகிறார் முனிவர். சரி ! அடியவர்கள் ஏன் சிறந்தவர்கள் ?

‘அடியவர் சிந்தை வாரிஜ நடுவின்’ இருக்கிறான் முருகன்.’அடியவர் அச்சத்தழுங்கிடும் துயர்தனை ஒழிவித்து ப்ரியங்கள் தந்திடும்’ முருகன்.’சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியானவன் “ முருகன்”

"சீரையோது பக்தர் அன்பில் உறைவோன்"“புவனநாடும் அடியார்கள் மனதுறைவோன்”, “தேடித் துதித்த அடியார் சித்தமுற்றருளு சீர் பொற் பதத்தன்”முருகன் . அதுமட்டுமல்ல ‘கூறும் அடியார்கள் வினை நீறுபடவே அரிய கோல மயிலான பதம் அருள்வோனாக’ விளங்குகிறான் .’அடியவர் உருகிட பிணிகெட அருள் தரு குமரேசன் ‘ஆவான் . இப்படியாக முருகன் “கருத்திலுற்றுரைத்த பத்தரை மெய்ப்பதத்தில் வைத்திடு வீரா” என்று சொல்லும்படி இருக்கின்றான். வேண்டியபோது அடியர் வேண்டியபோகமது வேண்ட வெறாது உதவும் பெருமாள்’ அல்லவா முருகப்பெருமான் !

ஆகையால் முதலில் நமக்குள் அன்பு வரவேண்டும் பிறகு ஒரு அன்பர்கள் கூட்டத்தில் நாம் சேர வேண்டும். அது மிகவும் இன்றியமையாதது. நாமும் குருஜி அவர்கள் உருவாக்கிய அன்பர் கூட்டத்தில் இருந்து கொண்டு திருப்புகழ் கற்கவும் , ஓதவும் , முத்தமிழ் தத்துவ ஞானத்தை அருள் புரிய முருகனை வேண்டி நிற்போம் . திருப்புகழ் அன்பர்களாகிய நாம் இன்பந்தந் தும்பர்தொ ழும்பத கஞ்சந்தந் தஞ்சமெ னும்படி யென்றென்றுந் தொண்டுசெயும்படி அருள்வாயே என்பதற்கு ஏற்ப தொண்டு செய்தல் வேண்டும் .

அடுத்ததாக, இரண்டாவது உபதேசம் அவிரோதம். அவிரோதம் என்றால் விரோதம் இல்லாமல், அதாவது பகைமை இல்லாமல் இருப்பது என்பது பொருள்.

இக் கருத்தை சோமநாதன் மடம் திருப்புகழ் பாடலில் காணலாம் .

"எமபடரை மோதும் மோன உரையில் உபதேச வாளை எனது பகை தீர நீயும் அருள்வாயே" (ஒருவழிபடாது) என்று அருணகிரிநாதர் உருக்கமாக வேண்டுகிறார்.

தனது அகப்பகை, புறப்பகை யாவும் ஒழிய அன்போடு அருள வேண்டும் என்று கேட்கிறார்.

நமக்குள் தொற்றிக் கொண்டிருக்கும் பொறாமை, கோபம், காழ்ப்புணர்ச்சி. போன்ற அகப்பகை முதலில் நீங்க வேண்டும்.

அவ்வாறே புறப்பகையும் நீங்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்.

மற்றுமொரு பாடலில் அவிரோதம் என்ற சொல்லையே அழகாகக் கையாண்டு அதன் பெருமையைக் கூறுகிறார்

"கருதி உருகி அவிரோதியாய் அருள்பெருகு பரம சுக மா மகோததி கருணை அடியரோடு கூடி ஆடி மகிழ்ந்து நீப "— --( சுருதி வெகுமுக)

எல்லா உயிர்களும் எனது உயிரின் பகுதிகளே எனும் பேதமற்ற மனம் உடையவனாக ,உனது அன்பாகிய, கருணையாகிய அருள் நிறைந்த மேலான இன்பப் பெரிய கடலில் முருகா ! உன் அடியவர்களுடன் கூடி ஆடி மகிழ வேண்டும் என்று தன் எண்ணத்தை வெளிப்படுத்துகிறார் முனிவர் . எவ்வளவு உயரிய பண்பு !

அன்பு இருந்தால் அவிரோதம் தானே வந்துவிடும். ஆனால் அவிரோதம் இருந்துவிட்டால் ? அன்பு வரவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இருவர் இடையே தொடர்பு இல்லாவிட்டால் விரோதமே வராதே!அவரவர்கள் தத்தம் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்விடுவார்கள். அதனால் அவர்களிடம் அன்பு மலர வேண்டிய கட்டாயம் இல்லை.

நாம் குருஜி திரு ஏ.எஸ் .இராகவன் அவர்கள் அமைத்துக் கொடுத்துள்ள 'திருப்புகழ் அன்பர்கள்' என்ற ஒரு குடும்பத்தில் இருப்பதனால்,ஒருவருக்கு ஒருவர் தொடர்பு இல்லாமல் இருக்க முடியாது. நம்முள் அன்பு , அவிரோதம் இரண்டும் மிகவும் அவசியமாகிறது.

ஒருவருக்கொருவர் அவிரோதமில்லாமல் அன்பாகப் பழகி உறவாடிப் பாடி மகிழ்ந்து கூட்டுப் பிரார்த்தனையாக இசை வழிபாடு செய்ய வேண்டும் என்பதே குருஜி அவர்கள் நமக்கு அளித்திருக்கும் பணியாகும் .

கலக்குண்டாகு புவிதனில் எனக்குண்டாகு பணிவிடை கணக்குண்டாதல் திருவுளம் அறியாதோ'(புவிக்குன் ) என்ற வரிகளுக்கு ஏற்ப

இந்தப் பணியை ஆண்டவன் நமக்கு விதித்திருக்கும் பணியாக எண்ணி செவ்வனே செய்ய வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

"யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்" (க.அ)

என்பதற்குத் தக்கவாறு ஆண்டவன் அவரவர்களின் சக்திக்கும், ஞானத்திற்கும் ஏற்ப அவர்களைப் பாட வைக்கிறான். ராக பாவ தாளத்தோடு பாட முடியாத அன்பர்கள் கூடத் திருப்புகழை உரைநடையிலேயே படித்தாலும் முருகன் அவர்களின் குறைகளை நீக்கி அருள் புரிகின்றான் .

அன்பு , அவிரோதத்திற்கு முருகனே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு . தன்னுடன் பகைமையோடு போர் புரிந்த சூரபத்மனைக் கொன்று அழிக்காது, அவனை

கருணையுடன் ஆட்கொண்டு, தன்னுடனே இருக்கும்படியாக மயில்வாகனமாகவும், சேவற் கொடியாகவும் ஏற்றுக் கொண்டு அருளினானே! .

ஆகவே ஆணவமற்று, அன்பு மற்றும் அவிரோதத்தை உள்ளத்திலே பெருக்கிக் கொண்டு, நமது குருஜியின் துணையுடன் .

இன்பம் தந்தும்பர் தொழும் பத கஞ்சம் தம் தஞ்சம் எனும் படி என்றென்றும் தொண்டு செய்யும்படி அருள்வாயே "என்று முருகனைப் பிரார்த்தித்து ,"உன் பெரும் தொண்டன் என்று உய்ந்து உளம் கனியேனோ" என்று கூறி " மரகத மயில்மிசை வரு முருகனும் என வாழ்க்கைக்கொர் அன்பு தருவாயே"என்று வேண்டி நிற்போம்!

**அன்பாகப் பேசவேண்டும்,இனிமையாகப் பேச வேண்டும்.பிறர் மனம் நோகாமல் பேச வேண்டும். பேசாமல் இருக்கப் பழக வேண்டும். Guruji**



# முரட்டுப் புலவனை முட்டை பெயர் செப்பிக் கவி பெறு பெருமாள்



## திருமதி சித்ரா மூர்த்தி

https://tinyurl.com/3spdxp9c 6

**முருகனின் சாமர்த்தியம் அளவில் அடங்கா. அததி திரி தரு கவி ஆளப் புயங்கொண்டருள்வோன்,கலை கற்றார் சொற் கேட்கத் தனிவழி வருவோன், முற்பாடப் பாடற்றாருக்கோர் முட்காடற்கப் பொருள் ஈபவன், முரட்டுப் புலவனை முட்டை பெயர் செப்பிக் கவி பெற்றவன் ஆவான்.**

அதி மதுரச் சித்ரப் பாடல்களாகப் போற்றப்படும் திருப்புகழ் முதலான நூல்களில் அருணகிரிநாதர், முருகனின் பல அருள் விளையாடல்களைப் பாடியுள்ளார். அறுபத்து நான்கு( 64) திருவிளையாடல்களை மதுரையில் நிகழ்த்திய தந்தைக்கு சற்றும் இளைத்தவனல்ல சிவசுதன் என்பதைப் பல பாடல்களிலும் குறிப்பிடுகிறார். **“பத்தித்தர”** எனத் துவங்கும் திருப்புகழில் **“முற்பட்ட முரட்டுப் புலவனை முட்டை பெயர் செப்பிக் கவி பெறு பெருமாளே**” என்று பொய்யா மொழிப் புலவரைப் பற்றிய குறிப்பை வைத்துள்ளார். பொய்யாமொழியாரை முருகப் பெருமான் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சியை இங்கு பார்ப்போம்.

பொய்யாமொழியார், தொண்டை நாட்டிலுள்ள துறையூரிற் பிறந்தவர். அம்பலத்தரசன் என்பது பெற்றோர் வைத்த பெயர். கவிதை புனையும் ஆற்றல் இளம் வயதிலேயே அவருக்கு வாய்த்திருந்தது. “வயிரபுரம்” என்ற ஊரில் கல்வி கற்று , அவ்வூர்க் காளியின் பெரும் பக்தராக விளங்கினார். ஆசிரியருடைய பேரன்பிற்குரிய மாணாக்கராகவும் விளங்கிய அவர் ஒரு நாள் ஆசிரியருடைய நெற் கொல்லையைக் காவல் செய்து வந்த நேரத்தில், அவ்வூர் அரசன் காளிங்கனுடைய குதிரையானது வயலிலிருந்த பயிரை மேய்ந்துவிட்டது. ஆசிரியர் கோபித்துக் கொள்வாரே என்று பயந்து தன் இஷ்ட தெய்வத்தைத் துதித்து ஒரு கவி பாடினார் அம்பலத்தரசன்.

***வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே***
***ஆய்த்த மணலில் அணிவரையில் - காய்த்த***
***கதிரை மாளத் தின்னும் காளிங்கன் ஏறும்***
***குதிரையை மாளக் கொண்டு போ.***

என்று பாடியதும், குதிரை கீழே விழுந்து மாண்டது. அரசனின் கோபத்துக்கு ஆசிரியரும் தானும் ஆளாகிவிடுவோமோ என்று பயந்த அம்பலத்தரசன், மக்கள் கேட்டுக்கொண்ட படி, பாடலை மாற்றி, இறுதி அடியில்**, “குதிரையை மீளக் கொண்டு வா”** என்று பாட, குதிரை உயிர் பிழைத்து எழுந்தது. அவருடைய

ஆசிரியர், மிகுந்த மகிழ்ச்சி கொண்டு அவரை மெச்சி "இனி நீ பொய்யாமொழி என்றே அழைக்கப்படுவாய்" என்று ஆசீர்வதித்தார்.

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர், ஆரம்ப காலத்தில் சிவனைத் தவிர வேறு தெய்வங்களைப் பாடுவதில்லை என்று உறுதி பூண்டிருந்தார். தீவிர சக்தி உபாசகரான பொய்யாமொழியாரும் காளியைத் தவிர வேறு தெய்வங்களைப் பாட மறுத்து வந்தார். ஒரு நாள் பெரியவர் ஒருவர், முருகன் மீது உலா [ 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று] பாடித் தருமாறு கேட்டுக்கொண்டார். "கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடுவேனோ?" என்று கூறி முருகன் மீது கவி பாட மறுத்துவிட்டார். தன் மருமகனைப் பாட அந்தக் கவி மறுத்ததனால் லட்சுமிதேவியும் அவரை விட்டு நீங்கிவிட்டாள்.

அதுமுதல் பொய்யாமொழியார் வறுமையால் வாட ஆரம்பித்தார். ஊர் ஊராகச் சென்று கவிபாடி பொருள் ஈட்டி வருமாறு மனைவி கூற, புலவர், வீட்டை விட்டு வெளியேறினார். பல ஊர்களுக்கும் பயணித்த பின் , மதுரை வந்த புலவர், பாடல்கள் பல பாடி, அரசனிடம் பொன்னும் பொருளும் பெற்றார். பொற்றாமரைக் குளத்தில் மூழ்கிக் காணாமல் போயிருந்த சங்கப் பலகையைப் பாட்டுப் பாடி மேலெழச் செய்த போது, அரசியும், அவருக்கு ஏராளமான பரிசுகளை அளித்துக் கௌரவித்தாள். திரண்ட செல்வத்தை எடுத்துக் கொண்டு, தன் ஊருக்குத் திரும்பலானார் புலவர்.

காட்டு வழியில் வந்து கொண்டிருந்த புலவரை, வேடன் ஒருவன் வழிமறித்தான். கையிலுள்ள பொருளையெல்லாம் தன்னிடம் கொடுத்துவிடும்படி அவரை மிரட்டினான். புலவரோ, "பேசாதே! உன்னை வசை பாடியே ஒழித்துவிடுவேன்" என்று கோபமுடன் கூறினார். கத்தியைக் காட்டி வேடன் பயமுறுத்தவே, 'நாம் வசைபாடி முடிப்பதற்குள், நம் உயிரே போய்விடும் போலிருக்கிறதே' என்று எண்ணி பயந்த புலவர், வேடனிடம், "நான் ஒரு ஏழைப் புலவன். ஊர் ஊராகச் சென்று கவிபாடிப் பொருள் சேர்த்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன்; மனைவி காத்துக் கொண்டிருப்பாள்; என்னை விட்டுவிடு" என்று கெஞ்சினார்.

"ஓஹோ! நீர் ஒரு கவியா? எங்கே, இப்பொழுது 'முட்டை' எனும் என் பெயரை வைத்து ஒரு கவி பாடும் பார்க்கலாம்!" என்றான் வேடன். 'இது ஒரு மிக அதிசயமான பெயராக இருக்கிறதே!' என்று எண்ணிய புலவர், வேறு வழியின்றி, நற்றாயிரங்கல் துறையில் பின் வரும் கவிதையைப் பாடினார்.

***பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே***
***என் பேதை செல்லற்கு இயைந்தனளே – மின்போலு***
***மான வேல் முட்டைக்கு மாறாய தெவ்வர் போல்***
***கான வேல் முட்டைக்குங் காடு***

*[முட்டைக்குங் காடு – முள் தைக்கும் காடு]*

பச்சையாக உள்ள பால் நிறைந்த கள்ளிச் செடிகள் கூட எரிந்து போகுமளவு அதிகமாக வெயில் வீசும் காட்டு வழியில் செல்ல என் மகள் சம்மதித்தாளே! கூர்மையான மின்னல் போல் ஒளிரும் வேல் உடைய முட்டை என்ற பேர் கொண்ட

வேடனுடைய பகைவர்கள், அவனிடம் தோற்று மன்றாடித் திரும்பிப் போகும் அந்தக் காட்டில், வேல மரங்களின் முள், அவள் காலில் தைக்குமே!

என்பது தான் இப்பாடலின் பொருள்.

பாடலைக் கேட்டுப் பலமாகச் சிரித்த வேடன், “உங்கள் பாடலில் பொருட்குற்றம் உள்ளதே!” என்று கூறியதைக் கேட்டு அதிர்ந்தார் புலவர்.

“பாலுள்ள கள்ளிச் செடிகள் பொறி பறக்கத் தீப்பற்றி எரியக் கூடிய இக் காட்டில், வேல மரத்து முள் மட்டும் எரிந்து சாம்பலாகாதா? பின் அது எப்படி, அப் பெண்ணின் காலில் தைக்கும்?” என்று கேட்ட வேடன், “சரி, உம் பெயர் என்ன?” என்றான். “பொய்யாமொழி” என்று புலவர் கூறியதும், “ஆம் பொய் + ஆம் + மொழி” என்று சிரித்து விட்டு, வேடன் பின் வரும் பாடலைப் பாடினான்.

***விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும், வீழின்***
***எழுந்து சுடர் சுடுமென்றுஞ் - செழுங் கொண்டல்***
***பெய்யாத கானகத்துப் பெய்வளையும் போயினளே***
***பொய்யா மொழிப் பகைஞர் போல்***

என்பது அந்தப் பாட்டு.

“மேலிருந்து விழுந்த மழைத்துளி அதிக வெப்பம் காரணமாக வானத்திலேயே வெந்துவிடும்; விழுந்தால் காட்டின் வெப்பமானது மேலெழுந்து சுடும் என்றும் எண்ணி, நீர் நிறைந்த மேகம் மழையைப் பொழியாத இக்கானகத்தில் பொய்யாமொழிப் பகைவர் போல வளைகள் அணிந்த பெண்ணும் சென்றாளே” என்பது இப்பாடலின் பொருள்.

“சரி ! கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாட மாட்டேன் என்று சொன்னாயே, இப்போது குஞ்சையும் பாடி, முட்டையையும் பாடி விட்டாயே!” என்று வேடன் கூறக் கேட்டு திடுக்கிட்ட புலவர், “நீ யார்? உண்மையைச் சொல்” என்றார். முருகன், அவர் முன் தன் சுய உருவத்தைக் காட்டிச் சிரித்தான். ஆணவம் எல்லாம் அடங்கிய நிலையில் முருகன் காலில் விழுந்து கதறினார் பொய்யாமொழியார். தன் தந்தை வேறு, தான் வேறு அல்ல என்ற பரப்பிரும்ம தத்துவத்தை உபதேசித்து, அவர் நாவில் ஷடாக்ஷர மந்திரத்தை வேலால் பொறித்து மறைந்தான் முருகன்.

சிவகுமரனைப் பாட மறுத்த பொய்யா மொழியாரை ‘முரட்டுப் புலவன்’ என்று அருணகிரியார் கூறியுள்ளதில் வியப்பேதுமில்லை.

‘கடகட’ எனத் துவங்கும் கதிர்காமத் திருப்புகழில்,

“**அயில அவசமுடன் அததி திரி தரு**
**கவி ஆளப் புயங்கொண்டருள்வோனே”**

என்றும் அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

[மயக்கமுடன் அந்த ஒரு சமயத்தில் காட்டு வழியில் போய்க்கொண்டிருந்த கவியாகிய பொய்யாமொழியை ஆண்டருள வேலைத் தோளில் ஏந்திச் சென்று அருள் புரிந்தவனே!]

'சிற்றாய' எனத் துவங்கும் திருப்புகழில்,

**"கல் தா வில் காட்டிக் கரை துறை**
**நற்றாயிற் காட்டிப் புகழ் கலை**
**கற்றார் சொற் கேட்கத் தனிவழி வருவோனே"**

[கரைதுறை = சொல்லுகின்ற துறையை]

"கல் மலையைப் போன்ற வலிமை கொண்ட வில்லைக் காட்டி, சொல்லப்படுகின்ற துறையை 'நற்றாயிரங்கல்" துறையாகப் பாடிக் காட்டிப் புகழ்ந்த, கலைகள் கற்றவராகிய பொய்யா மொழிப் புலவரின் பாடல் கேட்கத் தனியாக அவர் வந்து கொண்டிருந்த காட்டு வழியில் வந்தவனே" என்பது இப்பாடலின் பொருள்.

ஒரு பொதுப் பாடலில்,

**"முற்பாடப் பாடற்றாருக்கோர்**
**முட்காடற்கப் பொருளீவாய்"**

என்று பாடியுள்ளார் முனிவர். [பொய்யா மொழிப் புலவன் முன்னதாகப் பாட, அப்பாடலைக் குற்றமின்றிப் பாடும் திறமையற்ற அப்புலவருக்கு 'ஓர் முள் தைக்கும் காடு' என்று அப்புலவர் குறித்த இடத்தில் பிழை இருந்ததைக் காட்டி, சரியான பொருள் முறையைக் காட்டும் பாடலைப் பாடி அளித்தவனே]

சிவனைத் தவிர வேறு யாரையும் பாடாதிருந்த நக்கீரரைத் தடுத்தாட் கொண்டு, "திருமுருகாற்றுப்படை"பாட வைத்த குமரன், பொய்யாமொழிப் புலவரின் செருக்கையும் அடக்கியதில் வியப்பேதுமில்லை.

அருணகிரிநாதரின் திருப்புகழ் எனும் கருவூலத்தைத் திறந்து, இது போன்ற எண்ணற்ற முத்துக்கள் அடங்கிய சந்தப் பாக்களை எடுத்து, அவற்றின் சந்தத்திற்கேற்ப அழகிய ராக தாளங்களில் மெட்டமைத்து நமக்கு கற்றுக் கொடுத்தவர் நமது பெருமதிப்பிற்குரிய குருஜி அவர்கள். அவரது நூற்றாண்டு விழா கொண்டாடத் துவங்கும் இந்நேரத்தில் வாழ்க்கைக்குத் திருப்புகழ் என்றில்லாமல், வாழ்க்கையே திருப்புகழாக அமைத்துக் கொண்ட அம்மஹானுக்கு நமது தாழ்மையான வணக்கங்களை தெரிவித்துக் கொள்வது சாலப் பொருத்தமே.

திருப்புகழ் பாடினால் நெருப்பையும் எரிக்கும் என்கிறார் அருணகிரி நாதர்.நெருப்பை எப்படி எரிப்பது?நமக்குள்ளே எழும் கோபம் நெருப்பு போன்றது.கோபம் வந்தால் கண் சிவந்து உடம்பு சூடு ஏறுகிறது.நெருப்பு போன்ற கோபத்தை எரித்து சாம்பலாக்க திருப்புகழ் நமக்கு உதவுகிறது.



## மௌனம்  பேசுகிறது.

**என். சந்தானம் ( பெங்களூரு)**

https://tinyurl.com/444h938n ---7



**"சென்றிடு மன்பின் வழியே மனமெனினும் குன்றின்மேல் நின்றார் குணம்"** என்பது ஔவையார் வாக்கு.

நம்முடைய அன்பு எங்கே இருக்கிறதோ, அங்கேதான் மனம் தானாகச் செல்லும். உயர்ந்த குணமுடையவர்கள் எப்போதும் தம் மனதை நல்வழியில் செலுத்துவார்கள்.

சரி ! மனம் மௌனமாக இருக்குமா? அது முடியுமா?

மனம் அடங்கி மௌனமானால் ,அங்கே பேரின்பம் தோன்றும் என்பதைத் திருமூலர் இவ்வாறு கூறுகிறார்:

**"மௌனம் என்பது பாச மறுப்பு .மௌனம் என்பது பரம சுகம். மௌனம் என்பது ஞான வரம்பு ,மௌனம் என்பது முத்தி நிலை."**

அப்படியென்றால் மனம் மௌனமாக இருக்கும் நிலை எப்போது நிகழும்? இந்த வினாக்களுக்கான விடைகளைத் தேட நாம் முற்படுவோம்.

மனத்தில் எப்போதும் ஆசை, நிராசை, முயற்சி, தோல்வி என்று பல வண்ணங்கள் கொண்ட எண்ணஅலைகள் தோன்றிக்கொண்டே இருக்கும். நல்ல விஷயங்கள் வரும்போது அமைதியாக இருக்கும் மனம், எதிர்மறை எண்ணங்கள் வரும்போது, இரைச்சலுடன் காணப்படும். அந்த இரைச்சல் நம் அமைதியைக் கெடுக்கும் வண்ணம் இருக்கும்.

அருணகிரி நாதர் ,நம் மனத்தினை முருகன்பால் மட்டுமே செலுத்த வேண்டும் என்று உறுதியாகக் கூறி, மனக் கவலை ஏதுமின்றி முருகனுக்கு அடிமையே புரிய பல இடங்களிலும் இதைப் பற்றி எழுதி நமக்கு அறிவுறுத்துகிறார். **"மனமே!"** என்று விளித்து, நம் குருஜி அவர்கள் அருணகிரிநாதரின் மூன்று திருப்புகழ் பாக்களின் மூலம் மனத்தின் வெவ்வேறு நிலைகளை விளக்குகிறார்.

அவற்றை இங்கு நோக்குவோம்.

மனம் முருகனை விட்டு வெளியே சென்று உழலும்போது, அமைதி இழந்து, பல்வேறு சிந்தனைகளிலும் மற்றும் செயல்களிலும் இறங்கிவிடும். அந்த மனமானது, உடம்பையும் இழுத்துச் சென்று, தேவையற்ற விஷயங்களில் புகுத்தி உடலும் மனமும் வெகுதூரம் போய் அலையுமாறு , நொந்து வழுவி ஆழத்தில் விழுமாறு செய்து விடுகிறது.

அப்படிப்பட்ட மனம், இரைச்சல்களினால் அமைதியை இழந்து எப்படி ஈடேறுவது என்று தவிக்கும்போது குருவானவர், அருகிலிருந்து, அன்புடன் நற்சொற்களை, அழுத்தமாக, அமைதியாக மனதிற்கு உரைக்கிறார். அந்தத் தருணத்தில் அந்த மனம், எந்த நிலையில் உள்ளது என்பதையும் கீழ்கண்டவாறு போதிக்கிறார்.

**“பாட்டில் உருகிலை கேட்டும் உருகிலை…பாட்டை அனுதினம் ஏற்றும் அறிகிலை…பாழ்த்த பிறவியில் ஏற்ற மனது நல்வழி போக மாட்டம் எனுகிறை”**… (பாடலின் ஒரு பகுதி மட்டும் ). (மாட்டம்- மாட்டேன்)

“இறைவனைத் துதிக்காமல், மற்றவர்கள் துதிப்பதையும் செவி மடுக்காமல், தான் படும் பாட்டை உணர்ந்து அறியாமலும் இருக்கும் மனமே! நீ இந்தப்பாழ்த்த பிறவியிலிருந்து கரையேற ஏன் நல்வழி போக மாட்டேன் என்கிறாய் ?”என்று கவலையுடன் வினவுகிறார் முனிவர்.

மனது ஓரளவு சற்று யோசிக்கிறது. இப்பொழுது தன் குறைஅதற்குப் புரிகிறது. இருந்தாலும் மீள வழி தெரியாமல் தவிக்கிறது. நெஞ்சக் கன கல்லானது நெகிழ்ந்து உருகுவதைக் கண்ட குரு, இதுவே உபாயம் கூறும் தருணம் என்று மேலே மனதிற்கு உரைக்கிறார்.

**“பார்த்தும் இனி ஒரு வார்த்தை அறைகுவன், இது கேளாய் மனமே!.**

**வாக்கும் உனது உள நோக்கும் அருளுவன். ஏத்த புகழ் அடியார்க்கும் எளியனை வாழ்த்த, இருவினை நீக்கும் முருகனை மருவாயோ மனமே.!”-------**

“மனமே! உனது நிலையைப் பார்த்து உனக்கு நான் சொல்லும் ஒரே சொல் என்னவென்றால் , முருகனிடம் உன் சிந்தனையை செலுத்து, அவன் திருப்புகழ் பாடு ,அவன் அடியார்க்கு எளியவன், உன்னை நல்ல புகழ் பெறவைத்து நற்கதி தந்து உய்விப்பான்” என்கிறார்.

இப்படி நோயையும், அதைத் தணிக்கும் மருந்தையும், ஒரு சேர அருணகிரியார் ஒரேபாடலில் கொடுக்க, நம் குருஜி அவர்கள் தற்கால நிலையை உரைக்கும்போது கண்டித்தும் , உலகத்தில் உய்ய வழி சொல்லும்போது அந்த அமைதியை உணரவும் , இனிய **‘சங்கரானந்தப்ரியா’** ராகத்தில் பாடலை அமைத்துள்ளார்.

இப்போது, அந்த மனம் பண்பட்டு, பக்திவழி என்னும் நல்வழியில் செல்ல ஆரம்பித்து விட்டாலும், தன் கவனத்தை , உடலைப் பேணி பாதுகாப்பதிலேயே செலுத்துகிறது.

உடல் செய் கோர பாழ் வயிற்றை உணவால் உயர்த்துவதில் திருப்புகிறது. குரு இதனைக் கண்டு, கழிவிரக்கம் கொண்டு, இன்னும் உன்னதமான வழிகளை மனத்துக்கு உரைத்தலுற்றார்.

**“அந்தோ மனமே! நமது ஆக்கையை நம்பாதே. இத அகித சூத்திரம். ... இனிமேல் நாம் அஞ்சாது அமையா! ஆக்கையை ஒழியாமல் வந்தோம்—"-**

“மனமே நமது உடலை நம்பாதே, அது இன்பமும், துன்பமும் நிறைந்தது. அழிந்து போவது, இனிமேலும் நாம் , உடலைப்பற்றிய கவலையையும் , நினைப்பையும் விட்டுவிடுவோம். உடல் பற்றிய சிந்தனையை ஒழித்துவிட்டு நற்கதி பெறலாம்” என்று அருணகிரிநாதர் அழகான எளிய வழிகளைச் சொல்கிறார்.

**“கிரி யாக்கையை பஞ்சாடிய வேலவனார்க்கு இயல் அங்காகுவம் வா.”**

**” இந்தா மயில் வாகனர் சீட்டு. வந்தாளுவம் நாம் என வீக்கிய திரு நீறும் வெகுவாய் நமை ஆட்கொள உவந்தார். மைந்தா குமரா எனும் ஆர்ப்பு உய மறவாதே, இதுவே கதி மனமே…”**

“ இனியாவது, நாம் வேலவனின் அன்பு கிடைக்க விழைவோம். அவர் கிரெளஞ்ச மலையின் உடலை எளிதில் தூளாக்கினார். அவரே மனம் உவந்து வந்து நம்மை ஆட்கொள்வதற்காக நமக்கு அனுமதி சீட்டும், உயரிய திருநீறும் அனுப்பியுள்ளார். இனி நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், அவரை எப்போதும் குமரா!, சிவமைந்தா !என்று துதிப்பது மட்டுமே. வேறேதும் செய்யத் தேவைஇல்லை” என்று பலவாறாகவும் உறுதி கூறுகிறார்.

இப்பாடலை நம் குருஜி சாந்தமான தொனியில் ஒவ்வொரு சொல்லும் நம் மனத்தில் பதிய வேண்டி **கல்யாணி ராகத்தில்** அமைத்துள்ளார் என்றே சொல்லலாம்.

மனம் ஒரு நிலைக்கு வந்து, எப்போதும் முருக நெறியிலேயே இருக்கிறது. முருகனின் சாமீபத்திலேயே இருக்கிறது. அதீத மௌனத்திலேயே தன்னைக் கரைத்துக் கொள்கிறது. அதைக் கண்ணுற்ற குரு, தான் உரைத்த நெறியைக் கைக்கொண்டு, அந்த மனம், முருகன் அருகிலேயே இருப்பதை கண்டு, அந்த மனத்தினிடம் சந்தோஷமாகச் சொல்கிறார்.

**“மனமே, உரைத்த மொழி தவறாதே! நினைவேது உனக்கு! மயில் வாகனக்கடவுள் அடியார் தமக்கரசு மனமாயை அற்ற சுக மதி பாலன். சிவலோகமிட்டு மல நிலை வேரறுக்க வல்ல பிரகாசன். அவரே பரப்பிரமம். நமக்கு உறுதி. நிழல்ஆளியை தொழுது வருவாயே, மனமே! ”**

தன் மொழி கேட்டு மனம் உய்ந்துவிட்டது, மற்றும் முருகனிடமே லயித்து மௌனத்தில் ஆழ்ந்து விட்டது என்று அறிந்த குருவுக்கு, அளவு கடந்த மகிழ்ச்சி. அது பெற்ற சுகானுபூதி பற்றித்தெரிந்து கொள்ள ஆவல். எனவேதான்,

“ முருகனைத் தொழுது அங்கேயே இருந்து விடாதே!, அவ்வப்போது இங்கு வந்து உன் அனுபவத்தினை உரைப்பாய்!” என்று வேண்டுகிறார் போலும் அருணகிரிநாதர்.

அதனால்தான் இப்பாடலை, குருஜியும் கல்யாணி ராகத்தில் அந்த சந்தோஷத்தை நமக்கும் பகிர்ந்துள்ளார் போலும்!

முருகன் மேல் முழுமையாக பக்தியுடன் லயித்தபின், அளவிலாத ஆனந்தமும் அமைதியும் கிடைக்கப் பெற்று, மனத்தின் இரைச்சலிலிருந்து விடுபட்டு, 'சும்மா இரு சொல் அற' என்ற பரிபூரண மௌன நிலைக்கு மனம் வருவதைக் **குறிக்குமாறு " பாட்டில் உருகிலை ", " அந்தோ மனமே " , " மனமே உனக்குறுதி புகல்வேன் "** போன்ற இந்த மூன்று திருப்புகழ் பாக்கள் திகழ்கின்றன, அந்த அந்த ராகம் ,பாவம் மூலம் நம் குருஜியும், "திருப்புகழ் இசை வழிபாடு மூலமாக" நமக்கு இவைகளை வரமாக அளித்துள்ளார்.

**"மகிழ் கூரும் பாழ் மனமாம் உன மலர் பேணும் தாள் உனவே அருள் அருளாயோ"** --- திருப்புகழ்

வாழ்க குருஜி திருப்புகழ் பணி! வளர்க அன்பர்கள் !

திருப்புகழில் அழகான தத்துவங்களும்,எளிதான உபதேசங்களும் இருக்கின்றன.சங்கீதம் இருக்கிறது.தாளம் இருக்கிறது அழகான தமிழ் இருக்கிறது.நம் வாழ்க்கைக்கு முழுத் துணையாக இருக்கிறது.



# குருஜி சில நினைவுக் குறிப்புகள்

## ஈ.என் .மூர்த்தி

https://tinyurl.com/563xddzw ---8



1966 ஆம் ஆண்டு தில்லி லோதி காலனியில் நண்பன் குப்புசாமி வீட்டுத் திருப்புகழ் இசை வழி பாட்டில், என் அம்மாவுடன் கலந்து கொண்டேன்.முதன் முதலாக குருஜி அவர்களைப் பார்த்தது அங்குதான் . ஆனால் அப்போது அவரைப் பற்றி நான் ஒன்றும் அறிந்திருக்கவில்லை.

1967 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய நமது ஜிக்கி மாமா அவர்கள் வீட்டில் நடந்த இசை வழிபாட்டிலும் , பின்னர் குருஜி அவர்கள் அங்கு நடத்த ஆரம்பித்த வகுப்பிற்கும் செல்லத் துவங்கினேன். 1973 ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின் குருஜி அவர்களைச் சந்தித்து , விவரத்தைக் கூறி நமஸ்காரம் செய்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்து ஆசீர்வாதம் செய்தார். வேலை நிமித்தம் ஜம்மு, காஷ்மீரில் வாழ நேர்ந்த போதும் சரி,தில்லி வரும்போதும் சரி , திருப்புகழ் இசை வழி பாடு நிகழ்ச்சிகளிலும், குருஜி அவர்களின் வகுப்புகளிலும் தவறாமல் கலந்து கொண்டேன்.

மத்திய அரசு பணிக்காக தில்லியில் வசிக்க நேரிட்ட காலத்தில் தவறாது திருப்புகழ் வகுப்புகளுக்குச் செல்வேன்.பணி முடிந்து ஜம்மு, காஷ்மீருக்கு திரும்புவதற்கு முன்னால் , குருஜி வீட்டிற்கே சென்று சில பாடல்களை அவர் குரலிலேயே ஒலிப்பதிவு செய்து , எடுத்துக் கொண்டு போய், ஓய்வு நேரத்தில் கேட்டு , கற்றுக் கொண்டதும் உண்டு.

எங்கள் வேண்டுகோளுக்கு இணங்க சுமார் பத்து குழந்தைகளுக்கு தம் வீட்டிலேயே திருப்புகழ் தவிரவும் , கணேச பஞ்சரத்தினம் , சிவ மானச பூஜாஸ்தோத்திரம் , அம்பாஷ்டகம் முதலான வடமொழி ஸ்லோகங்களையும் கற்றுக் கொடுத்ததை எங்களால் மறக்கவே முடியாது.இன்றைக்கு சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ( 35 ) அவர் கற்றுக் கொடுத்த பாடல்களை இன்றளவும் குழந்தைகள் பாடி வருகிறார்கள்.

1994 தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கிய கால கட்டம் . நான் மட்டும் தனியாக ஜம்மு, காஷ்மீர் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பணிக்குத் திரும்பு முன் குருஜியை சந்தித்து விடை பெற்றுக் கொள்ளச் சென்றேன். அவர் ஒரு முருகன் படத்தைக் கையில் கொடுத்து ,” தவர் வாள் தோமரம் “ என்று தொடங்கும் திருவோத்தூர் திருப்புகழை தினமும் தவறாமல் பக்தியுடன் பாடிக்கொண்டிரு !“ என்று கூறி விபூதி இட்டு ஆசீர்வதித்தார். இதற்கு முன்பாகவே அவர் வழக்கமாகக் கையில் எடுத்துக் கொண்டு செல்லும் ஒரு டப்பாவில் ருத்திராட்சம் , விபூதிப்பை , சிறுவேல், சுவாமி பாதம் இவற்றை

வைத்துக் கொடுத்திருந்தார்.( அவை இன்றும் என்னுடன் பத்திரமாக இருக்கின்றன)

தீவிரவாதத் தாக்குதலிருந்து எப்பொழுதும் என்னைக் காத்து வந்தவை , திருப்புகழும் , குருஜியின் ஆசீர்வாதங்களும் மட்டுமே!

1999 ஆம் ஆண்டு விஜயதசமிக்குச் சில தினங்களுக்கு முன்பு எங்கள் இருவரையும் டேப் ரெகார்டர் எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வரச் சொன்னார்.வஸந்த் என்க்ளேவ் வீட்டில் பூஜை அறையில் அமர்ந்து கொண்டு , அன்று அவர் முதல்முதலாக "வட்டவாட்டன" என்று துவங்கும் திருத்தணித் திருப்புகழைக் கற்றுக் கொடுக்கத் துவங்கினார்.மாமியுடன் சேர்ந்து அவரைப் பின் தொடர்ந்து நாங்களும் பாடினோம். திடீரென்று" மோகன் நீ பாடுவது சரியாக இல்லை"என்றார்.நான் மீண்டும் பாடிய போதும் அவர் நினைத்தபடி நான் பாடவில்லை என்பதை புரிந்துகொண்டேன்."மோகன் ! முருகன் உன்னைப் பார்த்துச் சிரிக்கிறான் பாரு! " என்று கூறி தானும் சிரித்தார்.அதற்கு நான் சொன்னேன் " குருஜி அந்த முருகன் தானே சிரிக்கிறான் .அவனிடமே என்னை சரியாகப் பாட வைக்கும்படிச் சொல்லிவிடுங்கள் !" என்றேன் ( எங்கிருந்துதான் அப்படி ஒரு தைரியம் வந்ததோ இன்றளவும் எனக்குத் தெரியவில்லை )மீண்டும் அவர் பொறுமையாகக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். நாங்களும் பாடினோம். "ஓ.கே! ரெகார்ட் பண்ணலாம் " என்றார். நடந்தது என்ன என்பது அவருக்கும் அந்த முருகனுக்கும்தான் தெரியும் !அவ்வாறு அவருடன் நாங்கள் பாடியதைப் பதிவு செய்து, சென்னை, பெங்களூரு, மற்றும் மும்பைக்குத் தபாலில் அனுப்பி வைத்தோம். 19-10-99 விஜயதசமி அன்று எல்லா ஊர்களிலும் ஒரே மாதிரியாக அந்தத் திருப்புகழை அனைவரும் கற்றுக் கொண்டனர்.

11-6-1996 அன்று குருஜி அவர்களின் திருமண நாள் . நாங்கள் சிலர்மட்டும் அவர் வசந்த்குஞ்ச் வீட்டிற்குச் சென்று திருப்புகழ் பாடிவிட்டு வர முடிவு செய்தோம் . எல்லோரும் 'அவர் எதிரில் உட்கார்ந்த பின் 'மதாணி'கொண்டு வந்தீர்களா?' என்று கேட்டாரே பார்க்கலாம் . 'திருதிரு' என்று விழித்தோம் . மாமியைக் கூப்பிட்டு மதாணியைக் கொண்டுவரச் சொன்னார்.'அமலவாயு'எனத் துவங்கும் திருப்புகழை எழுதிக் கொள்ளுங்கள்'என்றார். கிடைத்த காகிதத்தில் அவசர அவசரமாக நாங்கள் எழுதிக் கொண்டோம் .மாலை வேளையில் , வீட்டின் அமைதியான சூழலில் "அமலவாயு ஓடாத" என்று அவர் யமுனா கல்யாணியில் நிதானமாக ஆரம்பித்துப் பாட , நாங்கள் தொடர , எங்கே அமர்ந்திருக்கிறோம் என்ற பிரக்ஞைகூட இல்லாமல் கண்களில் நீர் ஒழுக ,குரல் தழுதழுக்கப் பாடினோம் .அந்த ஆண்டு 27-7-96 அன்று வகுப்பில் அதைக் கற்றுக் கொடுத்தார். என்ன தவம் செய்தோமோ இப்படி ஒரு அநுபவம் கிட்ட!

என் தாயார் திருப்புகழ் மீது கொண்ட ஆர்வமும் , குருஜி அவர்களின் மீது வைத்திருந்த மாறாத பக்தியுமே , எங்கள் குடும்பத்தில் நான்கு தலைமுறைகளாக திருப்புகழ் பாடி வருவதற்கு அடித்தளமாக அமைந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.( மூன்று மருமகள்களுக்கும் இதில் பங்கு உண்டு!! )நான் திருப்புகழ் என்னும் ஆழ் கடலுக்குள் நுழைந்து முத்து எடுக்க

ஆரம்பித்து தற்போது அறுபது ( 60) ஆண்டுகள் கடந்துவிட்டன.என்பதை என்னாலேயே நம்ப முடியவில்லை!!

ஆங்கில மூலம் – ஈ. என் மூர்த்தி

தமிழாக்கம் – சித்ரா மூர்த்தி

**திருப்புகழ் பாடப் பாட உள்ளத்தில் அன்பு பெருகுகிறது.அன்பு பெருகிப் பெருகி அந்த அன்பு வெள்ளம் உலகமுழுவதும் பரவி உலகுக்கெல்லாம் அமைதியைத் தருகிறது.**





# முழுதும் அழகிய குமரன்

அருணன்

https://tinyurl.com/34mvav9k ---9

நங்களப்பா சரணம்!

கனக மாணிக்க வடிவனே!, பவள நிறத்தோனே! என்றெல்லாம் அருணகிரியார் முருகப்பெருமானின் அழகை அற்புதமாக வர்ணிக்கின்றார். ஆபரணத்திற்கே அழகு சேர்க்கும் பிரான், நம்முடைய நம்பிரான்.

முருகவேள் பன்னிரு திருமுறை என்னும் நூலைப் படித்து வந்தபோது, குகன் அணியும் தெய்வீக ஆபரணங்களின் தோற்றம் எவ்வாறு இருக்கும் என்ற ஆவலே, பின்னர் ஒரு தேடலாக மாறி, இக்கட்டுரை வடிவில் மலர்ந்தது.

திருக்கோவில்களில் இறைவன் அணியும் ஆபரணங்களை அறிந்து கொள்ளவும், நம் இல்லங்களில் பூஜை செய்யப்படும் ஆத்மார்த்த மூர்த்திகளுக்கும் / விக்கிரகங்களுக்கும், இதுபோன்ற ஆபரணங்களை உருவாக்கி அணிவித்து அழகு காணவும், இந்த ஆய்வு பெரிதும் துணையாக அமைந்தது.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களும் குறிப்புகளும் இக்கட்டுரையின் அடிப்படையாக அமைந்துள்ளன.

**அருணகிரியார் கூறிய முருகன் அணியும் ஆபரண வகைகள்:-**

1. தலை அணி- ரத்தின மணி கிரீடங்கள், நவரத்ன கிரீடம் ,அலங்காரமான கிரீடம், கடம்பமாலை அணிந்த கீரிடத்தை முடிமீது கொண்டவனே “தேன் உலாவு கடம்பம் அணிந்தகிரீட” என அருணகிரியாரால் புகழப்படுகின்றன.

2. சுட்டி-நெத்திச்சுட்டி, வைரம் மத்தியில் பதிக்கப்பட்டு அமைந்துள்ள செவ்விய சுட்டி என்றும் அருணகிரியார் கூறுகின்றார்.

3. காதணி - குதம்பை (ரத்னம், பொன்), தோடு, குண்டலம் (பொன்),குழை,மகர குண்டலம் என்று பல விதமாக பதிவு செய்கின்றார்.

4. கழுத்தணி- நவரத்தின மாலை, நவமணிகளால் செய்யப்பட்ட ஆபரணங்கள், மரகதம் பதிக்கப்பட்ட ரத்தின மாலைகள் (ரத்னாபரணம்), பலவகை மணிமாலைகள், முத்துமாலை, முத்தாரம், மதாணி (பதக்கம்), பூண் (ஆரம்), தங்கமாலை, செம்பொன்னால் ஆன பூணூல், முப்புரிநூல் மற்றும் ருத்திராட்ச மாலை ஆகியவை அணிந்திருப்பதாக விவரிக்கப்படுகின்றது.

5. இடையணி (இடுப்பில் அணியும் அணி ) - உடைமணி ,அரைவடம், மணிவடம், அரைஞாண்(பொன்) போன்ற அணிகள் அணிந்திருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

6. புய அணி – வாகுவலயமும் (தோள்வளை, கடகம்), வைர ரத்தினத்தால் ஆகிய தோள் அணி என்றும் அருணகிரியார் கூறுகின்றார்.

7. கை அணி -தொடி, கங்கணம், கடகம் (கடகம் என்பது கைகளின் மேல் பகுதியிலும்,தோள் பகுதியிலும் அணியப்படும் ஒரு வகை அணி என கருதப்படுகின்றது).அது மட்டு மின்றி அது பாதத்தில் அணியும் போது பாடகம் என்றும் கூறப்படுகின்றது. அருணகிரியார் முருகன் கைகளிலும் தோள்களிலும் கடகம் அணிந்திருப்பதை பல இடங்களில் பதிவுசெய்கிறார்

8. கை விரல் அணி – ஆழி (மோதிரங்கள்).

9. கால் அணிகலன்கள்:-

    - தண்டை- (மணித்தண்டை, முத்துக்களால் ஆன தண்டை, பொன்னாலாகிய தண்டை, ரத்தின தண்டை),
    - வெண்டையம் (வீரக்காலணி)
    - கிண்கிணி
    - சதங்கை (சலங்கை) – (ரத்தினங்கள் பதிக்கப்பட்ட சதங்கை,பொன்னாலான சதங்கை, முத்துச்சதங்கை, மணியாலாகிய சதங்கை, சிறு சதங்கை)
    - கழல்
    - சிலம்பு(நூபுரம்)- (பொன்+இரத்தினம்+வைரம் இவை விளங்கும் சிலம்பு, பொன் சிலம்பு, இரத்தினச் சிலம்பு)
    - கொலுசு

**காதணிகள் மற்றும் மதாணி குறித்து இங்கு விரிவாக ஆராய்வோம்.**

காதணி - முருகன் அணியும் காதணி வகைகளை அருணகிரியார் கூறும் போது, குதம்பை (ரத்ன, பொன்), தோடு, குண்டலம் (பொன்), குழை, மகர குண்டலம் என்று பலவிதமாக அருணகிரியார் பதிவு செய்கின்றார்.

**குதம்பை (ரத்னம், பொன்)** – குதம்பை என்பது காதுகளில் அணியும் வளைய வடிவ அணிகலன். இது காதில் சுருளாகப் பொருந்தும் ஓலைச்சுருள் வகையைச் சார்ந்தது. **“காதினில் துலங்கு கனக குதம்பையும் தோடும்”** மற்றும் **“பதினிரு குழையும் ரத்நக் குதம்பையும்”** என்ற திருப்புகழ் வரிகளில் அருணகிரியார், குதம்பையின் பொலிவையும் அழகையும் நயம்பட எடுத்துரைக்கிறார்.

**குண்டலம்** – குண்டலம் என்பது காதுகளில் அணியும் பெரிய, வட்ட வடிவ காதணி. இது பெரும்பாலும் தொங்கும் வடிவில், தங்கம் மற்றும் இரத்தினங்களால் செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது. இதற்கான குறிப்பு புய வகுப்பில் காணலாம் **“உதய ரவிகண நிகரென ஆறிரு காது தோயும் இலகு மணிக்கன விம்ப குண்டலங்கள் மேவிப் புரண்டன “**

“**குண்டலம் அசைந்திளங்குழைகளிற் ப்ரபை வீச**” – *அந்தகன் வருந்தினம்* (திருப்புகழ்)

**மகர குண்டலம் -** (மீன் வடிவம்) போன்ற வடிவங்களில் காணப்படும், இது மிகவும் ஒளி வீசக்கூடியதாக வர்ணிக்கப்படுகிறது. இன்றும் பண்டரிபுரத்தில் ,பாண்டுரங்கனுக்கு மகர குண்டலம் அணிவதை நம்மால் காண முடிகிறது என்றால், இவ்வணிகலனின் தொடர்ச்சியான மரபை எடுத்துக்காட்டுகிறது.

**“மகரகன கோமள குண்டலம் பல அசைய”** – ’சிகர தமனிய’-- மயில் விருத்தம்

**குழை -** பண்டைத் தமிழர் மற்றும் சிவனடியார்கள் காதுகளில் அணியும் பொன்னாலான பாரம்பரியச் செவியணி ஆகும். சிவபெருமான் காதில் அணியும் முக்கிய ஆபரணங்களில் ஒன்றாகக் குழை (பொற்குழை) போற்றப்படுகிறது. வட்ட வடிவமான வளையம். **“கோல மாமயில் ஏறிவார் குழை ஆட”** – நீலமா முகில் (திருப்புகழ்)

**அசோக மரத்தின் தளிர் -** சிவந்த அடிப்பாகத்தையுடைய அசோக மரத்தின் குளிர்ச்சி பொருந்திய தளிர்களை இரு காதுகளிலும் அணிந்துள்ளவன்.

> **“செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்**
> **செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்”**
> **திருமுருகாற்றுப்படை 5 – குன்றுதோறாடல், 206**

வேலன், சிவந்த மேனியனாகக் காட்சியளிப்பவன்; சிவப்பு நிற ஆடையை அணிந்துள்ளவன். சிவந்த அடிப்பாகத்தையுடைய அசோக மரத்தின் குளிர்ச்சி பொருந்திய தளிர்களை இரு காதுகளிலும் அணிந்துள்ளவன். சிவப்பு நிற ஆடையில் விருப்பமுடையவன் என்பதற்கு அருணகிரிநாதர் “அரத்த ஆடையன்“என்று பூத வேதாள வகுப்பில் பதிவு செய்கின்றார்.

**வள்ளியின் காதணி** - கர்ணபூரம் மற்றும் பனை ஓலை இதழைக்குழையாகக் கொண்டவள் வள்ளி என்று அருணகிரியார் பதிவு செய்கின்றார்.

**கர்ணபூரம்** என்ற ஆபரணத்தைத் தரித்திருக்கும், வள்ளி நாயகி,பெருமிதத்துடன் தழுவும், மார்பை உடையவனே! (முருகன்) என்கின்றார். கர்ணபூரம் – காதணிவகை, இவ் ஆபரணத்தின் தோற்றம் அறியப்படவில்லை.

"கன்னபுரக்குழை வல்லி செருக்கு உர" (திவாகர கன்ன - கந்தர் அந்தாதி).

**பனை ஓலை குழை,** திருப்புகழில், குறப் பெண் வள்ளி பனை ஓலையால் செய்யப்பட்ட குழையை காதில் அணிந்தவளாக அருணகிரியார் பதிவு செய்கிறார்**.**

வள்ளி காதில் அணியும் பனை ஓலைக்குப் பின் ஒரு சிறிய குறிப்பு உண்டு, என்னவென்றால் , வள்ளியிடம் காதல் கொண்டபோது "நான் உனக்கு அடிமை" என்று ஒரு சாசன பத்திரம் முருகன் எழுதிக் கொடுத்தான், அதை காதோலையாக அணிந்து கொண்டாள் வள்ளி. இதனை

"**செறி குழை ஓலை சாதனம்**"– *போதில் இருந்து விடா* (திருப்புகழ்)

"**ஏடு அணி குழைச்சித் தூர்த்த ஆடகி குறத்தி**" – *வார் குழல் விரித்து* (திருப்புகழ்)

என்ற வரியும், பனை ஓலை இதழைக் குழையாகக் காதில் அணிந்தாள் என்பதை பதிவு செய்கின்றன.

வள்ளியின் காதணி , ஒரு அலங்காரம் மட்டுமல்லாது, முருகனின் அன்பையும், உறுதிமொழியையும் சுமக்கும் புனிதச் சின்னமாக மாறுவதை உணர்த்துகிறது. இது, பக்தி செய்யும் அடியார்க்கு முருகன் அருளும் மயில்வாகனர் சீட்டைப் போன்றது.(அந்தோ மனமே – திருப்புகழ்)

**வெண் சங்கு காதணி-**வெண் சங்கை காதில் ஆபரணமாகக் கொண்ட சிவபிரானை அருணகிரியார் தனது பாடல்களில் பதிவு செய்கிறார்.

**"சங்கு ஆபரண திகம்பர"** (மாமுதல் தடிந்து – வேல்விருத்தம்) என்ற சொல்லாட்சியின் மூலம், சங்கு காதணியாகத் திகழும் சிவபிரானின் தெய்வீக உருவம் சுட்டிக்காட்டப்படுகிறது.

இத்தகைய வர்ணனை அருணகிரியாரிடமிருந்து மட்டும் அல்லாது, சைவத் திருமுறைகளிலும் காணப்படுகிறது. திருஞானசம்பந்தர்,

**"சங்கு ஆர் குழை தான் மிளிரும் ஒருகாதர்"** – தேவாரம், முதல் திருமுறை

**"ஒருகாது இலங்கு சுரி சங்கு"** – தேவாரம், இரண்டாம் திருமுறை

என்றும் பாடுவதன் மூலம், சிவபிரான் ஒருகாதில் சுரிசங்கைக் காதணியாக அணிந்திருப்பதைத் தெளிவாகப் பதிவு செய்கிறார்.

**உமையவள் (பார்வதி தேவி) -** அருணகிரியார் தனது திருப்புகழ் பாடல்களில், அம்பாள் (பார்வதி) அணியும் காதணிகளை விரிவாக பதிவு செய்கிறார். அம்பாள் காதில் குழையாக நீலோற்பல மலரை அணிந்த மோட்சலட்சுமி ஆகவும், மகர (மீன்) வடிவக் குண்டலங்களை அணிந்தவளாகவும் அருணகிரியார் வர்ணிக்கின்றார்.

**"குழை காதார்ந்த செழுங்கழு நீர் தோய்ந்த பெருந்திரு"** – தேவேந்திர சங்க வகுப்பு

**"மகர குண்டலி மாரீ சூரி …"** – இரவொடும் பகலே (திருப்புகழ்)

**மதாணி**

மதாணி என்பது கழுத்தணியில் தொங்கும் பதக்கம் (pendant) ஆகும். திருப்புகழ் பாடல்களில், திருஅருணகிரிநாதர் முருகன் அணிந்த மதாணிகளின் பல வகைகளை விரிவாகப் பதிவு செய்கிறார். அதில் சில இங்கு பதிவிடுகிறேன்.

**"அருணை நகரின் ஒரு பத்தன் இடும் ஒளி வளர் திருப்புகழ் மதாணி க்ருபாகரனும்"** – வேடிச்சி காவலன் வகுப்பு

திருஅருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் பாடல்களை பதக்கமாக (மதாணி) அணிந்த கருணாமூர்த்தி என்ற விதத்தில் பதிவு செய்கிறார். இதை கருத்தில் கொண்டு திருப்புகழ் பாடல்கள் அடங்கிய புத்தகத்திற்கு "மதாணி'என்று நம் பெரியோர்கள் பெயர் சூட்டி உள்ளார்கள்.

**"கூதாள மதாணி அலங்க்ருதன்" –** பூதவேதாள வகுப்பு

கூதாள மலரால் புனையப்பட்ட பதக்கம் போன்ற ஆபரணத்தை மார்பில் அணிந்தவன். (முருகன்). கூதள மலர் நீலநிறத்தைக் கொண்டது. நீலக்கல் பதக்கம் என்று கூறுவர் சிலர். திருப்பரங்குன்றத்தில் நீலக்கல் பதக்கம் உள்ளது என்று அடியார்கள் கூறுவதை, நாம் செவி வழி செய்தியாகத் தெரிந்து கொள்கின்றோம்.

**"மாணிக்க ப்ரவாள நீலம் மதாணி"-** பாணிக்கு உட்படாது (திருப்புகழ்)

மாணிக்கமணி, பவளம், நீலமணி இவைகள் பதிக்கப் பெற்ற பதக்கத்தை அணிந்த அழகிய வேடப் பெண் வள்ளி என்று அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

**“பைம்பொன் பதக்கம் பூட்டிய அன்பற்கு”** – மந்தக் கடைக்கண் (திருப்புகழ்)

பதக்கம் பூட்டிய அன்பன், இன்னாரென்று விளங்க வில்லை. அன்பன் பொருட்டு பகைவரை ஓட்டிய வயலூரா – என்றதனால் ஒரு வேளை இது "நல்லியக்கோடன்" என்னும் சங்ககால அரசனைக் குறிக்கலாம்.

நல்லியக்கோடன் வரலாற்றில், தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகக்கடவுளை வழிபட்டான் எனவும், அப்பொழுது முருகவேள் ,அவன் கனவில் தோன்றி, ஊரில் உள்ள ஒரு கேணியிற் பூத்த பூ வைப்பறித்து, பகைவர் மீது விடுக்குமாறு கட்டளையிட்டனரெனவும், அந்தப்பூவை ,தன் வேலாக முருகவேள் நியமித்துத்தர, அந்த வேலைச் செலுத்தி, நல்லியக்கோடன் பகைவரை ஓடச்செய்தான் எனவும் அறியப்படுகின்றது.

இந்நிகழ்வின் மூலம், நல்லியக்கோடன் சிறந்த முருக பக்தராக அறியப்பட்டார். இவர் ஒரு வேளை முருகனுக்குப் பைம் பொற் பதக்கம் ஒன்று செய்து அணி வித்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. (இதன் குறிப்பு: முருகவேள் பன்னிரு திருமுறை-1/ பக்கம் 462 காணலாம்)

பல பழுத்த அடியார்கள் முருகன் அணிந்த மரகதக் கல் பதக்கத்தை, ‘மதாணி;’ என்று உறுதியாகக் கூறுகின்றனர். பல திருக்கோவில்களில் , முருகன் அணிந்து கொள்ளும் பதக்கங்களின் வகைகளை, பல அடியாரிடமிருந்து செவி வழிச் செய்தியாக அறிந்து, அதில் சில, பச்சைக்கல் பதக்கம், கிளி பதக்கம், நீலக்கல் பதக்கம், ரத்தினப் பதக்கம், தங்கப்பதக்கம், அறுகோண பதக்கம், புலி நகம், மயில் பதக்கம் , பவளவேர்பதக்கம், சிகப்பு கல்பதக்கம், நவரத்தின பதக்கம், அடுக்கு பதக்கம், என, பல பல வகைகளைக் காணலாம்.

முருகப்பெருமான் அணியும் ஆபரணங்களின் பெயர்கள், வடிவங்கள் மற்றும் வகைகள் குறித்து இன்னமும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன.

பணியாவும் பூணுகின்ற பிரான், ஆபரணத்திற்கே அழகு சேர்க்கும் பிரான்,நம்முடைய தம்பிரான், இக்கட்டுரையை அவன் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்!

நம் ஆணவத்தால் தலை கனத்து விடுகிறது. மலை போன்ற கனம்.நான் பாடுகிறேன்,நான் செய்கிறேன் என்ற ஆணவம்.இந்த மலை போன்ற ஆணவத்தை பொடி படச் செய்ய வேண்டுமென்றால் திருப்புகழ் பாடவேண்டும்.யான் தான் என்பது விட்டாலன்றி யாவர்க்கும் தோன்றாது அந்த மெய்ப்பொருள்-**Guruji**





<u>**அத்வைதம் எனும் இரண்டறு நிலை**</u>

**Kalamalini Sundarrajan**

https://tinyurl.com/29vn48e4 ---10

***ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி| நாஸ்யாப்ரஹ்மவித்குலே பவதி|| தரதி சோகம் தரதி பாப்மாநம் குஹாக்ரந்திப்யோ விமுக்தோऽம்ருதோ பவதி --முண்டக உபநிஷதம்***

இது **அத்வைத தத்துவத்தின்** சாரமாகும். "அறிதல்" என்பது இங்கே ஏதோ ஒரு தகவலைத் தெரிந்து கொள்வது அல்ல; அது பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து, அந்த உணர்வாகவே மாறுவதைக் குறிக்கிறது. ஒரு துளி நீர் கடலில் விழுந்தால், அது கடலாகவே மாறிவிடுவதைப் போன்றதுதான் இது.

*பிரம்மம் என்பது இரண்டற்ற ஒன்று (ஏகம் ஏவ அத்விதீயம் பிரம்ம) என்று சாந்தோக்ய உபநிடதமும், அந்த பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மனாகவே ஆகிறான் என்று முண்டக உபநிடதமும் பகர்கிறது. "வாக்கிற்கு அருணகிரி" என்று புலவர்களாலும், சான்றோர்களாலும் போற்றப்படும் சிறப்புப் பெற்ற அருணகிரிநாதர், முருகப் பெருமான் மீது பாடிய திருப்புகழில், முருகனை ஸகுண பிரம்மமாக, தன் இஷ்ட தெய்வமாக பல பாடல்களில் புனைந்திருந்தாலும், சில பாடல்களில் தத்துவங்களில் மிக உயர்ந்த நிலையாக கருதப்படும் அத்துவித (அ) இரண்டறு நிலை, ஆன்மாவும் (ஜீவன்) பரம்பொருளும் (பிரம்மம்) ஒன்றிய நிலையை குறிப்பிட்டு இருக்கிறார்.*

***திருப்புகழில் அத்துவித நிலை***

*"சுவாமி நாதா!, உம்மோடு இரண்டறக் கலந்து இன்பம் யாம் பெற, உபதேசம் அருள்வாயாக!" என்று அருணகிரிநாதர் கேட்கும் **"நாவேறு பாமணத்த"** என்ற பாடலில், **"நீவேறெனாதிருக்க நான்வேறெ னாதிருக்க"** என்று ஜீவன் வேறு, பரம்பொருள் வேறு என்று இல்லாத ஒன்றுபட்ட நிலையை அடைந்து , நிரந்தரமான இன்பத்தில் திளைக்க அருள் கோருகிறார். உடம்பில் இருக்கும் ஆறு ஆதார சக்கரங்களையும் கடந்து , அவைகட்கு அப்பால் விளங்கும் சகஸ்ராரப் பெருவெளியில் விளங்கும் சிவத்தை கண்டு ஐக்கியமாக, உபதேசச்சொல் கேட்கிறார்.*

*இதே பொருட்பட **"ஆனந்த மேலை வெளியேறி நீயின்றி நானின்றி நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே"** என்று **"மூளும் வினை"** என்று தொடங்கும் திருச்செந்தூர் திருப்புகழில், பிராணவாயுவை மூலாதாரத்திலிருந்து யோகத்தினால் மேலே எழுப்பி, பிரமரந்திரத்தில் ஆனந்தப் பெருவெளியில் சிவனும் ஜீவனும் பிரிவற்றிருக்கும் அத்துவித முத்தியை உணர்ந்து கொள்ளும் நாள் என்று கிடைக்கப் பெறும் என்று ஏங்குகிறார்.*

*திருவிடைமருதூர் முருகனிடம், **"அறுகுநுனி பனியனைய"** என்ற திருப்புகழ் பாடலில் **"ஏக போகமாய் நீயு நானுமாய் இறுகும் வகை பரமசுகமதனையருள்"** என்று வினைகள் நீங்கி, மும்மலங்கள் கழிந்து,பிறப்பற்ற நிலை அடைய ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இரண்டறக் கலந்து இறுகி, சுகப்பட வைக்கக் கெஞ்சுகிறார்.*

*இன்னும் ஒரு படி மேலே சென்று உரிமையுடன்* ***"நீநானற வேறின்றி நிற்க நியமாக, நீவாவென நீயிங்கழைத்து/"*** *கடல் போன்ற ஆநந்த சித்தி அளித்து பரமானந்த முத்தி தரவேணும் என்று* ***"ஆராதனர் ஆடம்பர்"*** *என்று தொடங்கும் பொதுப்பாடலில் கேட்கிறார்.*

*சிவாத்துவிதத்தின் பெருமையை விளக்கும் மற்றுமொரு சுவாமிமலை திருப்புகழில்,* ***"ஆனாத பிருதிவிப் பாச நிகளமும், மாமாய இருளும் அற்று, ஏகி பவம் என ஆகாச பரம சிற்சோதி பரையை அடைந்து, உளாமே"*** *என்று குறிப்பிடுகிறார். மண் ஆசையும், ஆணவமும் அழிய சீவனும் , சிவனும் இரண்டற்ற தன்மையடைந்து நிற்கும் நிலை ஏற்படும். எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்து தத்துவங்களைக் கடந்து, துரியாதீதமான, ஞான மயமான, அழிவில்லாத மெய்ப்பொருளுடன் இணையும் அருள் கோருகிறார்.*

*திருக்கயிலைமலை நாதரிடம்* **"தேனுந்து முக்கனிகள்"** *என்று தொடங்கும் திருப்புகழில்* ***"நான் என்பது அற்று, உயிரொடு ஊன் என்பது அற்று, வெளி நாதம் பரப்பிரம ஒளி மீதே ஞானம் சுரப்ப, மகிழ் ஆனந்த சித்தியொடெ நாளும் களிக்க, பதம் அருள்வாயே"*** *என்று வேண்டுகிறார். அகங்காரம், உயிர்பற்று, உடல்பற்று எல்லாம் ஒழித்து , பரவெளியில் அருள்நாதத்தோடு கூடிய பரஞ்சோதியில், சிவஞானம் பெருகி, முக்தி இன்பத்தில் நிலைத்திருக்க வேண்டுகிறார்.*

*அவ்வாறே அருட்சோதி தரிசனம் பெற்று,* **"வாதினை யடர்ந்த"** *என்ற திருப்புகழில், சோலைமலை கிழவனிடம் ,* ***"சோகமது தந்து எனையாள்வாய்,"*** *என்கிறார். "அதுநான்" என்ற நிலை தந்து ஆட்கொள்ள வேண்டுகோள் விடுக்கிறார்.*

**கந்தரனுபூதியில் அத்துவித நிலை**

*முருகனை, அந்த மெய்ப்பொருளை அறியும் பொருட்டு, நீர் பஞ்சபூதங்களா? இந்திரியங்கள் சார்ந்த அறிவா? நான்மறைவேதங்களா? அல்லது "நான்" எனப்படும் அகந்தையா? அல்லது அந்த அகந்தை கரைந்து ஒடுங்கும் இடமாகிய தான் என்கிற அந்த வஸ்துவா? "எனையாண்ட இடம் தானோ?, பொருளாவது ஷண்முகனே" என்று விசாரம் செய்து* ***"யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்ற அது தற்பரம்,"*** *என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். அதாவது ஜீவ உணர்வு, ஆத்ம உணர்வினால் விழுங்கப்பட்டு ,ஆத்மா மட்டுமே அங்கே ஞானாகரனாக (அத்துவைதமாக) இருக்கிறது என்கிறார்.*

*இவ்வாறு இறைவனின் அனுபூதி பெற்ற அருணகிரி நாதர், மற்ற சாதகர்களுக்கு புலன்களால் உணரப்படும் முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பாலுள்ள பரம்பொருளை அடைந்திடுவதில் விருப்பம் கொள்ளுமாறு,* ***"ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப் பேறா அடியேன் பெறுமாறு உளதோ!"*** *என்று அத்துவித விழிப்புணர்வு நிலையைப் பெற உணர்த்துகிறார்.*

*அவ்விழிப்புணர்வு பெற்ற ஞானிகள் உடன்* ***"பிறிவொன்று அற நின்ற பிரான்"*** *ஆக அவர்கள் அறிவில் இறைவன் எந்தவித பிரிவும் இல்லாமல் இணைந்து* ***"தன்னந் தனி நின்ற அது/"*** *வாக எல்லாவிடத்திலும் பிரம்மமே நிறைந்துவிடுவதை உணர்த்துகிறார்.*

**திருவகுப்பில் அத்துவித நிலை**

*அருணகிரிநாதர் பாடிய 'பெருத்தவசன வகுப்பு', அத்துவிதத்தின் மஹாவாக்யங்களை உள்ளடக்கியது.* ***"அருக்கன் உலவிய சகத்ர யமுமிசை யதிற்கொள் சுவையென அனைத்து நிறைவதும்"*** *என்பதில்*

*சூரியன் உலவி வரும் இந்த மூன்று உலகங்களிலும் காணப்படும் அனைத்துப் பொருட்களிலும் நிறைந்து இருக்கும் பொருள் 'ஒன்றே' என்கிறார். இதை ஆதிசங்கரர் தனது மனீஷா பஞ்சகத்தில் 'நான் எனப்படும் பிரம்மம் (தூய உணர்வு) தான் பிரபஞ்சமாகத் தோற்றம் தருகிறது' என்று "அகம் பிரமாஸ்மி" என்று யஜூர் வேதத்திற்குரிய மஹாவாக்யமாக எடுத்துரைக்கிறார்.*

***"அவஸ்தை பலவையு மடக்கி யகிலமும் அவிழ்ச்சி பெறஇனி திருக்கு மவுனமும்"*** *என்ற திருப்புகழ் வரிகளில் விழிப்பு, கனவு ஆழ்தூக்கம் எனும் மூன்று நிலைகளைக் கடந்தும் ஆன்மா சுயம் பிரகாசமாய் விளங்கி துரிய நிலை கிட்டியது. எதனால்? முருகப் பெருமானின் உபதேசத்தால் என்கிறார். இதை ஆதிசங்கரர் தனது மனீஷா பஞ்சகத்தில், ஜாக்ரத், ஸ்வப்ன, ஷுஷுப்தி என்ற மூன்று நிலைகளில் தெளிவாகப் பிரகாசிக்கும் தூய உணர்வு, முழு பிரபஞ்சத்திற்கும் சாட்சியாக, அனைத்து உடல்களிலும் வசிக்கிறது என்று "பிரக்ஞானம் பிரம்ம," ரிக் வேதத்திற்குரிய மஹாவாக்யமாக எடுத்துரைக்கிறார்.*

***"இரட்டை வினைகொடு திரட்டு மலவுடல் இணக்கம் அறவொரு கணக்கை யருள்வதும்"*** *என்ற திருப்புகழ் வகுப்பில் வரும் வரிகளில், நல்வினை ,தீவினைகளினால் ஏற்பட்ட இந்த உடம்பின் தொடர்பு நீங்க ,மந்திரம் அருளினார் என்கிறார். இதை ஆதிசங்கரர் தனது மனீஷா பஞ்சகத்தில், நான் எனப்படும் பிரம்மத்தை தொடர்ந்து தியானிப்பவன், தனது கடந்த கால மற்றும் எதிர்கால பாவங்களை அறிவுத் தீயில் எரித்தவன், தனது தற்போதைய உடலை தனது பிராரப்த கர்மாவின் செயல்பாட்டிற்கு உட்படுத்துகிறான், அந்த தத்துவமாகவே ஆகிறான் என்று "தத்வமசி" சாம வேதத்திற்குற்குரிய மஹாவாக்யமாக எடுத்துரைக்கிறார்.*

***"உருக்கு திருவருள் திளைத்து மகிழ்தர உளத்தொ டுரைசெயல் ஒளித்து விடுவதும், ஒளிக்கும் ஒளியென வெளிக்கும் வெளியென உயிர்க்கும் உயிரென நிகழ்ச்சி தருவதும்"*** *என்று கூறும் வகுப்பில் நெஞ்சை நெகிழ்த்தும் திருவருள் பிரகாசத்தில் ஒன்றி, மூழ்கி அனுபவித்து, பேரின்ப நிலையில் நிற்க அந்தக்கரணங்கள் அடங்க, தோன்றும் சிவானந்த காட்சியில் ஜீவபோதம் அழிந்து விடும். சூரியன், சந்திரன், அக்னி, தாரகைகள் முதலியவற்றுக்கெல்லாம் மூல ஒளியாகவும், வெட்ட வெளியைத் தாண்டிய பரவெளியாகவும், சேதனம் , அசேதனம், சகலத்திலும் உயிராய்த் திகழ்கிறது. இதை ஆதிசங்கரர் தனது மனீஷா பஞ்சகத்தில்-- ஆன்மா அல்லது தூய உணர்வு, விலங்குகள், மனிதர்கள் மற்றும் கடவுளால் 'நான்' என்ற பெயரில் தெளிவாக உணரப்படுகிறது. இந்த தூய உணர்வின் பிரதிபலிப்பால் தான், மனம், புலன்கள் மற்றும் உடல், அனைத்தும் உணர்வற்றவை, உணர்வுள்ளவையாகத் தோன்றுகின்றன. இந்த உணர்வின் காரணமாகவே வெளிப்புறப் பொருட்கள் உணரப்படுகின்றன என்று "அயம் ஆத்மா பிரம்மா" அதர்வண வேதத்திற்குரிய மஹாவாக்யமாக எடுத்துரைக்கிறார்.*

*முருகப்பெருமானின் வாகை புயங்களை போற்றுகின்ற புய வகுப்பில்,* ***"மனகுண சலன மலினமில் துரிய அதீத சுகாநுபூதி மவுனநிரக்ஷரமந்திரம்"*** *மனதின் சத்துவ, இராசத, தாமச எனும் முக்குணங்களால் ஏற்படும் சலனங்களும், அதனால் உண்டாகும் மாசுகளும் இல்லாத நிலை மற்றும் மூன்று அவஸ்தை நிலைகளுக்கு அப்பால் உள்ள துரியமும் கடந்த துரியாதீத நிலையில் பெறும் ஆனந்த அநுபூதியைத் தருவதற்குக் காரணமான மவுனமான, அட்சரம் ஏதும் இல்லாத மந்திரமாகிய முத்திரையைப் பொருந்தித் திருமார்பில் திகழ்கிறது. இந்த மோன முத்திரையின் பொருள் உணர்ந்தவர் ,பரத்துடன் இணைந்து ஆனந்த அநுபூதியில் திளைக்கிறார்கள்.*

*அருணகிரிநாதர், அனுபூதியின் இறுதியில், தான் கண்ட பூரண இறையனுபவம் பற்றி எடுத்துரைக்கையில், உருவமுள்ளனவாயும், உருவமற்றனவாயும் இருப்பதாயும், இல்லாதனவாயும், மலராகவும், அதன் நறுமணமாகவும், ரத்தின மணியாகவும், அதன் ஒளியாகவும், இந்த பிரபஞ்சமாகவும், பிரபஞ்சத்தை வியாபித்த உயிராகவும், மோட்சம் அடைவதற்கான வழியாகவும், அதுவே முடிவாகவும், இறைவனே எல்லாமாகவும், "சர்வம் கல்விதம் ப்ரம்ம" அனைத்தும் பிரம்மம் என்ற ஒப்பற்ற உயரிய அத்துவித நிலையையும் அதைக் காட்டித்தந்த குருவாகவும் விளங்குகிறது என்று மங்களகரமாக நிறைவு செய்கிறார்.*

***உருவாய் அருவாய் உளதாய் இலதாய்***

***மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்***

***கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்***

***குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!***

இப்படிப்பட்ட அரிய திருப்புகழை வெறும் பாடல்களாகப் பார்க்காமல், அவற்றைச் சந்தத் தாளங்களுடன் கூடிய இசை வடிவமாக மக்களிடம் கொண்டு சேர்த்தவர் நம் குருஜி அவர்கள்.மிகவும் கடினமான சந்தங்களைக் கொண்ட திருப்புகழ் பாடல்களைக் கூட யாவரும் எளிதாகப் பாடும் வகையில் ராகங்களை அமைத்துக் கொடுத்தார். "பக்தி என்பது தனிப்பட்ட விஷயம் மட்டுமல்ல, அது மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாக இருக்க வேண்டும்" என்பதே அவரது வாழ்நாள் கொள்கையாக இருந்தது.

குருஜி ஏ.எஸ். ராகவன் அவர்களின் மாணவர் பரம்பரை இன்றும் உலகம் முழுவதும் திருப்புகழ் இசையையும், அருணகிரிநாதரின் புகழையும் பரப்பி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது .

வாழ்க குருஜி! வளர்க அவர் தொண்டு !

**மனதில் ஒரு வினா?ஆண்டவனே உன்னை எதற்காக பாடவேண்டும்?ஆண்டவனைப் பாடுவது என் மனதை சுத்தப் படுத்த .என் மனதில் உள்ள அழுக்குகள் போக வேண்டும் மனது துயரற வேண்டும் மனது பதமுற வேண்டும்-Guruji**



## சைவசமயக் குரவர் தமிழ் தொண்டு

**Lakshmi Narayan**



https://tinyurl.com/ymhhy64r ---11

வையத்து மாந்தர் எல்லோரும் வளமோடு வாழ சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து சரவணபவன் என்ற சுடராகத் தோன்றி, வள்ளி பிராட்டிக்காக வேந்தனாக, வேடனாக, வேங்கையாக, விருத்தனாக என்று பல்வேறு வடிவங்களில் எழுந்தருளி அருள் புரிந்த முருகப் பெருமானுடைய மேன்மையையும், சிறப்பையும் எடுத்துரைக்கும் நூல் தான் "திருப்புகழ்" - இந்த மந்திரம் என்ற சிறப்பு மிக்க திருப்புகழ் பாடல்களுக்கு இனிய இசை வடிவம் கொடுத்து எல்லோரும் எளிமையாகக் கற்றுக்கொள்ளும்படி வழி வகுத்த மதிப்பிற்குரிய குருஜி திரு ஏ.எஸ். ராகவன் அவர்களுக்கு சிரம் தாழ்ந்த நினைவஞ்சலிகள் செலுத்துகிறோம். அவருடைய பெருமுயற்சியால் இந்தப் பாடல்கள் இனிய இசையோடும், தகுந்த இராகங்களோடும், எளிய தாளங்களோடும் உலகெங்கும் பல அன்பர்களால் பாராட்டிப் பாடப்பட்டு வருகிறது.
திருப்புகழில் சொல்லப்படாத விஷயங்களே இல்லை என்று கூறலாம் . புராணம், இதிகாசம், யோக சாஸ்திரம், வாழ்வியல், மருத்துவம் என்று நம் நல் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை எல்லாம் அருணகிரியார் எழுதியிருக்கிறார். முக்கியமாகத் தமிழ் வளர்த்த பெரியோர்களைச் சிறப்பித்துக் கூறியிருப்பது அவருடைய புலமையை நன்கு தெளிவு படுத்துகிறது. சமய ஒற்றுமையை வளர்க்க வலியுறுத்தும் விதமாக ஆழ்வார்களையும், நாயன்மார்களையும் பற்றிய சிறப்பான பல குறிப்புகள் உள்ளன.

தமிழ் வளர்த்த சைவ சமயக் குரவர்கள் பற்றிய விவரங்கள் திருப்புகழ் முழுவதும் பரவி இருப்பதை இப்பொழுது சில உதாரணங்கள் மூலம் பார்க்கலாம் .

முதன்மையாக, முருகன் அம்சமாகத் தோன்றி, சமணர் ஆதிக்கத்திலிருந்து பாண்டிய மன்னனை மீட்டு, தமிழுக்கு புத்துயிர் அளித்த திருஞானசம்பந்தரைப் பற்றி நிறைய பாடல்களில் நினைவு கூர்கிறார் அருணகிரிநாதர்.

“மூலமந்திரம்” என்று தொடங்கும் பாடலில் , சமணர்களுடன் அனல்வாதம், செய்து, ‘பச்சைப்பதிகம்’ இயற்றியும், புனல்வாதம் செய்து எழுதிய ஏடு, நீரோட்டத்தை எதிர்த்து “திருவேடகம்” என்ற இடத்தில் கரை ஒதுங்கியதும், சமணர்கள் தோற்ற கதையும் சொல்லப்படுகிறது.

“ஞானாவிபூஷணி” என்று தொடங்கும் - பாடலில் ‘பேணார்கள் நீறதிடா அமணோர்களை சூராடியே கழுமீதினில் ஏறிட’ -என்ற வரிகளில் , அனல், புனல் வாதங்களில் தோற்றுப் போன சமணர்கள் கழுவேறிய நிகழ்வு சொல்லப்படுகிறது.

“கூனான மீனன் ஈடேறிட” என்ற வரிகளில் கொடிய நோயால் வாடிய பாண்டிய மன்னனின் நோயை “திருநீற்றுப் பதிகம்” பாடி நலமுறச் செய்து, அவனது கூன் நீங்கச் செய்து, சைவம் தழைக்கச் செய்த நிகழ்வு சொல்லப்படுகிறது.

ஞானசம்பந்தரின் தமிழ்த் தொண்டைப் பற்றி பல இடங்களில் அருணகிரிநாதர் சித்தரிக்கிறார்.

‘நரையொடு பற் கழன்று’ என்ற பாடலில் சிவம், சக்தி இவைகளின் உண்மை தெரிந்த சைவ சமய குரவர் மூவர் - அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோருக்கு, ஐந்து எழுத்து (பஞ்சாட்சரம்) உபதேசம் செய்த குறிப்பு இருக்கிறது.

“புற்புதமெனாம” என்ற பாடலில் - ‘தர்க்க சமண் மூகர் மிக்க கழுவேற வைத்த ஒரு காழி மறை யோனே’ என்றும்,

திருக்குடவாயில்-“சுருதியாய் ” என்று தொடங்கும் பாடலில் ‘கவுணியோர் குலவேதியனாயுமை கனபாரக் களப பூண் முலை ஊறிய பாலுணு மதலையாய், மிகு பாடலின் மீறிய கவிஞனாய்’ – என்றும்
“தவர் வாள்” (திருவோத்தூர்)என்று தொடங்கும் பாடலில் ஆணாக இருந்த பனைமரம் பூத்து, காய்க்கும்படி செய்து, சமணர்களோடு திருவாக்காலும், திருநீற்றாலும் போரிட்டு வென்றவனே என்றும் சொல்கிறார்.
‘ஆசாரவீனன்’ எனும் பாடலில்` கண்ணப்பர் உமிழ்ந்த நீரை ‘அபிஷேகம்’ என்றும், அவர் எச்சில் செய்து, ‘இது சுவையானது உண்டருள்க’ என்று கூறியதை அமுதாக எண்ணி சுவைத்த எம் பெருமானின் மகனே என்றும் சொல்கிறார்.
மாணிக்கவாசகருக்காக சிவபெருமான், நரியை பரியாக்கி திருவிளையாடல் புரிந்த கதை “திரைவஞ்ச “என்று தொடங்கும் பாடலில் வருகிறது. “பரி என்ப நரிகள் தமை நடன ம் கொள் ஒரு வழுதி பரிதுஞ்ச வரும் மதுரை நடராஜன் ”என்றும் “கரிமுக கடகளிறு” என்ற பாடலில் “நரிமிகுக் கிளைகளைப் பரியெனக் கடிவளக் கையில்பிடித் ததெிர்நடத் ...... திடுமீசன்”என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

சிவபெருமான் சுந்தரரை தடுத்து ஆட்கொண்ட கதை “ஆசை நாலு” என்ற பாடலில் “வாதவூரர் அடிமை கொளும் கிருபை கடவுள்” என்று கூறப்படுகிறது

சுந்தரருக்காக பரவை நாச்சியாரிடம் ஈசன் தூது போன நிகழ்ச்சிஇதோ--- “பரவைக்கு எத்தனை விசை தூது” என்றும் “பரவைமனை மீதில் அன்று ஒரு பொழுது தூது சென்ற பரமன்” என்ற வரிகளிலும் தெரிகிறது “ஐங்கரனை ஒத்த மனம் ” என்று தொடங்கும் பாடலில் ‘கொங்கணகிரி’ என்ற தலத்தில் முதலை விழுங்கிய ஒரு சிறுவனை மூன்று வருடங்களுக்குப் பிறகு வளர்ந்த சிறுவனாக சுந்தரர் மீட்டதை சொல்கிறார்.

“மூலா நிலமதின் மேலே” என்ற பாடலில் மார்க்கண்டேயன் கதை சொல்லப்படுகிறது.

“வங்கார மார்பில் அணி” என்று தொடங்கும் பாடலில் திருச்செங்காட்டங்குடி என்ற தலத்தில் வாழ்ந்த சிறுத்தொண்ட நாயனார் புராணம் வருகிறது. பிள்ளைக்கறி கேட்டு சிவபெருமான் சோதிக்க, தன் மகனையே கறி சமைத்துத் தருகிறார் சிறுத்தொண்டர். அவருடைய ஆழ்ந்த பக்தியை மெச்சி ஈசன் காட்சி கொடுத்ததோடு, மகனையும் உயிர் பெறச் செய்தார்

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் , சம்பந்தர் பாட்டுக்கு ஏற்ப யாழ் வாசித்தார் என்று “அம்புலி நீர் “என்று தொடங்கும் பாடலில் குறிப்பு உள்ளது.

‘திருப்பனந்தாள்’ என்ற தலத்தைப் பற்றி அருணகிரியார் பாடியுள்ளார். இந்தத் தலத்தில் குங்கிலிய கலைய நாயனார் என்பவர், ஈசன் சாய்ந்து இருப்பதைச் சரி செய்ய, தன் கழுத்தில் ஒரு கயிற்றை கட்டி ,அதனைக் கொண்டு ஈசனை நேர் செய்ய முயன்றார். யானைகளும், குதிரைகளும் இழுக்க முடியாத கயிறு, நாயனாரின் அன்புக்கு இழுபட்டது. ஈசனும் நிமிர்ந்து நின்றார். இதனால் இவ்விடத்தை 'மிக்க பனந்தாள் 'என்று அதாவது மேன்மை மிக்க தலம் என்று அருணகிரியார் கூறுகிறார்

இவை மட்டுமின்றி இன்னும் பல சான்றோர்களைப் பற்றிய குறிப்புகள் பல திருப்புகழ் பாடல்களில் காணலாம் . திருப்புகழ் பெரு வெள்ளத்தில் இது ஒரு சிறு துளி மட்டுமே.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருப்புகழை, குருஜி அவர்கள் கற்றுக்கொடுத்த மரபு மீறாமல், இளைய தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

கந்தக் கடவுளின் கருணை நம் எல்லோரையும் காப்பதாக!!

தந்தனத் தானனத் தந்தனத் தானன தாளக் கதியில் தமிழ்மணக்க - மறை நாதனின் மைந்தனைப் போற்றிடும் வேளையில் , நாயன்மார் பக்தியும் ஊற்றெடுக்க!

கண்ணிடந்து அப்பிய கண்ணப்ப ரன்பும், கையாலே மாங்கனி ஈந்தவள் பண்பும், பண்ணிசைத் தேவாரப் பாவலர் மூவரும், பதம்பணிந்து அருணகிரி பாடிடும் வரிகளும்!

சேயவன் வேலுக்கும் ஈசனின் மழுவுக்கும் வேற்றுமை ஏதுமில்லை - மனம் தேயும் அடியவர் சிந்தையில் ஆடும் சிவசக்திப் புதல்வன் திருப்புகழ் பாடிட பவவினை யாவும் அற்றுப்போமே!

**திருப்புகழ் பாடும்போது நமக்கு ஒரு குறி இருக்க வேண்டும் பாடுவது என்பது குறி அல்ல.நமக்கு குறி முருகன்தான்.ஒரு குறி வைத்துக்கொண்டு அதிலேயே போனால் மனதின் கட்டுக்கள் அவிழும்.அமைதி கிடைக்கும்.அந்த குறியையும் முருகன் தான் அளிக்க வேண்டும்-Guruji**



.



## மரணப்ரமாதம் நமக்கு இல்லையாம்

**Murali Subramanian**

https://tinyurl.com/3r78w7ns 12

**"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்படோம்"** என்று தன் அச்சமற்ற நிலையை திருநாவுக்கரசர் தேவாரத்தில் தெளிவுபடுத்துகிறார். ஆனால் நாம் என்ன செய்கிறோம் ? மரணத்தை எண்ணி அஞ்சுகிறோம்.

மரணம் என்பது மனித வாழ்வின் மாபெரும் உண்மை. அதை எதிர்கொள்ள முடியாதபடி தவிக்கும் பயம்தான் மரணபயம் - மனிதனை ஆட்கொண்டிருக்கும் மாபெரும் அச்சம்என்று கூடச் சொல்லலாம் . ஆனால் அதற்காகக் கவலைப் பட வேண்டாம் . தேன் திருப்புகழை இயற்றிய அருணகிரிநாதர் இந்த மரணபயத்தை வெல்லும் வழிகளை அழகாக விளக்குகிறார். முருகப் பெருமானின் திருவருளே 'மரணபயத்தை நீக்கும் ஒரே மருந்து' என்பது அவரது திடமான நம்பிக்கை.

**"கரிய பெரிய எருமை கடவு, கடிய கொடிய திரிசூலன்"** –என்று மரணத்திற்கு அதிபதியான யமனை அருணகிரிநாதர் சித்தரிக்கிறார். கறுப்பு நிற பெரிய எருமை மீது ஏறி, கூர்மையான திரிசூலத்துடன் வரும்யமன். **"கறுவி யிறுகு கயிறொ டுயிர்கள் கழிய முடுகி"** – நம் காலம் முடியும் தருவாயில் வரும் காலன், இறுகிய கயிற்றால் உயிர்களைக் கட்டி இழுத்துச் செல்கிறான் இந்த பயங்கர சித்திரம் மரணத்தின் தவிர்க்க முடியாத கொடூரத்தை நம்மிடையே உணர்த்துகிறது.ஏன் கொடூரமாக சித்தரிக்கப் படுகிறது? அப்பொழுதாவது பயந்து நல்ல செயல்களைச் செய்யலாமே என்றுதான் !

**"திரியும் நரியும் எரியு முரிமை தெரிய விரவி யணுகாதே" -** நரிகளும் மிருகங்களும் உயிர் இல்லாத அழிந்த உடலைச் சுற்றிச் சுற்றி வருவதை நினைத்தாலே அச்சமாகத்தானே இருக்கிறது. இது மரணத்திற்குப் பிந்தைய கொடூரமான யதார்த்தத்தை காட்டுகிறது.

**"சாதலின் இன்னாதது இல்லை"** என்கிறார் திருவள்ளுவர்.

ஏன் மரணபயம் உண்டாகிறது ? ஏதாவது காரணங்கள் உள்ளனவா?

ஆம் ! மரணபயம் பல்வேறு காரணங்களால் உருவாகிறது:: **"ஆசையெ னும்படி யுந்த னங்களு மோகைந டந்திட வுந்தி னங்களும்"** – என்பதற்கு ஏற்ப ஆசை என்னும் படியும், தனங்களும், தொகைகளும் என்று உலகப் பற்றுகள் நம்மை பிணைக்கின்றன. இந்த பற்றுக்களே மரணத்தை ஒரு பெரிய இழப்பாகக் காட்டுகின்றன.இதையெல்லாம் விட்டு விட்டுப் போகப் போகிறோமே ! என்ற பயம் தான் .

**"பூசல்த ருங்கய லும்பொ ருந்திய வாசந றுங்குழ லுந்து லங்கிய பூரண கும்பமெ னுந்த னங்களு மடமாதர்** ” என்ற வரிக்கு ஏற்ப  பெண்கள் மீதான காம வேட்கை. **"போகம டங்கலை யும்பு ணர்ந்தநு ராகம்வி ளைந்துவ ரும்பெ ரும்பிழை"** - போகத்தின் மீதான பற்றும் பெரும் பிழையாக மாறுகிறது.

மயக்கம் என்பது ஒரு பேரிழிவை உண்டுபண்ணுகிறது. **"அறிவழிய மயல்பெருக**” என்ற திருப்புகழ் வரிகளுக்கேற்ப அறிவை  இழந்துவிட்டால் ? மயக்கம் பெருகும் மரண தருணத்தில்.  உண்டாகும்  குழப்ப நிலை,  பயத்தை மேலும் மேலும் அதிகரித்து நம் நிம்மதியையும்  குலைக்கிறது..

அருணகிரிநாதர் உலக இன்பங்களின் வீண் தன்மையை  நமக்குப் பல பாடல்களின் மூலம்   சுட்டிக்காட்டுகிறார்:

**"விறல்மார னைந்து மலர்வாளி சிந்த மிகவானி லிந்து வெயில்காய"** –என்ற திருச்செந்தூர் பாடல் மூலமாக  வலிமை மிக்க மன்மதனின் ஐந்து மலர் அம்புகள் பறந்து வந்து தைக்க , மிகுந்த வெப்பம் ஏற்படுகிறது. "**மிதவாடை வந்து தழல்போல வொன்ற வினைமாதர் தம்தம் வசைகூற" -** மெல்லிய காற்றாக இருந்தாலும் அது மேனியில்  நெருப்பு போல் எரிய , வினைகளையுடைய மாதர்கள் தம் தம்  வசைபாடுகிறார்கள்.

இந்த காம வேதனைகள், உலக இன்பங்கள் போன்ற இவைகள்  எல்லாம் நம்மை மரண பயத்தில் மேலும் சிக்க வைக்கின்றன. பொதுவானதும், தனித்ததும், முதலானதும், பகலும் இரவும் போய், நினைப்பும் , மறப்பும்  இல்லாது புகும் இடமானதும் ஆன வேதப்பொருள் - பரம்பொருளைக் குறிக்கிறது.

**"பொருள தாய்ப்பொருள் முடிவ தாய்ப்பெரு வெளிய தாய்ப்புதை வின்றி “** என்ற  திருப்புகழ் வரிகளில் (பொதுவதாய்)  அருணகிரிநாதர்.- எல்லாப் பொருள்களுக்கும் முடிவானதும், பெருவெளியானதும், புதைவு இல்லாததும் ஆன பரம்பொருளைப் பற்றிக் கூறுகிறார். இந்தப் பரம்பொருளை உணர்ந்தால் மட்டுமே  எவர் ஒருவருக்குமே மரணபயம் இல்லை  என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் அருணகிரிநாதர்.

**"கரணம் மாய்த்தெனை மரணம் மாற்றிய கருணை வார்த்தையி ருந்த வாறென்" -** புலன்களை வென்று, என்னை மரணத்திலிருந்து மாற்றிய கருணையை எப்படிச் சொல்வது என்று ஏங்குகிறார்.

ஒரு சமயம் திருவண்ணாமலை கோபுரத்து உச்சியிலிருந்து விழும்போது தன்னை முருகன் காப்பாற்றியதை நினைவு கூர்கிறார். இதில் இரண்டு பொருள்கள் உள்ளன. கரணம் என்பது குட்டிக் கரணம் . கோபுரத்திலிருந்து விழுந்தது. அடுத்து வருவது அந்தக் கரணங்கள் . இந்த இரண்டையுமே இறைவன் முருகன் அருணகிரிநாதர் வாழ்க்கையில் மாற்றியது ஜெகம் அறியும் ஒரு நிகழ்ச்சியாகும் .அதனால் முருகனின் திருவருளால் மரணத்தை வெல்ல முடியும் என்கிறார்.

உடல் சார்ந்த மரணத்தை மட்டும்முனிவர் குறிக்கவில்லை. மரண பயம், மரண சிந்தனை, மரண மயக்கம் - இவையெல்லாவற்றையும் வென்று ஆன்மீக விடுதலை பெறுதல் முக்கியம் என்பதை தெள்ளத் தெளிவாக நமக்கு உரைக்கிறார்.

**"உததி கூப்பிட நிருத ரார்ப்பெழ உலகு போற்றிட வெங்கலாப"** - கடல் ஆரவாரம் செய்ய , அரக்கர்கள் அலற, உலகம் போற்றிட வல்லமை நிறைந்த முருகன் இருக்க அவன் பக்தனுக்கு எதற்கு மரணபயம்?

**"ஆடிய பம்பர முன்சு ழன்றெதி ரோடிவி ழும்படி கண்ட தொன்றுற ஆவிய கன்றுவி டும்ப யங்கெட அருள்வாயே"** - நடனமாடும் பம்பரம் போல முன்னால் சுழன்று எதிரில் விழும்படியாகக் கண்ட ஒன்று உண்டாகும்போது, உயிர் கலங்கி விடும் பயம் கெட அருள வேண்டும் ,என்பதுதான் கருத்து. சம்சார சக்கரத்தின் அழகான உருவகம் என்று தெரிகிறது. வாழ்க்கை என்பது சுழன்று கொண்டே இருக்கும் ஒரு பம்பரம் . இதன் சாட்டை இறைவன் கையில் தான் இருக்கிறது. சுழல விடுபவனும் அவனே , அமைதி அடையச் செய்பவனும் அவனே.இதில் சிக்கிய உயிர்கள் பயத்தில் உழல்கின்றன. இந்த சுழலிலிருந்து விடுபட முருகனின் அருள் வேண்டும்.அவன் அருள் இன்றி எதுவும் நடக்காது.

**"போயக லும்படி யொன்றை யன்புற நினையாதே"** என்ற வரிகளை புகுத்தி - இவையெல்லாம் போய் அகலும்படி ஒன்றையும் அன்பு கொண்டு நினையாதே என்கிறார் அருணகிரிநாதர். உலகப் பொருள்கள், உறவுகள், இன்பங்கள் - இவையெல்லாம் நிலையற்றவை. இவற்றின் மீது ஆழமான பற்று வைக்காதே என்று நமக்கு போதனை செய்கிறார்

**"வேடையெ னும்படி சிந்தை நொந்திட அடைவாகவே**" - வேட்டையாடுவது போல மனம் நொந்திட, அடைய வேண்டும். ஆமாம் ! எதை அடைய வேண்டும்? முருகனின் திருவடியை..

**"காலன் எனை அணுகாமல் உனதிரு காலில் வழிபட அருள்வாயே**" என்று 'பாதிமதி நதி போது மணிசடைநாதர் அருளிய குமரேசனை' வணங்கினால் மரணபயமேது?

கலிகாலன் , தன்மராச தூதன் , திரிசூலன் , நடுவன், சமன் , கூற்றுவன் , மறலி , காலன் ,தண்டன் , கூற்றுவன் என்றெல்லாம் அழைக்கப்படும் எமனுடைய **“காலனார் வெங்கொடும் தூதர் பாசம் கொடென் காலினார் தந்துடன் கொடுபோக” ”பாசமுமே கொடு சினத்து வந்து எதிர் சூலமுமே கையில் எடுத்தெறிந்து அழல்வாய் விடவே பயமுறவேதான், இழுக்கவந்திடு தூதர்கள் ஆனவர் பிடிக்கும் முன்பு** “நாம் என்ன செய்ய வேண்டும்? முருகன் தாள் மலராகிய இணைப்பதத்தை நாட வேண்டும் .

**“இறுக்கிப் பிடித்துக் கட்டி உதைத்துத் துடிக்கப் பற்றி இழுத்துத் துவைத்து சுற்றி எமதூதர் எனக்குக் கணக்குக் கட்டு விரித்துத் தொகைக்குட்பட்ட இலக்கப்படிக்குத் தக்கபடியேதான் முறுக்கி திருப்பிச் சுட்டு மலத்தில்**

**புகட்டித் திட்டி குழுக்கக் கலக்கப் படுமாறு “** ” நமனுடைய தூதர் ---- கருவியதனால் எறிந்து சதைகள் தனையே அரிந்து கரிய புனலே சொரிந்து விடவே தான் கழுமுனையிலே இரென்று விடும் அந்த நாள் ” நமக்கு வராது. ஏனென்றால் , **“அழலின் கண் வெந்து சிந்திட ஆவி அழியா முன் வினையொன்றுமின்றி நன்றியல் ஒன்றி நின் பதம் வினவென்று அன்பு தந்தருள்வாயே “** என்று குருஜி கற்றுக் கொடுத்தபடி இசைவழிபாடுகளில் பாடியிருப்போமே!

முருகன் வள்ளியை மணந்த கதையை , ஆழமான ஆன்மீகப் பாடம் ஒன்றைச் சொல்கிறது. முருகன் – கடவுளாக இருந்தாலும் - காதலின் வேதனையை அனுபவித்தார். ஆனால் இறுதியில் அதை வெற்றி கொண்டார். சரி! இது நமக்கு சுட்டிக் காட்டுவது என்ன?

யாருமே உலக அனுபவங்களை வெறுக்க வேண்டாம், காமம், கோபம், பயம், துன்பம் - இவையெல்லாம் மனிதனுக்கு இயற்கையாக வரும் அனுபவங்கள்தான். இவற்றை அனுபவித்து, அவற்றிலிருந்து பலவகைகளைக் கற்று, அவற்றைக் கடந்து செல்ல வேண்டும். அப்போதுதான் முக்தி கிடைக்கும் என்பதை வலியுறுத்துகிறார் அருணகிரிநாதப் பெருமான் .

சூரபத்மன் உள்ளிட்ட அசுரர்களையே எளிதாக வென்ற முருகன், மரணத்தையும் வெல்ல வல்லவன் என்று நமக்கு ஒருவாறு புரிகிறது. அவனைச் சரணடைந்துவிட்டால், மரணபயம் என்பது எப்போதுமே இல்லை.

மரணபயம் அற்றவர்களிடத்தில் இயமனுக்கு வேலை இல்லை. என்ன காரணம்,? அவர்கள் இறைவனைத் துணையாகப் பெற்று உள்ளார்கள். **"மரணப் ப்ரமாதம் நமக்கு இல்லை, ஆம். என்றும் வாய்த்த துணை கிரணக் கலாபியும் வேலும் உண்டே"** என்கிறார் அருணகிரிநாதப் பெருமான்.

**தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்**

**திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்**

**தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்**

**கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.** ... என்று ஒரு கந்தர் அலங்காரத்தில் தைரியமாகக் கூறுகிறார்.

**சலங்காணும் வேந்தர்தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்**

**துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்**

**கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்**

**அலங்கார நூற்று ளொருகவிதான்கற் றறிந்தவரே**—என்று நம்மை முருகன் துதியை கற்றுக் கொள்ளச் சொல்கிறார் முனிவர்,

**"செறிவு மறிவு முறவு மனைய திகழு மடிகள் தரவேணும்"** - உறுதியும், ஞானமும், துறவு மனப்பான்மையும் பெற்ற திருவடிகளை தர வேண்டும் என்று அருணகிரிநாதர் இறைஞ்சுகிறார்.

மரணத்தை எதிர்கொள்ளும் துணிவும்  வாழ்வின் உண்மையை ஏற்றுக்கொள்ளும் வலிமையும் வேண்டும் . ஞானத்தின் பங்கும் இதில் இருக்கிறது ஆத்மா அழிவற்றது, நாம் பரம்பொருளின் அம்சம் என்ற உணர்வு எப்பொழுதும் நிலைத்து நிற்க வேண்டும்.

உலகப் பொருள்கள், இன்பங்கள் போன்றவைகளின் மீதான பற்று இல்லாமை போன்ற துறவு மனப்பான்மையும் நம்மிடையே இருத்தல் வேண்டும்.

இந்த மூன்றும் கிடைத்து விட்டால், மரணபயம் தானாகவே நீங்கிவிடும்.

இயமன் எந்த சமயத்திலும் நம்மை அழைத்துக் கொண்டு போக வருவான் என்பது திண்ணம் . ஆனால் . அது எந்த சமயம் என்றுதான்  நமக்குத் தெரியாது. ஏனென்றால் தருமராஜன் முன்னதாகவே எவரிடமும் எச்சரிக்கை செய்துவிட்டு வருகிறவன் அல்ல.

**"இப்பவோ, பின்னையோ, மத்யமகாலத்திலோ,**

**இரவிபடும் நேரம் அதிலோ,**

**இரவிலோ, பகலிலோ, உதய காலத்திலோ,**

**எந்த எந்த நேரம் அதிலோ,**

**அப்பிலோ, தீயிலோ, நாயிலோ, பேயிலோ,**

**அரவிலோ, இடி அதனிலோ,**

**ஆறாத புண்ணிலோ, அடர் நோவு தன்னிலோ,**

**ஆயுத வகைகள் எதிலோ,**

**செப்ப அரிய வீட்டிலோ, மேட்டிலோ, காட்டிலோ,**

**தெருவிலோ, திண்ணை தனிலோ,**

**செகம் அதனில் எந்தெந்த இடம் அதனிலோ**

**சீவன் விடுக்கின்ற நேரம்.**

**எப்போது ஆகிலும் கூற்றுவன் வருவான்,**

**அப்போது அந்தக் கூற்றுவன்,தன்னைப்**

**போற்றினும் போகான், பொருளொடும் போகான்,**

**சாற்றவும் போகான், தமரொடும் போகான்,**

**நல்லார் என்னான், நல்குரவு அறியான்,**

**தீயார் என்னான், செல்வர் என்று உன்னான்,**

**தரியான் ஒருகணம், தறுகணாளன்,**

**உயிர்கொடு போவான், உடல் கொடு போகான்".**------"கபிலர் அகவல்"

எவ்வளவு அழகான வரிகள்.

திருஞானசம்பந்தப் பெருமான் சொல்கிறார் - நீ நாள்தோறும் இறைவனை நினைப்பாயாக என்று !

**"நீ நாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய்,யார் அறிவார்**

**சாநாளும் வாழ்நாளும்?சாய்க்காட்டு எம் பெருமாற்கே**

**பூநாளும் தலைசுமப்ப,புகழ்நாமம் செவிகேட்ப,**

**நாநாளும் நவின்று ஏத்தப் பெறலாமே நல்வினையே".---**

எவ்வளவு உண்மையான வார்த்தைகள்.

**"தறுகணன் மறலி முறுகிய கயிறு தலைகொடு விசிறீக் கொடுபோகும்" –** அதாவது காலனின் இறுகிய கயிற்றை தலையோடு வீசி எறிந்து கொண்டு போகச் செய்யும். ஆனால் முருகனின் அருளால் யமனின் கயிற்றையே விலக்கி விடலாம் என்பது தெரிகிறது.

தறுகணன் மறலி முறுகு கயிறு தலையை வளைய எறியும் வரை காத்துக் கொண்டு இருக்காமல்,

இப்போதிலிருந்தே முருகனை நினைந்து , பாடவேணும் ! ----

**அபிராமி பட்டரும் இதையே தான் கூறுகிறார்.**

**"வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்**

**செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே**

**அவ்வியம் தீர்த்து என்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து-**

**வெவ்விய காலன் என்மேல் வரும்போது-வெளி நிற்கவே"** என்று கூறுகிறார்.

மரணம் என்ற நிகழ்ச்சி தவிர்க்க முடியாதது என்று யாவரும் அறிந்ததுதான் .ஆனால் மரணபயம் தவிர்க்கக்கூடியது தானே! . முருகனின் பக்தனுக்கு மரணத்தை நினைத்தால் பயம் வராது.

**"சளமது தவிர அளவிடு சுருதி தலைகொடு பலசாத் திரமோதி" -** மாசு நீங்கிட வேதங்களையும் சாஸ்திரங்களையும் ஓதி. ஞானம் பெற்றவனுக்கு மரணபயம் இல்லை என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

**"வகைதனைம றந்தெ ழுந்து முலைதனைய ருந்தி யந்த மதலையென வந்து குன்றின் வடிவாகி"** - வேறுபாடுகளை மறந்து எழுந்து, தாயின் பாலை அருந்திய குழந்தையாக வந்து மலையின் வடிவம் எடுத்தவன் முருகன்.

குழந்தைக்கு மரணபயம் கிடையாது. தாயின் மடியில் முழு நம்பிக்கையுடன்அது இருக்கிறது. அதேபோல், இறைவனின் மடியில் நாம் இருப்பதை உணர்ந்தால், மரணபயம், தானே நீங்கிவிடும்.

பக்தி ,ஞானம், துறவு மனப்பான்மை, இறைவனின் திருவடியை சரணடைதல் ,நல்வினைகள் ,தூய்மை இவைகளைப் பின்பற்றினால் அறியாமையினால் உண்டாகும் மரண பயமேது?

பரம்பொருளை உணர்ந்து , ஆத்மா அழிவற்றது என்பதை அறிந்தால், மரணம் ஒரு மாற்றம் மட்டுமே என்ற கருத்து தெள்ளத் தெளிவாகப் புரிந்துவிடும்.

முருகப் பெருமானை சரணடைவது, அவனது திருவடிகளை வேண்டுவது, அவனது அருளைப் பெறுவது போன்றவைகளே மரணபயத்திலிருந்து விடுபடும் வழியாகும். வேலும் ,மயிலும் கொண்ட முருகன், வீரமும் ,அழகும் கொண்டு நம் அறியாமையை நீக்கி , பயத்தை போக்குகிறார்.

பழநி மலையில் எல்லாவற்றையும் துறந்து நின்ற முருகன், பற்றின்மையின் சிகரமாகத் திகழ்கிறான். வள்ளியை மணந்த முருகன், தெய்வீகக் காதலின் உருவம். சூரனை வென்ற முருகன், வெற்றியின் வடிவம். இப்படிப் பலவாக நிற்கும் முருகனின் பக்தனுக்கு மரணபயம் சிறிதும் இல்லை.

மரணம் ஒரு முடிவல்ல, மாற்றம்தான் . கம்பளிப்புழு எப்படி வண்ணத்துப் பூச்சியாகிறதோ அது போல, நாமும் இந்த உடலை விட்டு விடுபட்டு, நம் உண்மை சொரூபத்தில் ஒளிர்வோம். முருகனின் அருளால் யமனின் கயிற்றை வீசி எறியலாம். மரணபயம் நீங்கும். ஆனந்தம் பெருகும்.

கவலை வேண்டாம் ! இக , பர சுகத்தை அளித்து ,முந்தைப் பழ வினைகளை முற்றிலும் தன் வேல் கொண்டு அழிப்பவன் முருகன்.

**"அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன் கவியையன்பால்**

**எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன**

**விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்**

**கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே"--கந்தரலங்காரம்**

எமன் வந்து பாசக் கயிற்றால் கழுத்தை இழுக்கும் வரை காத்திருக்காமல் இப்போதே முருகன் பெயரைச் சொல்லி வணங்குவது தான் சரியான வழி! அதுவும் எப்படி வணங்க வேண்டும் தெரியுமா? பிழையின்றி திருப்புகழ் கற்று வணங்க வேண்டும் என அறிவுரை சொல்கிறார் அருணகிரிநாதர்.

பிழையின்றி திருப்புகழ் கற்கவும், அதை சரியான லயம் (சரியான கால அளவு), ஸ்ருதி (சுருதி), ஸ்தாயி (சுருதி நிலைகள்), ஸ்வரங்களின் தெளிவு, கமகம் (இசை நுணுக்கங்கள்), ஆலாபனை, ஆரோகணம்-அவரோகணம், குரல் வளம், உணர்ச்சி வெளிப்பாடு போன்ற பல அம்சங்களுடன் நன்கு பாடவும் நம் குருஜி திரு ஏ.எஸ். இராகவன் துணை இருக்கும் போது நமக்கு என்ன கவலை?குருஜியை நினைவில் கொண்டு முருகனை துதிக்க திருப்புகழ் பாடுவோம்!

**முருகா குமரா ஷண்முகா வேலாயுதா என்று உள்ளத்தை அந்த நாமத்தில் கரைத்து மொழி தடுமாறி அழுது அழுது ஆண்டவன் புகழ் பாடி அந்த ஒரு சொட்டு கண்ணீரால் அவன் திருப்பாதங்களை நனைத்தால் அதுதான் அவனுக்கு பெரி முழுக்காடு.அதுவே உண்மையான ஒரு அபிஷேகம் .**





# திருப்புகழ் நூலின் பெயர் காரணம்

**Sundara Rajan**

https://tinyurl.com/2txeb9ms-13

திருப்புகழ் என்றால் என்ன? திருப்புகழ் என்றால் தெய்வப் புகழ்ப்பாட்டு. தேவாரம் என்றால் தெய்வத்தைப் புகழ்ந்த இசைப்பாடல். அதுபோல் ஆண்டவனின் புகழ்பாடும் ஒரு துதிதான் 'திருப்புகழ்'. 'தேவாரம்'-- என்பது ஒரு நூலின் பெயர். ஆனால் திருப்புகழைப் பொறுத்தவரை நூலின் பெயர் திருப்புகழாய் அமைந்திருப்பதோடு மட்டுமன்றி, நூலில் அமைந்துள்ள 1331 பாடல்கள் ஒவ்வொன்றுமே திருப்புகழ் என்றே வழங்கப்படுவது இந்நூலின் சிறப்பாகும். எப்படி அந்த சிறப்பு வந்தது? 'திரு' என்றால் அழகு, ஐஸ்வர்யம் என்று பொருள். அழகனாகிய, ஐஸ்வர்யம் தருகின்ற முருகனை புகழ்வதால், 'திருப்புகழ்' என்று பெயர் உண்டானது எனக் கூறலாம். தெய்வத்தின் புகழைப் பாடும் எந்தப் பாடலுக்கும் அது பொருந்த வேண்டுமல்லவா? ஆனாலும் அருணகிரிநாதரின் பாடல் தொகுப்பு மட்டுமே 'திருப்புகழ்' என்ற பெயர் தாங்கி விளங்குவது, ஒருவிதத்தில் அதன் தனிச் சிறப்பைக் காட்டுகிறது. அருணகிரிநாதரே தனது நூலுக்கு அப்படி ஒரு பெயர் கொடுத்தாரா என்றால் , 'இல்லை' என்றே சொல்ல வேண்டும். பாடல்கள் 1331ம் ஒரே நாளிலோ, ஒரே சமயத்திலோ தொடர்ந்து பாடியவை அல்ல அல்லவா?

திருவண்ணாமலை கோபுரத்திலிருந்து குதித்தவரை, தடுத்தாண்டுகொண்டு 'என்னை பாடு' என்று சொல்ல, 'எப்படிப் பாடுவேன்?' என திகைக்க, 'முத்தைத்தரு' என அடியெடுத்துக் கொடுக்க, பின் அருணகிரி ஸ்வாமிகள் பாடியது நமக்கு எல்லாம் தெரிந்த கதை. பாடியபின் மவுனமாகிவிட்டார். 'என்ன இது? 'நாம் பாடச்சொன்னால் இப்படி மவுனமாகி விட்டானே!' எனக் கருதிய முருகப் பெருமான் ,அவர் கனவில் தோன்றி, "வயலூருக்கு வா!" என அழைத்து, "எனது மயிலையும், வேலையும், சேவலையும், மாலை அணிந்த தோள்களையும், தெய்வ யானையையும், வள்ளிநாயகியையும், சதங்கை அணிந்த திருவடிகளையும் வைத்துப் பாடு" எனக் கூறினார். அவன் அருளால் அவரும், சித்ர கவித்துவ மிக்கப் பாடல்களை இயற்றி, உலகில் பரவச் செய்தார்.

அவர் பாடல்களிலேயே 'திருப்புகழ்' என்ற சொற்ப்ரயோகம் வந்திருப்பதை நாம் கவனித்திருப்போம். அருணகிரிநாதர் பாடல் தொகுப்புக்கு யாரால் திருப்புகழ் என்று பெயர் சூட்டப்பட்டது? அவரே அவ்வித தலைப்பை கொடுத்தாரா? அவருக்குப்பின் வேறு ஒருவரால் 'திருப்புகழ்' எனப்பெயரிடப்பட்டதா? என்ற கேள்விகள் எழலாம் .

இதற்கு விடை அளிப்பதற்குமுன், இந்தத் திருப்புகழ் என்ற பெயர் இந்நூலில் எங்கெல்லாம் வருகிறது எனப் பார்ப்போம்.

திருப்புகழ் விருப்பமொடு செப்பு என எனக்கருள்கை மறவேனே --- பக்கரை

**திருப்புகழை** உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப் பகைமை

செயித்தருளும் இசைப் பிரிய --- கருப்புவிலில்

இருப்பு அவல் **திருப்புகழ்** விருப்பொடு படிப்பவர் --- இருப்பவல்

பழிப்பவர் தமக்கும் **திருப்புகழ்** நெருப்பு என்று அறிவோம் யாம் -சினத்தவர்

**திருப்புகழ்** ஓதும் கருத்தினர் சேரும் --- வினைக்கின

**திருப்புகழை** ஓதற்கு எனக்கு அருள்வோனே --- சரியையா

சித்ர கவித்துவ சத்தம் மிகுத்த **திருப்புகழை** --- பத்தர் கணப்ரிய

உன கமல பத(ம்) நாடி உருகி உ(ள்)ளத்து அமுது ஊற உனது

**திருப்புகழ்** ஓத --- பழியுறு சட்டகமான

மெய் **திருப்புகழ்** பெறு வயலூரா ---- ஆசார வீன

யான் ஆக நாம(ம்) அற்புத **திருப்புகழ்** தேன் ஊற ஓதி --- ஆனாத ஞான புத்தி

சிவமார் **திருப்புகழை** எனு நாவினில் புகழ --- வலிவாத

**திகழ்புகழ்** கற்றுச் சொற்கள் பயிற்றி --- தலைமயிர்

ஓதுகின்ற **திருப்புகழ்** நித்தம் பாடும் அன்பு --- கோல குங்கும

குறித்த நல் **திருப்புகழ்** ப்ரபுத்துவ கவித்துவ குருத்துவத்து --இலைச்சுருட்

**திருப்புகழ்** விளம்பு என் முன் அற்புதமெழுந்தருள் குக --- இதமுறு

படிப்பன **திருப்புகழ்** எடுப்பன முடிப்பன --- துடித்தெதிர்

அருணை நாடதில் ஓது **திருப்புகழ்** தணிய வோகையில் -மருவுலாவிடு

மருவு **திருப்புகழ்** அருள எனக்கு இனி அருள்வாயே -குருவி எனபலகழுகு

உனைப் பல நாளும் **திருப்புகழாலும்** உரைத்திடுவார் -எனக்கெனயாவும்

பலகாலு முனைத்தொழுவோர்கள் மறவாமல் **திருப்புகழ்** கூறி படிமீது துதித்துடன்
வாழ அருள்வேளே --– நிலையாத சமுத்திரமான

பத்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மா**திருப்புகழ்**பாடி - பத்தியால்

மெய்ப்பொருள் **திருப்புகழ்க்கு** உயிர்ப்பு அளித்து --- கடற்செகத் தடக்கி

மருவு **திருப்புகழ்** அருள எனக்கு இனி அருள்வாயே --- குருவி எனப்பல

செய்ப்பதித் தலத்தினைத் துதித்து உனைத் **திருப்புகழ்**
பகர்வேனோ --- அருக்கி மெத்தெனச் சிரித்து

அருள் **திருப்புகழ்** ஓதுக வேல் மயில் அருள்வோனே --- மலைகனத்தென

**திருப்புகழை** உற்றுத் துதிக்கும் வகை அபரிமித சிவ அறிவு சிக்குற்று –

-இகல்கடின முகபட

**திருப்புகழ்** கற்கவும் ஓதவும் முத்தமிழ் தத்துவ ஞானம்
எனக்கு அருள் புரிவாயே --- முத்தமு லாவு தனத்தியர்

தட்டு அழியாது **திருப்புகழ்** கற்கவும் ஓதவும் --முத்தம்உலாவு

படிப்பன **திருப்புகழ்** எடுப்பன முடிப்பன --- துடித்து எதிர் வடித்து

'திருப்புகழ்' என்ற சொல்லுக்கு அடைமொழியாக வைத்து அழைக்கும் சில சொற்கள்: **அற்புதத்** திருப்புகழ், **மா** திருப்புகழ், **சிவமார்** திருப்புகழ், **அரிய பெரிய** திருப்புகழ், **அருட்** திருப்புகழ், **சித்ரகவித்துவ சத்த மிகுத்த** திருப்புகழ், **இருப்பவல்** திருப்புகழ், **மெய்** திருப்புகழ், **உயர்** திருப்புகழ்**.**

அருணகிரிநாதரே தன் பாடல்களில் திருப்புகழ் என்று குறிப்பிட்டிருப்பதால் பிற்காலத்தில் வந்த கவிஞர்கள் அவரது பாடல்களை திருப்புகழ் என குறிப்பிட ஆரம்பித்து விட்டார்களோ? உதாரணமாக, மார்க்க சகாய தேவர் திருவிரிஞ்சை பிள்ளைத் தமிழில்,

"எம் அருணகிரிநாதர் ஓது பதினாறாயிரம் திருப்புகழ் அமுதுமே" என்றார். 'அருணகிரிநாதர் பதினாறாயிரம் என உரை செய் திருப்புகழை' என்றும், 'சந்நிதி அருணகிரி நாதன் திருப்புகழை' என்றும், 'திருப்புகழான அருணகிரி நாதன் புகழ்ந்த பல மாலையும்' எனவும், 'எம் அருணகிரிநாதர் ஓதும் பதினாறாயிரம் திருப்புகழ் அமுதமே' எனவும் ,'எமையாள் அருணகிரிநாதர் ஓதும் திருப்புகழ் என்னும் ஆங்கார மணிமார்பன்' எனவும், "அருணகிரி நாதன் .... உரைபுகலும் தெய்வத் திருப்புகழ்", எனவும் , 'பாலா குறுமுனியார்க்கும் திருப்புகழ்ப் பண்ணவர்க்கும் (முருகர் அந்தாதி) என்றும், 'நாட்டில் அருணகிரிநாதன் திருப்புகழ் சொல் பாட்டின் மகிழ்ந்து படிக்காக அளித்த பிரான்' என்றும், 'எமை ஆள் அருணகிரிநாதர் ஓதுந் திருப்புகழ்' என்றும், 'திருப்புகழ் எனா அருணகிரி நாதன் புகழ்ந்த பல மாலையும் '( அந்தகக்கவி வீரராகவ முதலியார்) எனவும், 'அற்புத மிகப்புகழ் திருப்புகழ் விருப்பொடு சொல்' எனவும்,' மதுரம் கனிந்த திருப்புகழ்ப்பா மாலை புனைந்தான் வருகவே' என்றும் அருணகிரியின் பாடல்களை 'திருப்புகழ்' என்றே குறிப்பிடத் தொடங்கினர். யார் முதலில் சொன்னார் என்பதை எப்படி நிர்ணயிப்பது?அருணகிரிநாதர் காலத்திற்கு முன்பே திருப்புகழ் என்ற சொல் வழக்கத்தில் இருந்திருக்கிறது.

கந்த புராணத்தில் , 'பிறவுள விதியுஞ் செய்து பிரான் திருப்புகழ் வினாவி' என வந்துள்ளது. குல சேகர ஆழ்வார், அரங்கத்துப் பெருமானைப் பாடும் போது, "குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி" என வந்திருப்பது நோக்கத்தக்கது. சுந்தரர் தன் பாடலில், 'திருமுல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன்.....' என்று பாடி,' திருப்புகழைப் பல தலங்ககள் சென்று பாடிய அடியவன்' என குறிப்பிடுகிறார். திருப்புகழ் என்றாலே இறைவன் புகழ் என்று பொருள்பட அமைந்து விட்டது.

பின்னால் கால வழக்கில், தொங்கலுடன் பாடப்படும் வண்ணப் பாடல்கள் யாவுமே 'திருப்புகழ்' என்று குறிப்பிடப்பட்டு வரத் தொடங்கின. உதாரணம்: 'பஞ்சரத்னத் திருப்புகழ்', 'பெரிய திருப்புகழ்' , 'ராமானுஜதாசர் நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ்' முதலிய திரட்டுகள்.. இருந்தாலும், அருணகிரி நாதர் பாடல்களே 'திருப்புகழ்' என வழங்கப்படுகிறது.

எவர் முதலில் சொல்ல ஆரம்பித்தார்கள் என திட்ட வட்டமாகக் கூற முடியாவிட்டாலும் அருணகிரிஸ்வாமிகள் பாடின ஒரு பாடலிலேயே இதற்கான ஒரு ஆதாரம் இருக்கின்றது.

எவருமே "கைத்தல" பாடல்தான் முதல் பாட்டு எனக் கருதினாலும் ஆராய்ச்சியாளர் கூறுவது என்னவென்றால் , 'பக்கரை விசித்திரமணி'தான் அவர் பாடிய முதல் பாடல் என்று.

"எனது மயிலையும், வேலையும், மாலை அணிந்த தோள்களையும், தெய்வ யானையையும் வள்ளிநாயகியையும், சதங்கை அணிந்த திருவடிகளையும் வைத்துப் பாடு" என்ற கந்தனின் ஆணைப்படி மயில், வேல், மலர்மாலை, சேவல், தெய்வயானை, வள்ளி, திருவடிகளை வைத்து முதல் பாடலை கணபதி துதியாக அமைத்து அதிலேயே,

முருகனுடைய மயில் - **பக்கரை விசித்ர மணி பொற்கலணை இட்ட நடை பட்சி எனும் உக்ர துரகம்**, மலர்மாலை - **நீபப் பக்குவ மலர்த் தொடை** வேல் - **அக் குவடு பட்டு ஒழிய பட்டு உருவ விட்டு அருள் கை வடிவேல்** சேவல் - **திக்கு அது மதிக்க வரும் குக்குடம்** முருகனுடைய திருவடி - **ரக்ஷை தரு சிற்றடி** பன்னிரு தோள் - **முற்றிய பன்னிரு தோள்** முருகனுடைய திருப்பதி - **செய்ப்பதி வைத்து உயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பு என எனக்கு அருள்கை மறவேனே** .என 'பக்கரை விசித்திரமணி' பாடலை வயலூரில் உள்ள பொய்யா கணபதி முன் பாடினார். முருகன் குறிப்பிட்ட அனைத்தையுமே அமைத்துப் பாடிவிட்டார். தாம் பாடுவது திருப்புகழ் என்று பெயரையும் குறிப்பிட்டுவிட்டார். அவர் இந்த அமைப்பில் பாடிய பதினாறாயிரம் பாடல்களும் 'திருப்புகழ்' என்ற பெயரைப் பெற்றன.

'திருப்புகழ்' நூலுக்கு அதிகாரபூர்வமாகப் பாடப்பட்ட முதற்பாடல்--- வயலூர் விநாயகரைத் துதித்து முருகனின் சிறப்பம்சங்களை அமைத்து , முருகன் ஆணையிட்டது போலப் பாடிய 'பக்கரை விசித்ரமணி' திருப்புகழ் பாடல்தான். அந்தப் பாடலில்தான் கணபதியை 'வித்தக மருப்புடைய பெருமாளே!' என விளித்து, 'உயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பென எனக்கு அருள் கை மறவேனே' என்கிறார். எதைக் கூற அருள் வேண்டுகிறார்? "திருப்புகழை". ஒப்புதல் அளித்தவர் யார்? அந்த **பொய்யா கணபதி**. அதனால் அருணகிரியின் பாடல்களுக்குத் 'திருப்புகழ்' என்ற பெயர் அளித்தது வயலூர்ப் பொய்யா கணபதியேதான்!



## Guruji A S.Raghavan is Thiruppugazh way of life

**Nalini Muruganandam**



It is with a profound sense of humility and a heavy awareness of my own limitations that I pen these words about our revered Guruji A.S. Raghavan. To write about such a towering spiritual figure who showed countless souls the Thiruppugazh way of life demands a level of spiritual maturity and eloquence that I frankly do not possess. This article is less a formal biography and more a humble offering, a reflection on the mighty work he accomplished.

Guruji was born to a devout couple Subbhaiya Shastrigal and Rama Lakshmi in a town called Arumugamangalam. He was named Veera Raghavan. He was afflicted by polio when young and his parents prayed fervently to Lord Subramanya in Tiruchendur. Lord Muruga who is the supreme God head in all the universe and beyond enslaved him just as he had done to Sri Adi Shankarar, Kumara Gurubarar and countless others. The child walked, or rather ran on the shores of Tiruchendur, impelled by the vast divine plans set out for his future.

He learnt music under Sri Vaidyanatha Bhagavadhar. He married Janaki Ammal and his career took him to Delhi. Having mastered the art of music perfectly he was encouraged to put the talent to use by his friends Eshwara Iyer and Narayana from All India radio. Guided by intuition he chose to put the Thiruppugazh songs to music, a contribution that has been for posterity.

Thiruppugazh meaning "Divine Glory" in Tamil is a renowned anthology of devotional songs composed by the 15th century Saint Arunagirinadhar. Its greatness lies in its acute blend of literary excellence, complex musical rhythms, deep philosophical wisdom and intense devotion to Lord Muruga. Celebrated for its poetic structure, alliteration, pun, over a thousand unique Chandams or musical patterns, it reflects the eternal wisdom of the Vedas and Upanishads explaining the absolute truth in a simple manner accessible to everyone.

Guruji started teaching Thiruppugazh songs from his home in Delhi. Because music expressed and gave life to the great Thiruppugazh, it deeply touched everyone's heart. Many who learnt directly from him went on to become teachers themselves.

Participating in a thiruppugazh bhajan led by guruji was an immersive and purging experience. Guruji practiced strong self discipline. He wouldn't even drink a drop of water before and during the

bhajan, desiring to be all the more qualified to give the uplifting Vibhuthi Prasadam at the end. There was pin drop silence in a packed hall. Everyone shared a common ground, and an equitable position. He has remarked, " We are all Valli; Lord Muruga alone is Paramathma." Vinayagar prarthanai, Guru vanakkam, Arupadai veedugal, kundru thoradal, pancha bodhas stalangal, Anubhuti, Virutham, Vaguppu, Poojai and prarthanai all soulfully rendered in succession. Often, while singing Alangaram, he would choke with emotion, melting and totally dissolving in the import of the Thiruppugazh's words. What an awe inspiring experience.! It was a higher level of consciousness. After the Shanti mantram Guruji would ask us not to disturb the inner silence /peace, for he wanted us to dwell in that essence, the one reality that we focussed on for 4 to 5 hours.

He took us into that highest level of meditative absorption.There is sheer wonder at the herculean task...; that of setting music to each song that Guruji has completed. The concentration and sensitive insight required to select a particular ragam for each song are striking and breathtaking, as the chosen ragam befittingly brings the song's core meaning to the fore. Guruji has used an awe inspiring 111 ragams in all.

A thought crosses our mind that the Saint Arunagirinadhar himself would have sung the song in this ragam before the Lord. Every song could be highlighted for its speciality and voice modulation but will give two to three examples:

- In "*karivaambari* " song,
- '*Gana paandavar ther thanile ezhu pari thoondiya* ........' is sung just like the tempo of a horse drawn chariot.
- In the song, "*Uraiththa sambrama*......", the first two words are sung full of youthful energy and grandeur, while the tone is subdued in the next two words '*vadivu thirangi*'....
- Again, in the song "*Suththiya narappudan*", the words "*eththanai pirappaiyum, irappaiyum yeduththu ulagil manguveno*...." Is sung dragging the words to denote weariness and frustration of this continuous birth and death cycle.

It is said that in Pazhani, a peacock once danced while he sang, but he would humbly say, "I don't sing; Lord Muruga alone makes me sing." He asked us to practice love and non hatred (Anbu and Avirodham). Undoubtedly, love and non hatred are the foundation, the sacred prerequisites for spiritual ascent. Guruji enabled even those like me, illiterate in the Tamil script and formal music, to sing.

He sang and taught not only thiruppugazh , on Arumuga Sivam, but also Abhirami Andadi and Abhirami Padhigam on Ambal. He asked us to read Kandar Anubhuti everyday. Now, every region, organises bhajans on Shasti, Kirthigai, Vishagam, moolam every month, apart from the big bhajans such as Padi vizha, Panguni Uththiram, Maha kanda sashti, Aani moolam Arunagirinadhar vizha, Thai poosam, etc.

